விலை ரூபா 2-00 16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஆனி 17 ஷவ்வால் 1 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (1—7—84) இதழ் 137

## அடைக்கலம் கோருகின்றனர்!

(திருச்சி)

தமிழ்நாட்டிலே தமக்குத் தொடர்ந்தும் அடைக்கலம் தரவேண்டுமென்று கோரி இலங்கையிலிருந்து சென்று தமிழகத்தில் இப்போது வதியும் சுமார் 200 அகதிகள் நேற்றுத் திருச்சியில் ஊர்வலமொன்றை நடாத்தினர்கள். தமது கோரிக்கையைத் திருச்சியில் உள்ள கலக்டரிடம் ஊர்வல இறுதியில் சமர்ப்பித்தனர்.

இலங்கை தமிழர் பிரச்னை

# இறுதி அரசியல் தீர்வுக்கு இந்திரா காந்தி வற்புறுத்துவார்

## இன்று ஜே. ஆருடன் முதல் சுற்றுபேச்சு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்னையில் இறுதியானதும் உறுதியானதுமான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படவேண்டுமென்பதை இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் வற்புறுத்துவார்.

மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று புதுடில்லி வந்துசேர்ந்த ஜனதிபதி ஜெயவர்த்தன, இந்தியப்பிரதமர் இந்திராவுடன் முதல் சுற்று பேச்சுவார்த்தையை இன்று ஆரம்பிக்கிறர். நாளை அடுத்த சுற்றுப்பேச்சுவார்த்தை நடக்கும். இலங்கைத்தமிழர் பிரச்னையே முக்கிய இடம் வகிக்கும்.

தமிழ் நாட்டிலுள்ள தமிழ் தீவிரவாதிகளுக்கு வழங்கப்படும் உதவியை நிறுத்த வேண்டுமென்று இந்திராவிடம் ஜெயவர்த்தன வற்புறுத்துவார்.

இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று காலை புதுடில்லி வந்துசேர்ந்தார்.

இலங்கை ஜனதிபதியை விமானநிலையத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, ஜனதிபதி திரு ஜானி ஸெயில்சிங், வெளிநாட்ட

(16-ம் பக்கம் பார்க்க)

## ✱ நாளை அங்குரார்ப்பணம்

## சித்த வைத்தியத்துக்கு பல்கலைக்கழக அந்தஸ்து!

(பண்டைத்தரிப்பு)

யாழ். பல்கலைக்கழக சித்த வைத்தியதுறையின் அங்குரார்ப்பண வைபவம் நாளை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி அரங்கில் நடைபெறவிருக்கிறது.

சித்த வைத்தியத் துறைக்கு பல்கலைகழக அந்தஸ்து வழங்கவேண்டுமென்ற வட இலங்கை சித்த வைத்தியச் சம்மேளனத்தின் அமைப்பாளர் டாக்டர் சுகந்தன் இன்னசித்தம்பியின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேறுகிறது.

சித்த வைத்தியத் துறைக்கு கிடைக்கும் இந்த அந்தஸ்து குறித்து டாக்டர் சுகந்தன் இன்னசித்தம்பி மகிழ்ச்சி தெரிவித்தார்.

உபவேந்தர் சு. வித்தியானந்தன் இவ்விழாவில் கலந்து கொள்பவர்களுக்கான அழைப்புகளை அனுப்பிவைத்துள்ளார்

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி: 558.8

(கொழும்பு)

இலங்கையின் ஜூன் மாதம் வாழ்க்கைச் செலவு புள்ளி 558.8 ஆகும்.

உலகத் தமிழ் மகாநாடு நேற்று ஆரம்பம்

## கூட்டுத் தலைமை குறித்து நியூயோர்க்கில் வற்புறுத்து

(நியூயோர்க்கிலிருந்து மாலி)

'இலங்கைத் தமிழர் பிரச்னை தீர்வதற்கு ஒற்றுமை மிகவும் அவசியம். கூட்டுத்தலைமை ஒன்று ஏற்படவேண்டும்' என்ற கருத்து நேற்று நியூயோர்க்கில் ஆரம்பமான மூன்றுநாள் உலகத்தமிழ்மகாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

நியூயோர்க் 'கொலிடே இன்' ஹோட்டலில் தமிழக சபாநாயகர் திரு. ராஜாராம் ஆரம்பித்துவைத்தார்,

காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன் தலைமை வகித்தார்.

ஈழவேந்தன், சந்திரகாசன், வி. பொன்னம்பலம், கரிகாலன், ராதாகிருஷ்ணன், இரா. அன்பரசு, இரா, ஜனர்த்தனம், இரா. செழியன், வை. கோபாலசாமி, செந்தி ராமச்சந்திரன் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

சுமார் 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் தமிழ்நாடு, மலேஷியா, சிங்கப்பூர்,

[16-ம் பக்கம் பார்க்க]

## ✱ நீரில் மூழ்கிய சிங்கப்பூர் கப்பல்

## காப்டனும், ஊழியர்களும் வல்வை வந்து சேர்ந்தனர்!

(ராஜகோபால்)

நாகபட்டினத்திலிருந்து பம்பாய் வெங்காயம் ஏற்றிக் கொண்டு கொழும்புத் துறைமுகம் நோக்கி வந்துகொண்டிருக்கும்போது நீரில் மூழ்கிய கப்பலின் காப்டனும் அவருடன் கடமையாற்றிய ஏழு ஊழியர்களும் திகில் அனுபவங்களைத் தாங்கிக் கொண்டு தங்கள் சொந்த இடமான வல்வெட்டித்துறை வந்து சேர்ந்தனர். இவர்களது குடும்பத்தினர், இவர்களை ஆனந்தக்கண்ணீருடன் ஆரத்தழுவி வரவேற்றனர்.

சிங்கப்பூர் கொண்டேறஸ் சிப்பிங் கூட்டுத்தாபனத்தின் கப்பலான 'வெலா 6' என்ற இந்தக் கப்பல் கொழும்பிலிருந்து நான்கு மைல் தொலைவில் காலநிலையில் திடீர் சீற்றத்தால், விரல்விட்டு எண்ணும் நிமிட நேரத்துக்குள் இரவு 10-30 மணிக்கு மூழ்கத்

(16ம் பக்கம் பார்க்க)

## கொலையெனத் தீர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு ஹோட்டல் ஒப்ரேயில் இடம் பெற்றகுண்டு வெடிப்பு சம்பவத்தில் மரணமான திருமதி வருசலாவின் மரணம் கொலையென மரணவிசாரணை நடத்திய கோட்டை நீதிபதி எஸ். இமாம் தீர்ப்பு வழங்கினு, (சூ)

இஸ்லாமிய மக்களுக்கு நெஞ்சம் நிறைந்த ரமழான் வாழ்த்துக்கள்!

உங்கள் விவசாயப் பிரச்சனைகளுக்கு
லங்கெம் ஸ்தாபனத்தை
நாடுங்கள்

வட இலங்கை விவசாயிகளுக்கு
உலகில் விவசாயக் கிருமிநாசினி உற்பத்தி செய்வதில்
உலகில் பிரசித்தி பெற்ற இராட்சதர்கள் என கணிக்கப்படும்
ஷெல், டு பொண்ட், மொண்சாண்ரோ, சுமிற்றிமோ
ஆகிய ஸ்தாபனங்களினுல் சந்தைப்படுத்தும்
சகலவிதமான
கிருமி, களை, காளான் நாசினிகளையும் தருவித்து
பதினைந்து வருடகாலங்களுக்கு மேலாக அனுபவம் பெற்று
தரமான சேவையையும் ஆற்றி
முன்னேடிகளாகத் திகழ்பவர்கள்
லங்கெம் ஸ்தாபனத்தார்.
மேற்படி ஸ்தாபனத்தார் வட இலங்கையின்
ஊக்கமுள்ள விவசாயிகளுக்கு உதவுமுகமாகத் தங்களது
"ஆராய்ச்சி அறிவுரைக்" கிளையை
அண்மையில் யாழ்நகரில் ஆரம்பித்து வைத்தமையிலும்
முதலிடத்தை வகிக்கின்றது.
இக்கிளை நீண்டகாலமாக லங்கெம் ஆராய்ச்சி
அபிவிருத்தித்துறை முகாமையாளராகக்
கடமையாற்றி வரும்
திரு. E. C. சேவியர் அவர்கள்
தலைமையின்கீழ் இயங்குகின்றது.
விவசாயிகளும் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களும்
தங்களது விவசாயப் பிரச்னைகளைக் கீழ் குறிப்பிட்ட
விலாசத்தில் தொடர்பு கொள்வதன் மூலம்
உடனடியாக நிவாரணத்தை பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
லங்கெம் ஆராய்ச்சிப்பிரிவு
பாம் கோட்,
202, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(526) தொலைபேசி இல: 22628

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மன்னார் நகரசபை எல்லைக்குள் உபரப்புக் காணியில் சகல வசதிகளுடன் புதிதாகக் கட்டப்பட்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க விளம்பர இல 619, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 619

Hyline Hisex ஆகிய இன ஒரு நாட் கோழிக்குஞ்சுகள் 6-7-84, 16-7-84, 30-7-84 ஆகிய நாட்களில் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ''சீமாட்டி பாம்ஸ்'' மயிலங்காடு, சுன்னாகம், சீமாட்டி 122 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். 620

உடுவில் ஆங்கில மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள அம்பலவாணர் வீதியில் ரோட்டோரமாக மூன்றே முக்கால் பரப்பும் மூன்று குழியும் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு; சி. தில்லை மகாராசன், வண்டியர் வளவு, உடுவில், சுன்னாகம் 621

தும்பளை வீதியில் வடக்குப் பக்கமாக மணல் ஒழுங்கையில் 100 யார் தூரத்தில் வீடுகட்டுவதற்கேற்ற நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 7½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு, சொ. இரவீந்திரன் (ஆசிரியர்) ''குணக்குன்றம்'' மணல் ஒழுங்கை, தும்பளை பருத்தித்துறை. 582

பருத்தித்துறை வீதிக்கு அருகாமையில் கட்டைப்பிராய் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; சே. மகாலிங்கம், காவேரி பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, தொலைபேசி: 22490 (581)

1. நல்ல நிலையிலுள்ள E N தொடரிலக்க மொரிஸ்மைனர் கார், 2. Star நிம் பிளேற்-ஒருசெற் (13''), 3. கார் ரேடியோ, - ரேப்- with Speakers 4. T.V,டெக், 5. Grundic spool tape recorder (4Tracks) நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆனந்தா றைக்கோடிங் பார், காங்கேசன்துறை வீதி, தாவடிச்சந்தி. தொலைபேசி: 309 சுன்னாகம். 594

நல்லூர், கோவில் வீதியில் (Temple Road) St. John Bosco பாடசாலைக்கு அண்மையில் இரண்டு நிலப்பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: புதிய இல. 126 கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 441

நல்ல பாவனையில் உள்ள Austin A. 30 E. N. Series கார், இரண்டு தேக்க மர அலுமாரிகள் (Teak Wardrobes), போமீக்கா டொப் தேக்க சாப்பாட்டு மேசை (Formica Top Teak Dining Table), 10 பல வர்ண Fiber glass கதிரைகள், முதிரை மர கட்டில், 24 piece Pyrex Dinner Set, மற்றும் வீட்டு சாமான்கள் உடனடி விற்பனைக்கு உள்ளது. SPENCER 66 பிறவுண் வீதி யாழ்ப்பாணம். 507

இலந்தைக்குளம் வீதி கொழும்புத்துறையில் கடையுடனை 1¼ பரப்புக்காணிஉடன் விற்பனைக்குண்டு தொடர்பு: ''மல்ரி சேவிசஸ்'' 37 (351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 22762. (554)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு முன்பாகவும் பிரதான வீதியை முகப்பாகக் கொண்டதும் வர்த்தக அல்லது குடியிருப்புக்குகந்தது மான 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வி. பஞ்சரத்தினம், 164/10, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். அல்லது எஸ். கணேசவேல், உபதபால் அதிபர், கந்தரோடை, சுன்னாகம். 587

## விற்பனைக்கு

North Town வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், குறஸ் புறெய்லேஸ் சேவல் குஞ்சுகள் யூலை மாதம் 1ம், 10ம் திகதிகளில் விநியோகிக்கப்படும் ராதா கிருஷ்ணஸ், 392. நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி. 585

நல்ல நிலையிலுள்ள Honda Express CC 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; 67, குமாரசாமி ரோட் திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 584

நல்லூர் கோவிலுக்கு அருகில் 3½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை. விளம்பரஇல: 610 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 610

நுணுவில் சந்தியில் கண்டி ரோட்டிற்கு அருகாமையில் வீடு, நன்னீர்க் கிணறு, மின்சார வசதியுடன் (அண்மையில் கட்டியது) மற்றும் வசதிகளுடன் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. எஸ். சண்முகவடிவேல் 64, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 609

ஐந்து பரப்பு சுற்றுமதில் கல்வீடு சகல வீதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க திருமதி கதிர்காமத்தம்பி. கமலவாசம், ஊரிக்காடு, சிதம்பராக்கல்லூரிக்கு அருகாமையில். வல்வெட்டித்துறை. 530

யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெரு 12ம் இலக்க வீடு விற்பனைக்கு நேரில் தொடர்பு. Mrs. Thurairatnam 37/1 மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 618

புத்தம் புதிய நாஷனல் 8. 2 க. அடி இரு கதவு குளிர் சாதனப்பெட்டி NR -202 TW, நாஷனல் Blender ரோடு கூடிய வேறு சாதனங்கள், Two-in-one Rx-C45F 40 வாட்ஸ், Snack Toaster, Rice Cooker 2.2 லீட்டர்ஸ் Braun multimix Blender 10'X10' பேர்சியன் கம்பளம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி. ஞா. மகாதேவா 254 கண்டி வீதி. புங்கன்குளம் யாழ்ப்பாணம். 553

சுன்னாகம் மின்சார நிலைய எல்லையில் கிணற்றுடன் கூடிய 13 பரப்புத் தோட்டக் காணி (விளான்) விற்பனைக் குண்டு. தொடர்பு- க, மனோகரநேரு (ஆசிரியர்) கிழுவானை, கோப்பாய். 624

நீர்வேலியில் நிந்தசிட்டி அல்லது மாலை என அழைக்கப்படும் தோட்டக்காணி நான்கு பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு க. மனோகரநேரு (ஆசிரியர்) கிளுவானை கோப்பாய். 623

நல்ல நிலையில் முதல் உரிமையாளர் வசமுள்ள 26 சிறீ இலக்கத்தொடர் 'இசூசூ' லொறி உடனடியாக விற்பனைக்குண்டு. நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்க. இல; 6. கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23045 622

### SALE

(1) New Westinghouse (U. S, A), 14½ cu. ft., 2 doors, No-frost Referigerator-freezer (2) New Electrolux (Sweden) electric, all purpose sewing Machine. N. K. Iyer, Kondavil East, New Palaly Road, Junction. 605

## தேவை

எமது வர்த்தக ஸ்தாபனத்திற்கு இரும்பு வியாபாரத்தில் குறைந்தது 5 வருட அனுபவமுடையவரும், கணக்கு எழுதக்கூடியவருமான நேர்மையுள்ள விற்பனையாளர் ஒருவர் உடன் தேவை. நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும். அ. மரியநேசன், உரிமையாளர் அன்ரனீஸ் ஹாட்வெயேஸ் - பண்டத்தரிப்பு. 597

சிலிண்டர் பிளேற்ரின் மெசினில் வேலைசெய்பவர் உடன் தேவை. சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீலங்கா அச்சகம் 234, A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 520

ஒரு மெடிக்கல் சென்ரருக்கு ஆங்கில மருந்துபற்றிய அறிவுள்ள விற்பனையாளர் உடனடியாகத் தேவை நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். ஸ்ரேசன் மெடிகல் 80, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்தி, யாழ்ப்பாணம் 611

மணிக்கூடு திருத்தும் ஸ்தாபனத்திற்கு ஆங்கில அறிவுள்ள 20-30 வயதிற்கிடைப்பட்ட ஆண் இலிகிதர் (Bill Clerk) உடன் தேவை. தொடர்பு விளம்பர இல; 572, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 572

இந்து வேளாளப்பெற்றோருக் 5அடி 6அங்குல உயரமும் 31 வயதுமுடைய Newyork இல் இருக்கும் எஞ்சினியர் மணமகனுக்கு அமெரிக்கா பிரஜாவுரிமையுடைய மணமகள் ஒருவரைத் தேடுகின்றனர். மதம் கவனிக்கப்படமாட்டாது. நற்குணமும் அழகும் அவசியம். சீதனம் எதிர்பார்க்கப்படும். புகைப்படத்துடனும் முழுவிபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 595, C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம்- 595


## காணவில்லை

86ஸ்ரீ8454 என்ற இலக்கத்தையுடைய C—70 FCOND POWER எனும் மோட்டார் சைக்கிளைக் கண்டவர்கள் கீழுள்ள விலாசத்திற்கு தெரிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். தி. லோகநாதன் கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 602

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இரண்டு டயரியும், ஒரு கணக்குக்கொப்பியும் சேர்ந்த ஒருபார்சல் தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சத்திர சந்தியில் அமைந்துள்ள C. S. K. கட்டிடத்தில் இருக்கின்ற ஹாஜி அப்பாஸ் சன் கடையில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 517

29-6-84 இல் யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் மினிபஸ் ஒன்றில் 10-6-84ல் நடைபெற்ற கணபதிப்பிள்ளை கமலாதேவியின் விவாகப்பதிவுவைபவ வீடியோ கசெற் தொலைந்துவிட்டது. கண்டவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பொ. பாலச்சந்திரன், 91/17 இந்து மகளிர் கல்லூரி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 616



## வாடகைக்கு

தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் இருக்கும் இரண்டு கடைகளும் வாடகைக்குக் கொடுக்கப்படும் விபரம் நேரில் 'கோபால்ரேட்ஸ்' 760/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 607

திருநெல்வேலி சந்தி ஸ்ரீ வாணி புத்தகநிலையத்திற்கு அருகாமையில் உள்ள பலசரக்குக்கடை வாடகைக்கு உள்ளது. மேலதிக விபரங்கட்கு: திருநெல்வேலி ஸ்ரீவாணி முகாமையாளரிடம் தொடர்பு கொள்ளவும். 588

## வகுப்புக்கள்

I.C.M.A (A) 1984, Economics Revision, Question Discussion வகுப்புக்கள், அனுபவம் வாய்ந்த சிறப்புப் பட்டதாரி ஆசிரியரினால், திங்கள், புதன்கிழமைகளில் மாலை 4-00- 5-30 வரை, நடைபெறுகின்றது. மாணவர் சேரலாம். யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (மேல்மாடி) சாந்தித் தியேட்டர், அருகாமை யாழ்ப்பாணம். 545

## கல்வி

ஓவியம், போட்டோ, கலர் போட்டோபயிற்சியினை தபால் மூலம் கற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு: சி. சிவதுரை பறுளாய் ரோட், சுழிபுரம். 518

வயரிங், மோட்டார்மெக்கானிசம் காலை வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறுகின்றன, புதிய மாணவர்கள் 3-7-84ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க. பொறியியல் கல்வி நிலையம் (Engineering Education Centre): யாழ்ப்பாணக் கல்விநிலையக்கட்டிடம், சாந்தி சினிமா அருகாமை, 22 ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர்: S. C. இம்மானுவேல் B. Sc (Cey) Elecrtical and Automobile Engineer. 599

## WANTED

Female Office Trainees, Office Boy. Lecturers for Computer Programming. 392, Navalar Road, Kailasapillayar Kovilady. 585

## காணவில்லை

பலாலியைச் சேர்ந்த கென்றி பொன்றேஸ் அல்லது இராசமணி என்பவர் தெல்லிப்பளை மருத்துவ மனையில் இருந்து 27.6.84 காலை தொடக்கம் காணவில்லை. இவர் காணுமல் போன பொழுது சொக்கிலட் சட்டையும் ஒரேஞ்கலர் கரையில் பூப் போட்ட சாறியும் அணிந்திருந்தார். சிறிய குடும்பியும் முன் பல் ஒன்று மாத்திரமே உண்டு. இவர் 51 வயதுடையவர். இவரைக் காண்பவர்கள் பின்வரும் முகவரிக்கு அறிவிக்கவும் தகவல் தருபவர்கட்கு அல்லது நபரை நேரில் கொண்டு வருபவர்கட்டு தகுந்த சன்மானம் வழங்கப்படும். க.ரட்ணம் பொபி கூல்பார் பலாலி சந்தி வசாவிளான். (612)

## விற்பனைக்கு

மல்லாகம் இறை அங்கிணியவுடை நிலைப் பரப்புஆறேஅரைக்கால் நிலமும், வீடும், கிணறும் உள்ள எனது காணி விற்பனைக்குண்டு. இது மல்லாகம் நீலியம் பனைப் பிள்ளையார் கோயிலுக்குப் போகும் வீதியில் அருகில் உள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**நல்லதம்பி மகள்**
**தெய்வானைப்பிள்ளை,**
இல 299, சங்கத்தானை வீதி, கண்டிரோட், சாவகச்சேரி. (593)

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

# முக்கிய அறிவித்தல்

''ஈழநாடு'. பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான மரண அறிவித்தல் — நன்றிநவில்லல் — நினைவஞ்சலி பிறந்தநாள் வாழ்த்து முதலான விளம்பரங்களுக்கு இனிமேல் ''பாஸ்போட்'' அளவுடைய படபுளக்குகள் (BLOCKS) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மேற்பட்ட அளவுடைய புளக்குகள் பிரசுரத்திற்கு ஏற்கப்படமாட்டாது.

நிர்வாகி, ''ஈழநாடு''.

(578)

# 19-ம் நாள் நினைவஞ்சலி

**திரு. பெ. சின்னச்சாமி**

**யாழ்ப்பாணம்**



எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தெய்வமே நீங்கள் எங்களைப் பிரிந்து இன்றுடன் (1.7.84) 19-ம் நாள் பூர்த்தியாகின்றது. தங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

30, பொன்னப்பா ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 608

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

# புனைபெயர்களுக்கு ஆபத்து!

ஒரு கிராமத்தில் நடந்த சம்பவம் ஒன்றை அப்பகுதியைச் சேர்ந்த நிருபர் விபரித்து எழுதியிருந்தார். நிருபரின் பெயரைக் குறிப்பிடாமலே இடத்தின் பெயரை மட்டும் குறிப்பிட்டு செய்தியை வெளியிட்டோம்.

அடுத்தநாள் பரபரப்போடு ஒருவர் வந்து அச் செய்தியைப் பற்றி விசாரித்தார். செய்தி முழுக்கவும் உண்மை என்பதை அவர் ஏற்றுக்கொண்டாலும் அச்செய்தி பத்திரிகையில் வெளிவந்ததுதான் அவருக்கு ஆத்திரத்தை மூட்டியிருந்தது.

''இதை யார் கொடுத்தது என்பதைச் சொல்லுங்கள்'' என்று ஆத்திரப்பட்டார் அவர்.

''செய்தியில் பிழையிருந்தால் சொல்லுங்கள்; திருத்தம் போடுகிறோம். செய்தி கொடுத்தவர் பற்றி நீங்கள் கேட்கமுடியாது'' என்றோம்.

''இல்லை, கட்டாயம் சொல்லத்தான்வேண்டும்'' என்று அடம்பிடித்தார் வந்தவர்.

''எதற்காக இப்படி நச்சரிக்கிறீர்கள்'' என்றோம்.

''அந்தச் செய்தி கொடுத்தவனைத் தெரிந்தால் அவன் காலை முறித்து அவன் கையிலேயே கொடுப்பேன்'' என்று பல்லைக் கடித்தார் அவர்.

செய்தி எழுதியவரின் உண்மைப் பெயரை வெளியிட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை இச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது அல்லவா?

பத்திரிகைச்சபை சட்டத்தில் அரசு செய்யவிருக்கும் திருத்தம் நிறைவேற்றப்பட்டால், மேலே நான் குறிப்பிட்டதுபோன்ற செய்திகளை எழுதும் நிருபர்களின் பாடு பெருந் திண்டாட்டமாகவே இருக்கும். உண்மையான செய்திகள் கூட பத்திரிகைகளில் வெளிவந்து பொதுமக்கள் அறிந்துகொள்ளக்கூடாது என்று விரும்பும் நபர்களில் செய்தி நிருபர்கள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாக நேரும்.

### உள்ளிருந்தே வரும் தகவல்

மேலிடத்து ஊழல்களை வெளியிலிருந்து பத்திரிகைகளில் உளவு அறிந்து வெளியிடுவதென்பது உள்ளிருந்தே தகவல் கொடுக்க எவரும் இல்லாதவிடத்து அவ்வளவு வெற்றிகரமாக அமைவதில்லை,

உள்ளிருந்தே தகவல் கொடுக்கும் சமூகநலன்விரும்பிகள் ஏராளமிருக்கிறார்கள். சில சமயங்களில் இப்படியானவர்களே பொதுநலனுக்காக ஆசிரியர் கடிதங்களைக்கூட எழுதி புனைபெயர்களில் வெளியிடும்படி கேட்கிறவர்கள்.

இப்படியான கடிதங்கள் பொதுத்துறைகளில் ஊழல்களைக் களைவதற்கு பெரிதும் உதவியாகவிருப்பதுண்டு,

மோட்டார் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக நடத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சை நடத்துகிறவர்கள் லஞ்சம் பெறுவது பற்றி கடிதம் ஒன்றை பத்திரிகையில் ஒருமுறை பிரசுரித்திருந்தோம்.

அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த உண்மைகள் சில புள்ளிகளை இனங்காட்டுவதாய் இருந்தது. லஞ்சம் வழங்குவதற்கு உடந்தையாய் இருக்கும் தரகர்கள், முகவர்கள் பற்றியும் அக்கடிதம் எடுத்துக்காட்டியது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள், அக்கடிதத்தை எழுதியவர்களைப் பற்றி அறிவதற்குப் பெரிதும் அக்கறை காட்டினார்கள். பயமுறுத்தல் கடிதங்களும் வந்ததுண்டு. ஆனால் லஞ்ச ஊழல் அம்பலப்படுத்தப்படுவதற்கு அக் கடிதம் உதவியாய் இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது.

பதிய சட்டம் அமுலுக்கு வருமானால் இம் மாதிரிச் சமூக ஊழல்களைச் சுட்டிக்காட்டுவதற்கு எவரும்துணியமாட்டார்கள்.

# பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைக்கும் முயற்சி!

### ஏற்கனவே உள்ள சட்டம்

பத்திரிகைச் சபைச் சட்டத்தில் நீதிஅமைச்சர் டாக்டர் நிஸங்கா விஜயரத்தின கொண்டுவரவிருக்கும் திருத்தங்களின்படி எந்த ஒரு பத்திரிகையினதும், உரிமையாளர், பதிப்பாளர், வெளியீட்டாளர் அல்லது ஆசிரியர்; தமது பத்திரிகையில் அநாமதேய அல்லது புனைபெயரிலான கட்டுரைகளை அல்லது அறிக்கைகளை, அல்லது கருத்துக்களை வெளியிட்டால் ஒரு குற்றத்தைப் புரிந்தவராகக் கணிக்கப்படுவார். ஒரு வருடத்துக்குக் கூடாத சிறைத்தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய்க்குக் கூடாத அபராதம் அல்லது இரண்டுமே தண்டனையாக வழங்கப்படும்.

இவ் உத்தேசச்சட்டம் அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்டதாகும் என ஜனநாயக உரிமைகள் பாதுகாப்புக்கான [C. R. M] இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அரசியல் சட்டத்தின் 14 (1) அ ஷரத்துக்கு இவ் உத்தேசச் சட்டம் முரண்படுவதோடு, இது நடைமுறைக்கு வருவதானல் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தவர்களால் நிறைவேற்றப்பட்டு பொதுமக்களின் கருத்துக் கணிப்பொன்றின்மூலம் ஆமோதிக்கப்பட வேண்டும் என்று இவ்வியக்கம் தெரிவித்துள்ளது.

## புதிய சட்டம் ஜனநாயகக் கோட்பாட்டுக்கு முரண்பட்டது!

தற்பொழுது அமுலில் இருந்துவரும் செய்திப்பத்திரிகைச் சட்ட விதிகளின்படி ஒருபத்திரிகையின் பெயர், அதுஎங்கே பதிப்பிக்கப்படுகின்றது என்ற விபரம், மற்றும் பதிப்பாளர்க் வெளியீட்டாளர், சொந்தகாரர் அனைவரது பெயர், முகவரி, வதிவிடம் ஆகிய அனைத்தும் குறித்த படிவம் ஒன்றில் எழுதி பிரகடனம்செய்து செய்திப்பத்திரிகைப் பதிவாளருக்கு அனுப்பிவைத்தபின்பே அதனை வெளியிடமுடியும் இதில்வேறு மாற்றம் எதுவும் செய்வதானுலும் அதுபற்றிப் பதிவாளருக்கு எழுதிப்பதிந்து கொள்ள வேண்டும்.

பத்திரிகையொன்றில் வெளியாகும் செய்தி அல்லது கட்டுரை முதலியவைகளினல் பாதிப்புக்குள்ளாகும் ஒருவர் சட்டப்படி சம்பந்தப்பட்ட உரிமையாளர், பதிப்பாளர் வெளியீட்டாளர், ஆசிரியர் ஆகியோர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு இருந்துவருகின்றது.

இந்த வசதியிருக்கும்போது இப்புதிய சட்டம் கொண்டுவரப்படுவதற்கான அவசியம் என்ன? இவ்வாறு ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பதற்கான இயக்கம் கேட்டுள்ளது.

### அதே ஆசாமிகள்

அண்மையில் ஆங்கிலப்பத்திரிகையொன்று இப்புதிய சட்டம் தொடர்பாக எழுதிய ஆசிரியர்கருத்தில், ''இப்புதிய சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். பின்னர் அது நடைமுறைச்சட்டமாகிவிடும். இதில் ஆச்சரியம் என்னவென்றால்பத்திரிகை சபைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு முதன்மையாக எதிர்ப்புத்தெரிவித்து

### பி. எஸ். பி.

முன்னணியில் நின்றுபோராடிய அதே பிரிவினரைக் கொண்ட நிர்வாகமே பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் கருத்துச் சுதந்திரத்துக்கும் ஆப்புவைக்கும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவிருப்பதுதான்'' என்று எழுதியுள்ளது.

உலகில் எங்குமே இல்லாத இப்புதிய நடைமுறையை அரசாங்கம் கொண்டுவர விருப்பதற்குப் பத்திரிகையுலகிலும் ஜனநாயக ஸ்தாபனங்களிலும் பலத்த எதிப்புக் கிளம்பியுள்ளது.

சமீபகாலமாகப் பத்திரிகைகளில் பொறுப்பற்ற முறையில் கருத்துக்கள் வெளியிடப்படுவபடுவதாக நீதியமைச்சர் தெரிவித்திருந்தார்,' இப்புதிய சட்டம் கொண்டுவரப்படுவதற்கான காரணத்தை விளக்கும் போதே இதைஅவர் தெரிவித்திருந்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

# இருமுக்கிய சந்திப்புக்கள்

இலங்கையின் சமாதான வாழ்வுக்கு மிக முக்கியமான சந்திப்புக்கள் இரண்டு புராதன நகரங்களில் இடம் பெறுகின்றன.

பாரதநாட்டின் பழம்பெரும் தலைநகரான (புது) டில்லியில் ஒன்று; இலங்கையின் புராதன தலைநகரான அனுராதபுரத்தில் மற்றது.

இந்தியப் பிரதமர் இந்திராவை இலங்கை ஜனதிபதி சந்திக்கும் வைபவம், இலங்கை, இந்தியா, ஆசியா (ஏன் உலக அரசியலுக்கும்) முக்கியமானதெனலாம்.

இலங்கைப் பிரதமர் பிரேமதாசா பல்கலைக்கழக மாணவர் பிரச்னைபற்றி, குறிப்பாகவும் நாட்டின் அமைதி பற்றிப் பொதுவாகவும் நான்கு எதிர்க்கட்சித் தலைவர்களை அனுராதபுரத்தில் நேற்று சந்திப்பதாக ஏற்பாடு; இதில் எதிர்க்கட்சித் தலைவரோ அவரது கட்சியோ கலந்து கொள்ளவில்லையென்பது புதினமல்ல.

இவ்விரு சந்திப்புக்கள் சுமுகமாக நடப்பதற்கு தெய்வம் ஒழுங்கு செய்திருப்பது போலத் தோன்றுகிறது.

நாட்டின் பந்தோபஸ்துபற்றி முஹாரி இராகம் பாடப்பட்டபோதும் அதில் கலப்படம் இருந்தது; இவ்விரு சந்திப்புக்களில் அதுநீக்கப்பட்டது.

தமிழர் பிரச்னை நியாயமான முறையில் தீரவும், வடக்கு- தெற்கு பயங்கரவாதம் இணைவதைதடுக்கவும் நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க வேண்டுமென ஒரே குரலில் ஒலிக்கும் இலங்கையின் இராகம் இந்தியப் பிரதமருக்கு உற்சாற்கம் அளிப்பதோடு விஜயம் வெற்றிபெற உதவும்,

# 25 ரூபாயுடன் வாழ்வை ஆரம்பித்த ஒபராய்!

உலகிலுள்ள பதினெரு நாடுகளில் முப்பத்தொரு ஹோட்டல்களின் அதிபதியாக இருப்பவர் தனிமனிதரான ஒபராய்! சாதாரண குடும்பத்திலே பிறந்த ஒபராய் தமது விடாமுயற்சியினாலும் கடின உழைப்பினாலும் கோடீஸ்வரர் ஆனவர். எண்பத்து மூன்று வயதான ஒபராய் இன்றும் சுறுசுறுப்புடன், சங்கிலித்தொடராக அமைந்துள்ள ஹோட்டல் பணிகளைக் கவனித்து வருகிறார். இவருடைய ஹோட்டல்கள் இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, எகிப்து, சவூதி அரேபியா, ஈராக், ஜான்ஸிபார், நேபாளம், மலேசியா ஆகிய நாடுகளில் இருக்கின்றன. இலங்கையிலுள்ள ஹோட்டல் ஒபராயில் கடந்த 28-ம் திகதி குண்டு வெடித்ததும், இவ் விபத்தில் பெண் ஊழியர் ஒருவர் மரணமடைந்து பலர் படுகாயமுற்றதும் தெரிந்ததே.

### ஒபராய் ஓர் இந்தியர்

ஒபராயின் மொத்தச் சொத்து 200 கோடி வரை இருக்கலாமென மதிப்பிடப்படுகின்றது. புதுடில்லிக்கு அருகிலுள்ள பண்ணையில் வசித்து வரும் ஒபராய் பல நாடுகளிலும் உள்ள ஹோட்டல்களுக்கும் நேரடி விஜயம் செய்து, தன் ஊழியர்களைச் சந்திக்கின்றார். கண்டிப்பு, கடமை தவறாமை ஆகியவற்றின் மொத்த உருவமென ஊழியர்களால் புகழப்படும் ஒபராய், தன் வாழ்க்கையை இருபத்தைந்து ரூபாயுடன் ஆரம்பித்தவர்.

1962-ல் இந்திய பாராளுமன்றஉறுப்பினராக இருந்த ஒபராய், தனது பதவிக் காலத்தில், உல்லாசத் துறையைமேம்படுத்தியவர். ஹோட்டல் நடாத்துவதில் சரித்திரம் படைத்தவரான ஒபராயின் கடைசி ஆசை, இன்னும் 19ஹோட்டல்களை நிறுவுவதுதான். இவற்றில் ஏழு ஹோட்டல்களின் நிர்மாண வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

சச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மத்தியகல்லூரி: நினைவில் நிழலாடும் ஆசிரியப் பெருந்தகைகள்

அன்று 1934ம் ஆண்டு, யாழ் மத்திய கல்லூரியின் நூற்றுண்டு வைபவக் கொண்டாட்ட ஆண்டு. நான் இக்கல்லூரியின் பழைய மாணவன். மத்தியகல்லூரி முகாமைத்தனம் மெதொடித்த நிறுவனத்தினது. அதே நிறுவனத்தின் கீழ் இயங்கிய வண்ணுர்பண்ணைச் செட்டித்தெரு கில்னர்கல்லூரியில் நான் உதவி ஆசிரியன். மத்தியகல்லூரிநூற்றுண்டுஇராப்போசன விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தேன் இந்த அழைப்புக்கு மூலகாரணமாக இருந்தவர் எனது அத்தியந்த அன்புக்கும் மரியாதைக்கும் உரித்தான க. நவரத்தினம் எனும் ஆசிரியப் பெருந்தகை. பின்னர் 'கலைப்புலவர்' நவரத்தினமாகியவர் கிறீத்தவரல்லர். சைவ இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாயிருந்தவர். அவர்தான் யாழ் மத்திய கல்லூரியின் சீவநாடியாயிருந்தார் என்பது நானறிந்தவிடயம். எவரும் மறுக்கவும்மாட்டார்கள் அவரே என்னை வற்புறுத்தி விருந்துக்கு அழைத்தவர். நூற்றுண்டு விழாவைச் சிறப்பாக ஒளிரச்செய்த பெருமை அவருடையதே.

### பசுமை நினைவுகள்

இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் யாழ். மத்திய கல்லூரி மாணவனுகவிருந்த நினைவுகள் கண்முன் திரையிடப்படும் நினைவுகளால் வருகின்றன. அக்காலத்தில் என்னுடனும் எனக்கு முந்திய வகுப்பிலும் எனக்கடுத்த வகுப்பிலும் கற்ற மாணவர்களின் நினைவு பசுமையாபுளது. வைத்தியகலாநிதிகள் நதானியேல், தாமோதரம், நீதவான் உவெஸ்லி தாமோதரம், இளம்வயதில் காலஞ்சென்ற கணித விற்பன்னர் செவப்பிரகாசம், பலாலிஆசிரிய கலாசாலையதிபராயிருந்த 'ரேுச லிண்ட்' கந்தசாமி தற்சமயம் 'ஈழநாடு' பொது முகாமையாளர். து. சினிவாசகம் என்போர் பலருள் என் மனதில் நிறைந்த சிலர் அக்கால எம் போன்ற மாணவரின் ஒழுக்கத்துக்கும் பண்புக்கும் அடக்கத்துக்கும் அவர்களுக்கு நிகர் அவர்களே. எந்த அரசாங்கத் திணைக்களத்திலும் மத்திய கல்லூரிப் பாரம்பரியத்துக்குத் தனி மதிப்பு.

## த. தங்கராசா

அக்காலத்தில் எமது வாழ்வை வளப்படுத்தி வாழ்க்கைத்துறையில் (கல்வியில் மாத்திரமல்ல) பட்டதாரிகளாகிய எமது குருமாரிற் சிலர் கண்முன் தோன்றி மறைகின்றனர். அதிபர் வணக்கத்துக்குரிய பி. ரி. காஷ் பாதிரியார் உப-அதிபர் ஜே. கே. சண்முகம், க. நவரத்தினம், வை. இராமசாமி சர்மா, கே. ஸி. யாக்கோபு, எஸ். ஸி. குணரத்தினம் நினைவினின்று அகலாதவர்கள். கலைப்புலவர் க. நவரத்தினம் பற்றிய மிகச் சுருக்கமான குறிப்பு ஆரம்பத்தில் கூறிவிட்டேன். எனக்கு அவர் எந்தப்பாடமும் படிப்பித்திலர் ஆயின் அவரது நேர்மையும், கடமையுணர்ச்சியும்மதப்பற்றும் எனது வாழ்க்கைநெறிக்குச் சாதனையாயின. அங்ஙனமே இங்கு நான் குறிப்பிட்டவர்கள் போதனையுடன் சாதனையையும் சேர்த்து மாணவர் அநேகருக்கு வாழ்க்கை முறையை நெறிப்படுத்தியோராவர்.

அதிபர் காஷ்பாதிரியார் வன்சொல் கூறியறியார் அன்பாலும் இன்சொல்லாலும் மாணவரை வசிப்படுத்தியவர். ஒருசமயம் மாணவ தலைவர் தெரிவு நடந்தது. அக்காலத்தில் ஆசிரியர் குழுவேதெரிவு செய்வர். பாதிரியார் எனது பெயரைப் பிரேரித்தனர். கிறீஸ்த்தவனல்ல என எதிர்ப்பு ஏற்பட்டது என அறிந்தேன். ''ஞானஸ்நானம் பெற்ற கிறீத்தவராயில்லாவிடினும் உண்மைக் கிறீஸ்த வாழ்வுவாழும் சைவன்'' என்றனராம். உப அதிபர் ஆமோதிக்க மாணவ முதல்வனுனேன்.

உபஅதிபர் திருவாளர் ஜே. கே. சண்முகம் ஏசுவதிலும், வெண்கட்டி, புத்தகம், விசிறி மட்டையால் எறிவதிலும், 'பிரப்பம் பழம்' வழங்குவதிலும் வீங்கு புகழ்பெற்றவர். எத்தண்டனையைப் பொறுத்தாலும் அவரது ஏச்சைப் பொறுக்கமுடியாது..

எதிலும் பூரணத்துவத்துவத்தையே எதிர்பார்ப்பவரான மையிற்றுன் இக்குணம்கொண்டிருந்தார் விளையாட்டில் வெற்றியையே எதிர்பார்ப்பவர். பரீட்சையில் ஒவ்வொருவரும் திறமையாகசித்திபெறவேண்டுமென்ற எதிர்பார்ப்பு அவரிடம் இருந்தது, பரீட்சை எடுக்க யார் தடை விதித்தாலும் யாவரும் பரீட்சைக்குத் தோன்ற வேண்டுமென்பதும் அதற்காக ஆசிரியர்மார் தத்தமது பாடங்களில் இயன்றவரை மாணவரை ஆயத்தப் படுத்தி வைக்க வேண்டுமென்பதும் அவருடைய கொள்கை ஒவ்வொரு மாணவனையும் அவனது குடும்பத்தையும் பற்றி நன்கு அறிந்திருந்தவர் மாணவனின் நலத்தையே கண்ணுகக்கொண்டவர்.

பிரம்மஸ்ரீ வை. குமாரசாமி சர்மா அவர்கள் எமது தமிழ் பண்டிதர், இலக்கியமேதை மகாம காபாத்தியாயர். தமிழ் சமக்கிருதம், ஆங்கிலம், இலத்தீன் மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். மிகஅறிவுடையவராகினும் மிக அடக்கமானவர். நேர்மை, ஒழுக்கம், காலவரையறை, பண்பு, இன்சொல் முதலியவற்றுல் எல்லோரையும் தம்பால் ஈர்ந்தவர். நடமாடும் கலைக்கூடம், திருப்தியையும், அதிருப்தியையும் உதட்டு வளைப்பில் காட்டுவரேயன்றி வெஞ்சொல்பேசாதவர் வாழ்க்கைக்கொரு முன்மாதிரி.

கே. ஸி. யாக்கோப்பு ஒரு மலையாளப்பட்டதாரி. கணித மேதை என்று கூறமுடியாவிட்டாலும் இலண்டன் சர்வகலாசாலை மெற்றிக்குவேசன் பரீட்சைக்கும் கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழக சீனியர் தேர்வுக்கும் மாணவருக்குக்கணித பாடத்தைப் புகட்டுவதில் அவருக்கு அவரே நிகர். அவர் கற்பித்த மாணவர் ஆயிரக்கணக்கிலிருக்கலாம். ஆனுல் சித்தியெய்தாதவர் ஒரு கைவிரலில் எண்ணிவிடலாம். காரணம் யாதென நான் உற்றுப்பார்த்த விடத்து பாடம் ஆரம்பமாவதற்குமுன் அரை நிமிடம் மௌனப் பிரார்த்தனையிலீடுபட்டிருப்பார். பலர் இதைக் கவனித்திருக்க மாட்டார்கள். அவர் அத்துணையிறை வழிபாடு கொண்டவர். நேர்மை,

(13ம் பக்கம் பார்க்க)

## இன்று நடக்கும் விமர்சன அரங்கு

திருமதி கோகிலா மகேந்திரனின் 'முரண்பாடுகளின் அறுவடை' என்ற சிறுகதைத் தொகுதி இணுவில் கலை இலக்கிய இளைஞர் வட்டத்தினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு இணுவில் அ. மி. த. க பாடசாலை மண்டபத்தில் இளைஞர் வட்டத் தலைவர் திரு. துரைஎங்கரசு தலைமையில் விமர்சனம் செய்யப் படவுள்ளது.

திரு. தம்பு. சிவசுப்பிரமணியம், திரு. க. ஸ்ரீகணேசன், மாத்தளை ஆ. இராசலிங்கம், திரு. ந. குருபரன் ஆகியோர் விமர்சனம் செய்யவுள்ளனர்.

# ஈதுல்பித்ர் பெருநாள் ஏழைகளின் திருநாள்

ஒரு மாத காலம் பசித்திருந்து விழித்திருந்து நோன்பு நோற்று இன்பங்கண்ட முஸ்லிம்கள் ஈதுல் பித்ர் நன்னுளைக் கொண்டாடுகின்றனர்.

அதே வேளையில் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய சங்கைமிகு றமழான் எம்மைவிட்டு விடைபெற்றுவிட்டதே என்ற ஏக்கமே எம்மவரின் உள்ளங்களில் குடிகொண்டுள்ளது. எனினும் இம்மன நிலையை ஓரளவுக்குத் தணித்துக்கொள், ' றமழான் மாதத்தை அடுத்துவரும் ஷஃபான் மாதத்தில் நோன்பு நோற்பது ஸுன்னத்தாக்கப் பட்டது' உதவுவதாகவுள்ளது ஆனுல் பெருநாட்களில் நோன்புநோற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இன்னுட்களில் உண்டு, உடுத்து மகிழ்ச்சியாகக் கழிப்பதையே இஸ்லாம் விரும்புகின்றது. நண்பர்களையும் உற்றுர் உறவினர்களையும் சந்தித்து சலாம் சொல்லி மகிழ்ச்சியான முறையில் உரையாடும்படியும் இஸ்லாம் எமக்கு இயம்புகின்றது.

## கல்ஹின்னை நஸ்ருல்லாஹ்

மேலும் இன்னுட்களில் ஏழைகளை ஒவ்வொருவரும் அனுசரித்து நடக்கவேண்டும். ஈகையை வலியுறுத்தும் ஈத் பெருநாள் உண்மையில் ஏழைகளை மகிழ்விக்கும் திருநாள் என்ருல் மிகையாகாது.

ஈதுல் பித்ர் பிறை தென்பட்டதும், நாம் உண்ணும் தானியங்களில் ஒருவருக்கு இரண்டு அள்ளுவீதம் ஏழைகளுக்கு பித்ராவாகக் கொடுத்தல் வேண்டும்.

ஒருமாத காலம் நோன்பு நோற்ற ஏழைகள் பெருநாள் தினத்தன்று வயிராற சாப்பிட்டு இன்பமுற வேண்டும் என்ற நோக்கிலேயே பித்ரா கடமையாக்கப் பட்டுள்ளது.

நோன்புப் பெருநாள் இரவுக்கும், பகலுக்கும், தனக்கும், தன்னுல் தாபரிக்கப்படக்கூடியவர்களுக்கும் போதுமான உணவு, உடை, செலவு போக மீதியாகவுள்ள பொருளில் ஸகாத்துல் பித்ர் வாஜிபாகும். ஸகாத் பெற உரிமையாளர்களுக்கே இதுவும் கொடுக்கப் படல்வேண்டும்.

இதனுல், பெருநாள் கொண்டாடும் ஒவ்வொருவரும் தமது குடும்பத்தைச் சேர்ந்த வசதியற்ருேரை மறந்துவிடாது,

(16ம் பக்கம் பார்க்க)


குறேஸ் ட்ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட்
(CROSS TRAVEL SERVICES (Pte) LTD.)
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை :-
குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை :
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
Phone No : 22040, 22065. Telex No : 22207 (C, T, S,)



BASIC ENGLISH

எங்களுக்கு விளம்பரம் தேவையில்லை:
இஃதோர் அறிவித்தல் மட்டுமே

பயிற்சிக்காலம்: 3 மாதம்

விரிவுரையாளர்: கந்தையா நவரேந்திரன்

ஆரம்பம்: 5—7—84

கட்டணம்: ரூபா 100/-

நேரசூசிகை: திங்கள் பி. ப. 3-00—4-30
வியாழன் பி. ப. 3-00—4-30

கன்ராபியா இன்ஸ்டிடியூட்
21, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
போன்: 24201


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை

# நினைவில் நிற்கும் நெருஞ்சிகள்



## ஜனனி சபா புஷ்பநாதன்

"எவ்வளவு காணி பூமி பணமிருந்தும் அதை அனுப விக்கத் தெரியாது இறக்கும் மனிதர்களும் அதை அனுப விக்க முடியாது இறக்கும் மனிதர்களும் இறுதியாக ஒரே மயானத்தில்தான் சாம்பலாகின்றனர்."

"ஒவ்வொரு மரண வீட்டிலும்தான் மனிதன் தனக்கும் மரணபயம் உண்டு என்பதனை நினைத்துப்பார்க்கிறான். நாளை மரணத்தினை எதிர்நோக்கும் மனிதன் இன்று வேறு ஒருவனைக் கொல்லும் வேலையில ஈடுபடுகின்றான். இந்த இளம் வயதிலே 'இஞ்சினியர் கிழவன்' செத்ததற்கு அவர் மீது பொய்ப்பழி சுமத்தியவர்கள் தான் தண்டனையை அனுப விக்க வேண்டும்.

அந்த மரண வீட்டில் கூடியிருந்தவர்கள் நேரத்தைப் போக்குவதற்காகக் கதைத்துக் கொண்டிருந்தனர். 'எஞ்சினியர்க் கிழவன்' மரணமடைந்த செய்தி கேட்டுப் பல கிராமங்களிலும் இருந்து மக்கள் அஞ்சலி செலுத்த வந்து கொண்டிருந்தனர் அதற்குக் காரணம் ஏழைகளின் கண்ணீரைக் கண்டபோதெல்லாம் கிள்ளிக் கொடுக்காது அள்ளிக் கொடுத்த அவரது பெருந்தன்மையல்ல. தைப்பொங்கல் தினத்தன்று வருடாவருடம் பிச்சைக்காரர்களுக்கு மதிய உணவுப் பார்சல்களைக் கொடுத்த கொடைக்சாகவுமல்ல, சீதனப் பிசாசால் வஞ்சிக்கப்பட்டு, 'கரை சேர'க் காணி வேண்டும் எனக் கண்ணீர் விட்ட பல இளம் பெண்களின் தாய்மார்கள் அவரிடம் சென்று முறையிட்ட போது காணி கொடுத்துப் பல குமர்களைக் கரை சேர்த்தாரே அந்த உயர்ந்த பண்புக்காகவே பல சிறு கிராமங்களில இருந்தும் மக்கள் வெள்ளம் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்தகொண்டிருந்தது.

சுன்னாகம் பஸ் நிலையத்திற்கு மேற்கே உள்ள அரச மரத்தின் கீழ் சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க தாடி வளர்ந்த அந்த 'எஞ்சினியர் கிழவனை' நீங்கள் பலதடவை சந்தித்திருந்தாலும் கூட அவருக்கு வயது முப்பத்து மூன்றுதான் என்றால் நம்ப மாட்டீர்கள். சாப்பிட மறுக்கும் சிறுவர்களுக்குக்கூட 'எஞ்சினியர்கிழவன் நிற்குது' என்று பயமுறுத்திச் சாப்பிட வைக்கும் தாய்மார் முதல் 'எஞ்சினியர் கிழவன் வருகுதடா' என்று சொல்லிவிட்டுக் கல்லால் எறியும் சிறிசுகள் வரை எல்லோர்க்கும் நன்கு தெரிந்த நல்ல மனிதனாக 'எஞ்சினியர் கிழவன்' ஏன் நான்கு வருடமாக இப்படி அரசமரத்தின் கீழேயே தினமும் இருந்தார். என்பது ஒருவருக்கும் தெரியாது' அவருக்கு 'விசர்' என்று பலர் எண்ணினர். அவரது நெருங்கிய உறவினர்கள் கூட "விசரன் கடைசிக் காலத்தில சாப்பாடு இல்லாமல் பஸ்நிலையத்திலை கிடந்து சாகப் போகிறான்," என்று ஏசினர். ஒரு நேரத்திற்கு உணவு தயாரித்து அளிக்காத அந்த உறவினர்கள் கூட செத்த வீட்டில் அழுத வண்ணம் அவர் புகழ் பாடிக்கொண்டிருந்தனர். மரண வீட்டிலும் கூட அவர் சொத்துகளை எப்படிப் பிரிப்பது என்பதிலேயேதான் அவர்களுக்கு ஒரே அக்கறை தெரிந்தது.

பிணத்தினைக் குளிப்பாட்ட ஒருகூட்டம் தூக்கிக் கொண்டு போகிறது. அழு குரல்கள் வீட்டுக்கூரையைத் தொடுகின்றன. பிணம் கிடந்த தலையணைக்குக்கீழ் பல கடிதங்கள் காணப்பட்டபோதிலும் எல்லாக்கடிதங்களும் "அன்பான மைதிலிக்கு ..." என்று ஆரம்பிக்கப்பட்டு எதுவுமே எழுதாமல் விடப்பட்டிருந்தது. யார் இந்த மைதிலி என்பதை அறியும் ஆவலை விட அவரது 'தேட்டங்களைப் பங்கிடவே ஆவலுடன் அந்தக்கூட்டம் மரணச்சடங்கினை துரிதமாகச் செய்தகொண்டிருந்தது அந்த எட்டுக் கடிதங்களையும் நான் எடுத்துக்கொண்டேன். வாசனைத்திரவியங்கள் பிணத்தின் மீது தெளிக்கப்பட்டு சவப்பெட்டியினுள் பிரேதம் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகளுக்காக வீட்டின் முற்றத்தில் உள்ள பந்தலுக்குக் கொண்டு வரப்பட்டு வைக்கப்படுகிறது. தேவாரம் பாடுபவர்கள் போட்டி போட்டுக்கொண்டு தம் இசை ஞானத்தைக்காட்ட முற்படுகிறார்கள். மறு பக்கத்தில் ஒரு கூட்டம் வீட்டிலுள்ள அலுமாரிகள் செம்புகள் கதிரைகள், கட்டில்களை இரகசியமாககணக்கெடுக்கின்றது.

டாக்சி ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டு அனைவரும் அங்கே பார்க்கிறார்கள். வெள்ளை நிற கவுண் அணிந்த அழகிய இளம் பெண் ஒருத்தி இறங்கி வருகிறாள். எல்லோரது கவனமும் இவள் யார் என்பதுடன் 'எஞ்சினியர் கிழவனுக்கும் இவளுக்கும் உள்ள தொடர்ப என்ன என்பதைப்பற்றி நினைக்கையிலே அவள் பிணத்தினை நெருங்கிக் கண்ணீர் விட்டழுகிறாள். குலுங்கிக் குலுங்கி அவள் அழுதாள். செழித்து வளரும் பூசனிக் கொடியின் காய் ஒன்று கல்லுக்கிடையில் அகப்பட்டு நசுங்கி வளர்ந்த பின் தெரியும் அழகினை அவளில் கண்டேன். பிரேதத்தின அருகில் இருந்த கதிரை ஒன்றில் தானாகவே போய் அமர்ந்துகொண்ட அந்த அழகியின் அருகே நான் சென்றேன் அவளுடன் கதைக்க ஆரம்பித்தேன். என் கையை அவள் பற்றிக் குலுங்கியபடி "ஐ லொஸ்ற் மை கிறேற்பிறன்ட்" என்று ஆங்கிலத்தல் கூறியபடி மீண்டும் குலுங்கிக் குலுங்கி அழுதாள். பிரதப் பெட்டியை மூடும் வேலையில் பலர் ஈடுபட்டிருந்தனர்.

அழுகைக் குரல் அதிஉயர்ந்த சத்தத்தில் ஒலிக்கிறது. மரணஊர்வலம் ஆரம்பமாகிறது அந்தப்பெண் தன்னை மைதிலி எனஎனக்கு அறிமுகம்செய்து விட்டுத் தொடர்கிறாள்.

"நானும் எஞ்சினியர் ரவியும் ஒன்றாகஒரே பக்டரியில் சுமார்நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பணிபுரிந்துள்ளோம் ரவிஎஞ்சினியராக இருந்த அந்த பக்டரியில் வெளிநாட்டு உதவியுடன் வானொலிகளைத் தயாரித்தோம். ரவியின் நேர்மையும் கடமையுணர்வும் கண்ணியமானபேச்சும் என்னைப்போல் பலரையும்கவர்ந்தது. எதையும் மிகத்துணிச்சலுடன் அலசி ஆராயுமவிதமும் அதை இலகுவாக எமக்குப் புரியும்படி சொல்லும் பாணியும் அவர் மீது எனக்கு ஒரு விதபாசத்தினை ஏற்படுத்தியது......"

அவள்சொல்லிக் கொண்டு வந்தபோது நான்இடைமறிக்கிறேன்.

"நீங்கள் அவரைக் காதலித்தீர்களா?" இல்லை.. இல்லவேஇல்லை.. நான்மணமானவள். எனதுகணவன் மின்சாரசபையில் எஞ்சினியராக இருந்தார். நான்ரவிமீது கொண்டது காதல்இல்லை பரிசுத்தமான அன்புதான். அதேபோலரவியும் என்மீதுபரிசுத்தமான அன்பினையே கொண்டிருந்தார். அவர் என்னையும் நான்அவரையும் சரியாகப் புரிந்திருந்து கொண்டோம். பிரேத ஊர்வலம் சுன்னாகம் பஸ்நிலையத்திற்கு அருகில் உள்ள அரசமரத்திற்கு அருகே வந்துசற்றுத் தாமதித்துப் பின்னர் தொடர்ந்தது. இனி எஞ்சினியர் கிழவனை அரச மரத்துக்கு அடியில் யாரும் பார்க்கமுடியாது. மைதிலியும் தங்கள்கதையை தொடர்கிறாள்.

"எனது கணவர் முதலில் அந்தக்கடிதங்களை நம்பவில்லை அவற்றைஅவர் கிழித்து எறிந்தார். தொடர்ந்துவந்த கடிதங்கள் அவர்மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதன்பலன் அன்று ஒருசனிக்கிழமை தைப்பொங்கல தினத்திற்கு முதல்நாள் நான் வீட்டைவிட்டு, ஏன் ஊரைவிட்டு நான சென்றுவிட்டேன், சத்தியத்தை சபித்துக்கொண்டு அதன் பிறகு அரசமரத்தின் கீழ்தபசியானார் எஞ்சினியர் கிழவனார். என்றுசொல்லி அழுது தன் கைகுட்டையை நனைத்தாள். அவளதுகண்ணை இப்போது நானபார்க்கிறேன் சிவப்பாகி ரத்தம்போல் தோன்றும் அந்தக்கண்ணில் போதையூட்டத் தெரியாத-அடக்கமான தூய அன்பினைப் பிரகாசமாகககண்டேன். பிரேதஊர்வலம் கதிரமலைச் சிவன்கோவிலைக் கடந்து றெயில்வேகடவைக்கு அணமையில சென்று கொண்டு இருக்கிறது. எமதுபேச்சும் தொடர்கிறது. அவள் என்னுடன் பேசிக்கொண்டே வருகிறாள்:

இருந்தாற்போல் ரவியைப் பார்க்கவேண்டுமென்று பக்டரிக்குப் போனேன் நான் வேலையை விட்ட அன்றே அவரும் வேலையை விட்டதாகவும் சுன்னாகம்பஸ் நிலையஅரசமரத்தடியில் ரவி என்ற "எஞ்சினியர் கிழவன் "இறந்துவிட்டதாகவும் செய்தி கேட்டு அதிர்ச்சியுடன் வந்தேன். அவர்தனதுபிறந்த நாள் அன்று—ஒவ்வொருதைப்பொங்கல் அன்றும்-ஏழைகளுக்குத் தானம்செய்ததாகச் சொன்னார்கள் அது அவரது பிறந்தநாள்அல்ல எனது பிறந்த நாள்தான். தமிழ்த் தை பிறந்தநாள்தான் எனது பிறந்தநாள். அவரையும் அவரது புனிதஅன்பையும் புரிய முடியாத நயவஞ்சகர்கள் அவரைச் சாகடித்துவிட்டார்கள். இந்த ஒருமையில் நீள

ஆனால் எங்களை ஏனையோர் புரிந்துகொள்ளவில்லை. மஞ்சல் கண்ணாடி போட்டு எங்களைபார்த்தார்கள் அவர்களுக்கு நானும்ரவியும் மஞ்சல் மனிதர்களாகத் தெரிந்தோம். என்னைப்பற்றியும் ரவியின் அன்பைப்பற்றியும் தவறாக கணக்கிட்டு மொட்டைக் கடிதங்கள் எழுதினார்கள் மைதிலி. யாராவது தங்கள் கணக்கில் தவறு விடுவார்களேயானால் அவர்களது வாழ்க்கைக் கணக்கும் தவறாகிவிடும்' என்று ரவிஅடிக்கடி சொல்லுவதைக் கேட்டேன் இனி எப்படிக் கேட்பேன் என்று அழுது கொண்டேஅவள் சொன்னாள்.

[12ம் பக்கம் பார்க்க]

---

### நகைச்சுவைச் சித்திரம்

# அந்த நாய்க்குட்டி

## கா. யோகநாதன்

அநாதை போல வந்து ஐந்தாறு நாட்களாக வீட்டில் ஒட்டிக்கொண்டு இரவில் வாள் வாள் என்று ஓயாமல் கத்திக்கொண்டிருந்த அந்தப் பெட்டை நாய்க்குட்டியை முதல்நாள்தான் 'காட்போட்' பெட்டியில் கட்டி, பக்கத்து வீட்டுக்கண்டக்டரிடம் கொடுத்திருந்தார் மாஸ்டர் ஆறுமுகம்

ஒருநாள் கூட முழுசாகப் பூர்த்தியாகவில்லை. மாஸ்டர் காலையில் எழுந்துவந்தபோது அந்த நாய்க்குட்டி வாலை ஆட்டியபடி வாசல் கதவடியில் நின்றது மாஸ்டருக்கு ஆத்திரம் ஒருபுறம்; ஆச்சரியம் மறுபுறம்.

பத்துமைலுக்கப்பால் வதிரியில் அந்தநாய்க்குட்டியை விட்டதாக, நேற்றிரவு அந்தக்கண்டக்டர் கூறியது அவர் ஞாபகத்திற்குவந்தது அவரால் நம்பமுடியவில்லை. இன்னும் சரியாகச சோறு தின்ன ஆரம்பிக்காத அந்த குட்டி, ஒரு இரவில் பத்து மைல் கடந்துவந்திருக்க முடியுமா? மாஸ்டர் சிந்திக்கத் தொடங்கினார்.

படலையடியில் யாரோவரும் அடியோசை கேட்டது. அவரின் பரம்பரை நண்பர் எதிர் புரோக்கர் கந்தையா வந்து கொண்டிருந்தார்

"என்ன நீண்டநாட்களுக்குப்பிறகு இந்தப்பக்கம்? என்ன ரூர் மாஸ்டர்.

"யாரோ பெட்டைநாய்க் குட்டியொன்றை என்ரை வீட்டடியில் நேற்றுக்கொண்டு வந்துவிட்டுவிட்டார்கள் இரவு முழுதும் ஒரேகத்தல்" என்று புரோக்கர் ஆரம்பித்தார்

மாஸ்டர் முடிவை அறியும் ஆவலில், புரோக்கரின் முகத்தைப்பார்த்துக் கொண்டிருந்தார்.

"சம்பந்த விஷயமொன்றாக உன்னைச் சந்திக்கவந்தேன் கையோடு அந்தநாய்க்குட்டியையும் கொண்டுவந்து, உங்கள சந்தையடியில் விட்டுட்டு வாறன" என்று புரோக்கர் கூறிமுடித்தகையோடு மாஸ்டர் வீட்டுக்குள்ளிருந்து வாள்வாள் என்ற சத்தம் வந்துகொண்டிருந்தது.

---

# கனவுகள்

சின்ன மனத்தினில் சித்திரமாய்ப்பல
சிந்தனை தோன்றுதம்மா
எண்ணமெல்லாம் இந்தவானை அளந்திடும்
ஏக்கத்தில் ஆடுதம்மா

மாயப் பிரபஞ்சம் என்னும் வெளியிலே
மாயங்கள் என்னென்னவோ
பாயும் பறவையாய் மாறிச்சிலகாலம்
பார்த்துத் தெளிந்தாலென்ன?

வண்ணச் சுடர்களாய் மின்னிப் பொலிந்திடும்
வானத்துப் பூக்களிலே
எண்ணிச் சிலகாலம் ஏறி அமர்ந்தங்கு
அற்புதம் செய்தாலென்ன?

வெள்ளிமலரென மின்னும் நிலவிலே
வேடிக்கையாய்ச் சிலநாள்
துள்ளித் திரிந்தங்கு தோன்று உணர்வினை
பா ஒலிசைத்தாலென்ன?

சிவப்பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நூற்றாண்டு நினைவு

# புதுமைப் பெண்

# மங்களம்மாள் மாசிலாமணி

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 1884ம் ஆண்டு பங்குனிமாதம் 10ந் திகதி பிறந்து1971ம்ஆண்டு தமது 86 வது வயதில் மறைந்த அம்மையார் மங்களம்மாளை யாரும் இதுவரை மறந்திருக்க முடியாது. அவர் செய்த சேவைகள் எளிதில் அவரை மறக்கச் செய்ய முடியாது இன்று அவர் பிறந்து நூறாவது வருடமாகும். 'பெண்களின் விழிப்பும் உயர்கல்வியும் ஏற்படாத காலத்து அவர்களின் சேவை நிகழ்ந்தமையால் அதனைக் கணித்துப் போற்றக் கூடிய ஆற்றல் நம்மவரிடம் இல்லாமல் போய்விட்டது.

பெண்ணினத்துக்காக மட்டுமல்ல தமிழினத்துக்காகவும் அவர் பெருஞ் சேவை செய்துள்ளார். யாழ்ப்பாணத்தில் முன்னணியில் திகழ்ந்த ஒரு சில பெண்கள் உயர்கல்வி கற்றும் பல பதவிகளை வகித்தும் நிர்வாக சேவைகளில் அமர்ந்தும் இருந்தாலும்கூட அக்கால கட்டத்தில் கல்விச் சான்றிதழ் எதுவும் பெறாத மங்களம்மாவிடம் காணப்பட்ட முற்போக்கு வாதம் சமூகசீர்திருத்தம், சுயநலமறுப்பு, புதிய முயற்சிகளில் துணிந்து ஈடுபடுதல்' சமூகவுணர்வு. எளிமையானவாழ்வு முதலியனவற்றை அவர்களிடம் ஒருங்கே காண்பது அரிது. மிகமிக அரிது.

எலும்புந்தோலுமான சிறிய உருவம், தூயவெண்ணிறக் கதராடை, நெற்றியில் திருநீற்றுப் பூச்சு. இதுதான் நாம கண்ட மங்களம்மா. உருவமும் வயதும் கொண்டு இவர் கோயிலுங் குளமுமாக ஆத்மீக நன்மை கருதித் திரிகின்ற தெய்வ மங்கையோ என நாம் எண்ணவேண்டியதில்லை. சமூகத்தின் நலனையே உள்ளத்தில் பதிய வைத்து பெண்கள் உரிமையோடு வாழ வழிகள் சொல்லியும் அரசியல் உணர்வை யூட்டியும் ஆங்கில மோகத்தையும் ஆடம்பரத்தையும் தவிர்த்து எளிமையையும் சுதேச பக்தியையும் வளர்த்தும் வருவதற்கு இளமைப்பராயத்திலிருந்துமரணப் படுக்கை வரை அயராது உழைத்த பெருமாட்டி அவர். பயனகருதாச் சேவையை உண்மைவிசுவாசத்தோடு செய்தவர்.

### குடிப்பிறப்பு

யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று வழக்கறிஞராகத் திகழ்ந்தவா இவர் தந்தையார் சதிரவேற்பிள்ளை. பட்டங்கள் பெறுவது அருகியிருந்த காலமது. ஆகையால் பீ ஏ தம்பி என அழைக்கப்பட்டார். அவரது பெயரில் பிரப்பங்குளம் தெருவில் பீ.ஏ தம்பி ஒழுங்கை ஒன்று இன்றும் அவர்நினைவாக இருக்கிறது. இவருடைய தாயாரின தம்பிமார் மூவர் அதேகல்லூரியில் உயர் கல்வி கற்று அதனல் தென் இந்தியாவில் உயர்பதவிகள் பெற்று அங்கேயே வாழ்ந்தவர்கள் இவரது சகோதரர்களும் இலங்கையில் உயர் உத்தியோகம் வகித்தவர்கள். அம்மையார் தமது இளவயதில் பாடசாலை சென்ருரா என்றதகவல் தெரியவில்லை. ஆனலும் கல்வி வீட்டிலே நடைபெற்றதற்கான சாத்தியம் இருக்கிறது.

இலங்கைத் தலைவர்கள் ஆங்கிலமோகத்துக்கும் கலாசாரத்துக்கும் அடிமைகளாகி விடுபடமுடியாத நிலையில் தம்மைத்தாம் இழந்துகொண்டிருந்த நிலையில் இந்தியாவிலோ வீரசுதந்திரம் வேண்டிப் போராடி நின்றனர். மக்கள் சமூகச் சீர்திருத்தங்களை மக்கள் முன் வைத்து மாற்றங்களையும் அரசியல் அறிவையும் ஊட்டினர் தலைவர்கள். பேனு பிடித்து ஆனு எழுதத் தெரியாத பெண்கள் மத்தியிலும் புரட்சி போராட்டம் எனபன காங்கிரசால் விதைக்கப்பட்டது. இவற்றில் ஈடுபட்ட மாமன்மார் மூலமாக இதன் தாக்கம் இக்குடும்பத்திலும் தாக்கங்கொள்ளலாயிற்று.

போன்ற கஷ்டமான காலங்களிற் தளர்வுற்றும் பிற்காலத்தில் வருடாந்த இதழாக மாறியும் 1971வரை வாழ்ந்துமறைந்து விட்டது. அம்மையார் இந்தியாவிலும் இலங்கையிலும் மாறி மாறி வசித்த காலங்களில் பத்திரிகையும்அங்கும் இங்குமாக மலர்ந்து கொண்டிருந்தது

மங்களம்மாள் அவர்கள் இந்தியஅரசியலுக்குச் செய்த சேவை அளவிடற்கரியது அவர்அங்கே வசித்தகாலத்தில் கணவருடன் சேர்ந்து காங்கிரஸ் இயக்கத்தின் முழுநேர தொண்டராகி அகிலஇந்தியாவிலும் நடக்கும் காங்கிரஸ் மகாநாடுகளுக்கு சென்னைப் பிரதிநிதிகளாகச் சென்றுவந்தனர். மாசிலாமணியின் பூர்விகச்சொத்துக்கள் பொது சேவைகளிலும் பத்திரிகை நடத்துவதிலும் கரைந்து போகும் அளவுக்கு ஈடுபாடுயோடிப் புல்லுக்கு மாங்கே பொசிதல் போல'' சுதந்திரம் கிடைக்கும் வாய்ப்பும் அதற்காகத்தாமும் ஏதோபாடுபட்டது போன்ற சிறுசலசலப்பும் மாத்திரம் இருந்துவந்தமையால் அரசியல் ரீதியான போராட்டமெதற்கும் இங்கே வாய்ப்புஇருக்கவில்லை.

எனினும் 1926ல் ஒருசங்கம் கூட்டித் தமிழ் பெண்களின் தற்காலநிலைமை'' எனும் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினர். 1932ல் ''மகளிர்தேசிய சேவைச்சங்கம்'' ஒன்றைத் தொடக்கினர். அது பெயர் மாற்றம்பெற்றதோ அல்லது வேறுமொரு அமைப்புநிறுவப்பட்டதோ தெரியவில்லை. 1933ல் 'தமிழ்மகளிர்கழகம்' ஒன்றுநடாத்தியதற்கான சான்றுகளும்உள.

இவர் யாழ்ப்பாணத்திற்கு இசை வகுப்பினருக்கேயுரிய தெனக்கணிக்கப்பட்ட சங்கீதலையை மூத்தமகள் மகேஸ்வரிக்குக் கற்பித்தார். சாந்திநிகேதன் வரை சென்று பல வகைக் வாத்தியக் கருவிகளையும் மீட்டும் ஆற்றலைப் பெற்ற அவரை யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, குருநாகல் ஆகிய இடங்களில் மேடைகள் அமைப்பித்துக் கச்சேரிகள் செய்யவைத்துச் சாதிமான்களின் கண்டனத்துக்குள்ளானர். அந்தமகள் இசைவகுப்புக்கள் நடாத்தவும், கலைப்புலவர் நவரத்தினத்தை விவாகம் செய்யவும் உதவியாக இருந்தார்.

இலங்கையில் தமிழ்ப் பெண்களுக்கென முதலாவது பத்திரிகையை ஆரம்பித்தவர்- முதலாவது பெண் எழுத்தாளராகத் திகழ்ந்தவர்- பாரதியார் தேடிய புதுமைப் பெண்- சமூகப் புரட்சியாளர்- தீவிர காந்தியவாதி - மங்களம்மாள் மாசிலாமணி அவர்கள்பற்றிய சில சுவையான விபரங்களை இங்கு தருகிறார் பிரபல பெண் எழுத்தாளர்.

18 வயதே நிரம்பிய மங்களம்மாள் முதன் முதலாகப் 'பெண்கள் சேவா சங்கம்' ஒன்றை வண்ணார் பண்ணையில் தொடக்கித தீண்டாமை பெண்கள் முன்னேற்றம் மதுவிலக்கு போன்ற சீர்திருத்தக் கருத்துக்களை அறிமுகம் செய்தார்.

மாமனர் பொன்னம்பல பிள்ளையின் மைந்தன் மாசிலாமணிப்பிள்ளை காங்கிரஸ் இயக்கங்களில் முழுமையாக தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

இவர் அம்மையாரைத் தம் மனைவியாக வரித்து விடுதலைப்போராட்டங்கள் சமூகசீர்திருத்தங்களுக்குத் தயார்படுத்தினர் மாசிலாமணி தேசாபிமானி [ 915] எனும்வாரமிருமுறை இதழையும்( Peoples Magazine) பீபிள்ஸ் மகசீன் எனும் ஆங்கிலவார இதழ் ஒன்றையும் ஆரம்பித்து நடத்திவந்தார்.

### முதல் பெண் பத்திரிகையாளர்

கணவரின் தூண்டுதலினுலோஅல்லதுதான் பெற்ற அருட்சியினுலோ இலங்கைச் சரிதத்தில் இடம் பெறக்கூடியதாக 1923ம் ஆண்டு பெண்களுக்கான பத்திரிகை ''தமிழ்மகளைத்'' தோற்றுவித்தார். இதனுல் 'தமிழ்மகளே' முதலாவது பெண்கள் பத்திரிகை எனவும் மங்களம்மாளே.முதலாவது பெண்கள் பத்திரிகையாளர் எனவும் பிற்காலத்தவரின் புகழ்ச்சிக்கு ஆளானர் இப்பத்திரிகை மாதஇதழாக மலர்ந்து பின்னர் காலாண்டு அரையாண்டுப் [illegible]காலம்

கொண்டிருந்தனர். எளிமையான தமிழில் பாமரர்க்கும் புரியும்வண்ணம் கிராமம் கிராமமாகத் தொண்டர்களுடன் சென்று பேசுவதும், பணிகள் புரிந்தும். உள்ளார். கிராமச் சுத்தம், நோயற்றவாழ்வு சுகாதாரம் போன்ற சேவைகளும் உள்ளடங்கியவையாகும். இவரது இந்திய அரசியல் தொண்டுகளில் பெயர் பெற்றவை இவையாகும்.

(1) 1924ம் ஆண்டுகோவில் பட்டியில் நடந்த காங்கிரஸ் பெண்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

### காந்தியத்தில் ஊறியவர்

காந்தியத்தில் ஊறியமை காரணமாகப் பெற்றசேவை மனப்பான்மை கிராமங்கள் தோறும் விளங்கிய மன்றங்களின் சொற்பெருக்காற்றுவதிலும், பணிகள் புரிவதிலும் சர்வோதய இயக்கங்களில் பங்கு கொள்வதிலும் கதராடை இயக்கத்தைத் தொடக்கி வைத்தலிலும், வீடுவீடாகச்சென்று 'தமிழமக்கள்' பத்திரிகையை விற்றலிலும் அப்படியே பெண்கள் வீட்டை வைத்திருக்கிற விதரணையைப் பார்த்து அறிவுரை கூறுதலிலும் தெளிவாகத் தெரிந்தது.

கல்லூரிகளுக்குச் சென்று ஆசிரியர்மாணவரோடு கலந்துரையாடிக் காந்தீயவழியைச் பின்பற்றத் தூண்டுவார்.வேள்விகளை நிறுத்தும் போராட்டத்தில் கலந்துள்ளார். தீண்டாமை, மதுவிலக்கு போன்றவற்றிலும் அதிகஈடுபாடு காட்டினர்.

தான் இலட்சியமாக எடுத்துக்கொண்ட கொள்கைகளிலிருந்தும் கடைசிவரை விலகாத இலட்சியவாதி தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்ட நேர்மையாளர். கொண்ட கொள்கையை யாருக்கும் அஞ்சாது செய்து

## திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்

(2) காங்கிரஸ் போராட்டங்களில் நேரடியாகப் பங்கு கொண்டார்.

(3) திருக்குறட்கழகம், திரு வி.க.வின் குகானந்த நிலையம் ஆகியபெரு நிறுவனங்களில் சிறந்தபேச்சுக்களை நிகழ்த்தினர்.

(4) 1927 ல் சென்னையில் காந்திமகான் முன்னிலையில் இந்தியக்காங்கிரஸ் மகாநாட்டில் வரவேற் ரையும் நிகழ்த்தி மாதர் அரங்கில் சொற்பெருக்கும் ஆற்றினர்

(5) சென்னை மாநகரத் தேர்தலில் 1927ம் ஆண்டு எழும்பூர் தொகுதிக்குச் காங்கிரஸ்சார்பில் அபேட்சகராகப் போட்டியிட்டார்.

இத்தனை செய்தும் இலங்கைவந்தபோது போராட்டமெதுவுமின்றி ''நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால் வழி

முடிக்கும் வீரமும், எடுத்துக் கூறும் திரமும் உடையவர். மரணப்படுக்கையிற் கூடத் 'தமிழ் மக்களுக்கு வரைந்த தலையங்கத்தில் யாழ்ப்பாணப் பலகலைக்கழகம் பற்றி முரண்பட்டுநின்ற இருபெருந் தமிழ்க் கட்சிகளைச்சாடி தன் தீர்க்கமான முடிவைக்காட்டியவர். முப்பதுக்களிலும் ஐம்பதுக்களிலும் இலங்கைப்பத்திரிகைகளில முக்கியமாக ஈழகேசரி, இந்துசாதனச் செய்திகளின் அன்றூடத் தகவல்களில் இவரது பணிகளும் குறிப்பிடப் பட்டிருக்கும்.

இவரது சமகாலப் பெண்களதும் பெரியோர்களதும் கூற்றுக்களிலிருந்தும், எமது நேரடி அனுபவங்களைக் கொண்டும் சமூகரீதியில் தொண்டாற்றப் புறப்பட்ட

(12ம் பக்கம் பார்க்க)

## ரசமாலை

★ சச்சி

- அமெரிக்காவில் சிறுவர்களுக்காகவே 264 ஆபாச சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றனவாம். சிறுவயதிலே பாலுணர்வு பற்றிய கல்வியைப் புகட்டுவதாகக் கூறிக் கொண்டு அரை நிர்வாணப் படங்களும் கொச்சையான மொழியில் கதை கட்டுரை, கவிதைகளும் வெளி வருகின்றனவாம்.

- மெல்வின் சுவிட்சர் என்ற துறைமுகத் தொழிலாளி விடும் குறட்டையின் ஒலி, இன்று உலகசாதனையாக இடம் பெற்றுள்ளது ஒலியின் அளவு 82 டெசிபல்களாகும். இச்சத்தம் மோட்டார் சைக்கிளை விடப்பயங்கரமான சத்தமுடையது இவரது அருகில் தூங்கும் மனைவிக்கு இக்குறட்டை ஒலிபற்றிக் கவலையில்லையாம். மனைவி ஜூலிக்கு காது ஒன்று கேளாது மற்றக்காதைத் தலையணையில் புதைத்துக்கொண்டு தூங்குவாராம்.

- ''பாட்டா'' செருப்புக்களை அணியாதவர் யாருளர். பாட்டா செருப்புக்கள் 62 நாடுகளில் தயாரிக்கப்பட்டு 140 நாடுகளில் விற்பனையாகின்றன. இந்நிறுவனத்தின் தலைவர் தோமஸ், 'பாட்டா'வின் ஸ்தாபகர் ஆவர். இயந்திரமூலம் செருப்புக்களை தயாரிக்கலாமென உலகுக்கு முதல் செய்துகாட்டியவர். இவரது மனைவி ஸோனியா உலகம் முழுவதும் உள்ள செருப்புக்களைக் கொண்டு செருப்பு மியூசியம் ஒன்றை உருவாக்கிவருகின்றார். இம்மியூசியம் கனடாவிலுள்ள டொரேன்டோவில் திறக்கப்படவுள்ளது

- சீனர்கள் இந்தஆண்டை எலிவருடமாகக் கொண்டாடுகிறர்கள். கடந்த பெப்ரவரிமாதம் சீனுவில் இருந்து வெளிவந்த அத்தனை பத்திரிகைகளும், எலிப்படத்தை முன்பக்கத்தில் போட்டு புத்தாண்டுப்பலன்களை வெளியிட்டுச் சிறப்பித்தனர். சீனர்கள் ஒவ்வொரு ஆண்டையும் எருது, புலி, முயல், முதலை, பாம்பு, குதிரை, வெள்ளாடு, குரங்கு, பன்றி ஆகிய பிராணிகளின் ஆண்டாகக் கொண்டாடுவர். புத்தபெருமான் சீனுவை விட்டுப்புறப்படுவதற்கு முன் எல்லாமிருகங்களையும் தன்னிடம் சரணடையச் சொன்னபோது, எலி சுளித்துக் கொண்டு முன்வந்ததாம். அதற்காக இந்தக்கௌரவம்.

- அமெரிக்கப் பாராளுமன்றக் கட்டிடத்துக்குள் யாருமே துப்பாக்கிகள், வெடிமருந்துகள், சுடர்கள், திறந்த விளக்கு. தீபந்தங்களை எடுத்துச் செல்லமுடியாது. அப்படி எடுத்துச்செல்வதானல் இருசபைகளினதும் அங்கீகாரம் பெறவேண்டும் ஆனல் ஒலிம்பிக் பந்தயத்தை எடுத்துச்செல்வதற்கு இருசபைகளும் 24 மணிநேரத்தில் அனுமதிவழங்கியுள்ளன கிரேக்கத்திலிருந்து விமானமூலம் எடுத்துவந்த சுடர் கடந்த மேமாதம் 2ம் திகதி நியூயோக்கிலிருந்து லாஸ்ஏஞ்சல்ஸுக்கு வந்துகொண்டிருக்கிறது 82 நாட்களில் அதாவது இம்மாதம் 28ல் ஒலிம்பிக்சுடர் லாஸ்ஏஞ்சல்ஸ்ன் வந்துசேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களுக்கு

ஒரு
பரிசு

இந்நாவலைத்
தொடர்ந்து
படியுங்கள்!
உங்களுக்கு
ஒரு
பரிசு
காத்திருக்கிறது!

# தொடர் நவீனம்

# அவலங்கள்




## 6

நான்கு வருடங்களாகத் தொடர்ந்த எங்கள் கல்வி நெறி இறுதிப் பரீட்சையுடன் முடிவுற்று பெறுபேறுகளும் வெளிவந்துவிட்டன.

நான் பொருளாதாரத்தில் சிறப்புப் பட்டம் பெற்றேன். சுபா புவியியலில் சிறப்புப் பட்டம் பெற்றிருந்தாள்.

எனது பாடத்தில் என்னோடு சேர்த்து வேறு மூவரும் இரண்டாம் வகுப்பில் முதற் பிரிவில் சிறப்புப்பட்டம் பெற்றிருந்தோம். இந்தப் பெறு பேற்றின்மூலம் எங்கள் விரிவுரையாளர்களின் சில அசிங்கங்கள் அப்பட்டமாக வெளிப்பட்டது.

மாணவர்கள் எல்லோரும் குசுகுசுப்பாகக் கதைத்துக் கொண்டார்கள். பேராசிரியரோடு நெருங்கிப் பழகிற ரமா, ராஜேஸ் என்ற இரண்டு பெண்களும், அவர் பின்னாலேயே சுற்றித் திரிகிற சுரேசுக்கும் நல்ல றிசல்ரைக் கொடுத்திருக்கிறார்களாம்

இவையெல்லாம் படித்த பெரியவர்களின் பல்கலைக்கழகப் பண்பு என்று சிலர் திட்டிக் கொள்வார்கள்.

மாணவர்களுள்ளும் பலர் விரிவுரையாளர்கள், பேராசிரியர்களுக்குப் பின்னால் அவர்கள் தாஸன்களாகத் திரிவது இதனாற்போலும்.

உலகம் திருந்த வேண்டும். சமுதாயம் வளர வேண்டும் என்று சிந்திக்கின்ற படித்த மேதாவிகளே இந்தப் பிழைகளைத் திரும்பத் திரும்பச் செய்து கொண்டு இருக்கும் போது பிழைகளும் சரியாகும். சரிகளும் பிழைகளாகும். ஒரு புதிய உலகம் இன்று நடந்து கொண்டே இருக்கின்றது.

எங்கள் கல்வியின் பெறுபேறுகள் வெளியாகிவிட்டன என்ற செய்தியைக் கேள்வியுற்ற நாம் எல்லோரும் ஒன்று கூடினோம். ஐந்துமாத இடைவெளியுள் ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் மாறிவிட்டோம்.

சிலர் காய்ந்து கறுத்திருந்தார்கள். சிலர் உருண்டு திரண்டிருந்தார்கள். சிலர் வாழ்க்கைச் சுமையையே சுமந்திருப்பதாகச் சொன்னார்கள்.

வேலைவிடயம்பற்றியும் கதைத்துக் கொண்டார்கள்.

ஒவ்வொருவரும் தமக்குத் தமக்கு இசைந்தவர்களுடன் தனித்தனி கூட்டமாக நின்று கதைத்துச் சிரித்தார்கள்.

நாடு நடப்புக்கூட கதைத்துக் கொண்டார்கள்.

சுபா என்னைச் சந்திப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தாள். பெறுபேறுகள்பற்றி ஒருவருக்கொருவர் ஏற்கெனவே அறிந்திருந்தமையால் அதுபற்றி ஒன்றுமே கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

அவள் மிகவும் இளைத்திருந்தாள். என்ன காரணம் என்று கேட்க வேண்டும் போல் தோன்றியது. சுபா முந்திக் கொண்டாள்.

நீங்கள் நன்றாக மெலிந்து விட்டீர்கள். முன்னைய போலவே இல்லை.

ஏன் என்னைப்பற்றிய நினைவா ... அவள் கிண்டலாகக் கேட்டுச் சிரித்தாள்.

நீண்ட நாட்களின்பின் காணுகின்ற அந்தச் சிரிப்பை ரசித்துக் கொண்டிருந்தேன். இதனால் அவள் கேள்விக்கு மறுமொழி கூறவில்லை;

நீங்களும் அப்படித்தானே...

அவள் சிரிப்பைத் தொடர வைப்பதற்காகத்தான் நானும் இப்படிக் கேட்டு வைத்தேன்.

சுபா எப்போதாவதுதான் ஒரு கடிதம் போடுவாள். அவளுக்குக் கடிதங்களில் அதிக நாட்டமில்லைப்போலும். இந்த ஐந்துமாத இடைவெளியுள் ஏழு, எட்டுக் கடிதங்கள் தான் எழுதியிருப்பாள். நானும் கண்ட கடிதத்துக்குப் பதில் போட வேண்டுமென்பதற்காக எழுதுவேன்.

அதில் சுவை இருக்குமோ இருக்காதோ ... அவளைத்தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

காதல் கடிதம் எழுதுவதே தனிக்கலை.

இந்தக்கலை இன்பம் எல்லாருக்கும் கிட்டாது யாரோ ஒரு பிரெஞ்சு நாவலாசிரியர் சொன்ன கருத்து எனக்குத் தெரியும்

எத்தனையோ காதல் கடிதங்கள் நூலுருவம் பெற்றுள்ளன என்பதுவும் எனக்குத் தெரியும்.

என்றாலும் இதை எழுதத் தெரிய வேண்டும். அதற்கு நல்லொரு மனநிலை இருக்க வேண்டும்.

ஏதோ எனக்கு இருக்கவில்லை.

என் கடிதங்களை உடைத்து வாசிக்கும் ஒவ்வொரு வேளையும் சுபா நிச்சயமாக ஏமாறுவாள். வெறும் வசனங்கள் மட்டும் ஒற்றையில் நிறைச்சிருக்கும்.

ஒருமுறை அவள் என்ன பொருளாதாரக் கோட்பாடுகள் எழுதுகிறீர்களா என்று கூடக் கேட்டிருந்தாள்.

எங்களுக்கு என்றும் இடம் தரும் அந்தக் கன்ரீனின் குறிப்பிட்ட ஒதுக்கிடத்திலேயே இன்றும் கூடி நின்றோம்.

சுபா மிகவும் வசதியான ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவள். தகப்பனார் சிவஞானம் ஓய்வு பெற்ற ஒரு உதவி அரசாங்க அதிபர். இன்று ஒரு தனியார் நிறுவனத்தில் மனேஜிங் டிரைக்ரராக கடமைபுரிகிறார்.

ஒரு அண்ணா எஞ்ஜினியராக நைஜீரியாவிலும் ஒரு அக்கா ரீச்சராகவும் இருக்கிறார்கள். இருவருமே திருமணமானவர்கள்.

நிறைய சொத்து சுகம் உண்டு.

இந்தக் குடும்பத்து சுபா தான் என்னை விரும்பியிருக்கிறாள்.

அவள் விரும்பியிருக்கலாம். அந்தக் குடும்பத்தின் உயர்ந்த நிலைக்கு முன்னால் நான்......

மலையும் மடுவும்......

அவர்கள் என்னை ஏற்றுக் கொள்வார்கள்! ஏற்றுக் கொண்டாலும் எனக்கு கிடைக்கப் போகின்ற மரியாதை!... ...

சாதாரண குடும்பத்துப் பையன் தானே என்ற உணர்வில் தூக்கி மிதித்து நடக்கும் நடப்பாகுமோ. வேண்டா வெறுப்பான உறவாகி விடுமோ......

காதலர்கள் இருவர் கருத்தொருமித்துவிட்டால் உலகத்தையே புரட்டிவிடலாம் என்று நினைக்கக்கூடாது அல்லது கொடிகட்டிப் பறப்போம் என்று எண்ணவும் கூடாது.

இது எத்தனை பேருக்குசாத்தியபடுய.

எந்த ஒருவனது வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் குடும்ப உறவுகள் உதவி ஒத்தாசைகள் வலுப் பெற்றனவாக இருக்கவேண்டும்.

என் மன அரிப்புக்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பவளாக சுபா குறுக்கிட்டாள்.

நான் முன்னால் இருப்பதையே மறந்து போனீர்கள் போல இருக்கு அப்படி என்ன பலத்த யோசனை......

எவ்வளவு நாளைக்குப் பிறகு சந்திக்கிறம் எவ்வளவு விசயங்கள் கதைக்கக்கிடக்கு.

நீங்கள் என்னடாவென்றால் எதையோ பறிகொடுத்தவன் போல யோசிச்சுக் கொண்டு இருக்கிறியள்

அவள சிரிக்கிறாள்

தன் பசும எல பனகை இருப[illegible] கதையுங்காவன... மெல்லமாக சிணுங்கிப் பார்க்கிறாள்.

சுபா நீதான் கதைக்க வேண்டும். எனக்கு புதிதாக கதைப்பதற்கு ஒன்றுமில்லை.

அந்த குடும்பம், அதே உறவினர்கள், அதே வாழ்க்கை முறைதான்.

விசேசமாகச் சொல்வதென்றால் எந்தப்புதுமையான நிகழ்ச்சியும் எங்கள் வீட்டில் நடக்கவில்லை.

உனக்குத்தான் கதைக்கிறதுக்கு நிறைய இருக்கும்' நீ தான் சொல்லவேண்டும்.

அவள் என்னைப் பரிதாபமாகப் பார்க்கிறாள் அவள்குதூகல உணர்வை மறைத்துக் கொள்வது முகத்தில் தெரிகிறது.

அப்பா தங்கட கம்பனியில் என்னை ஒரு ஸ்ராப்அசிஸ்ரனாக வைத்துள்ளார்கள். மாதம் ரூபாஆயிரத்தி முந்நூறு வரையில கையிலகிடைக்குது.

கம்பனிகள் என்றால் உங்களுக்கு தெரியும் தானே. இது ஒரு தேயிலைஏற்றுமதி செய்யும் கம்பனியானதால் சக்கை வேலைவாங்கிப் போடுவார்கள்.

வேலைமுடிஞ்சு நிம்மதியாக தூங்கமுடியாது. செய்தவேலையெல்லாம் சரியோஎன்றுஇரவு முழுக்க இரைமீட்டுக் கொண்டே இருக்கவேண்டும்.

ஒருசின்னத் தவறு நேர்ந்து விட்டால் போதும் எக்ஸ்பிளேநேசன் லெற்ரர் எப்ப? எப்படி? வரும் என்பதுதான் சிந்தனையாய் இருக்கும். தலையே வெடித்து விடும்போல் இருக்கும்.

எப்படா இதைவிட்டு விலகுவேன் என்று காத்திருக்கிறேன்.

ரீச்சிங் கிடைச்சிட்டால் உடனேயே விட்டுட்டு வந்திடுவன். இதை அப்பாவிட்டை எப்போதுமே சொல்லிக் கொண்டே வாறன். அவரும் ஒன்றும் பேசவில்லை.

ஒரு ரீச்சிங் வேலை தேடுவது தான் எனது முழு வேலையாக இப்ப இருக்குது.. உங்களை ... சேர்த்துத்தான் என்முயற்சி இதில் இருக்கிறது ...

சுபா என்னைப்பார்த்து கண்ணை சிமிட்டிக்கொள்கிறாள்.

சுபே.. என்பெயரை ஆறுதலாக உச்சரித்து விட்டுஎன்னை நிமிர்ந்துபார்த்தாள்

என்னிடம் ஏதோமுக்கியமான விடயம் ஒன்றை கேட்கப்போகிறாள் போலும் அது தான் தயங்குகிறாள்.

என்னஎன்பது போல் கண்களை அகலவிழித்து அவளை உற்சாகப் படுத்துகின்றேன்.

நான் என்ன சொல்லவாறனெண்டு உங்களுக்குத் தெரியாததல்ல. இருந்தும் சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லவரவில்லை.

அவள் பெரும் பீடிகையுடன்தான் கதைக்கிறாள்.

''நாங்கள் என்றும் வெறும் பபாக்களில்லை. எங்களுக்கென்று பபாக்களை உருவாக்க வேண்டியவர்கள்''

சுபா 'க்ளுக்' என்ற சிரிப்போடு சுவையாகவும் அதே வேளை கண்டிப்போடும் சொல்லிக்கொள்கிறாள்.

''அப்பாவக்கு இப்போது நான் ஒருத்திதான் பொறுப்பாக இருக்கிறன்.

என் திருமணம் பற்றிய கதைதான் அப்பாஅம்மாவுக்கு பொழுது போக்குக் கதையாக இருக்கிறது அவர்களின் குசுகுசுப்பு என் காதுகளை வெடிக்க வைத்துவிடும்போல் இருக்கிறது.

வேறொரு வேலை கிடைக்கும் வரை இதை ஒத்திப் போடும்படி அவர்களோடு மல்லுக் கட்டிவருகிறேன்.

அவர்களும் தங்கள்யுத்தத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ளார்கள்.

இந்த தற்காலிக ஒத்திவைப்புக்காக யுத்தம் இல்லையென்று சொல்லமுடியாது. அதற்காக யுத்த பீதியை அனுபவிக்க வேண்டுமென்றில்லை.

சுபே... இதை நீடிக்கவிடக் கூடாது என்பதைத்தான் உங்களுக்குச் சொல்ல வாறன்''

அவள் மனநிலை அப்படி.

என் மனநிலை இன்னமும் வீட்டைவிட்டு நீங்கவில்லை இருப்க்கப் பிணைப்புக்குள்ளும் தவிப்பு'

''சுபா உனக்குத் தெரியும் நான் பார்க்கின்ற தொழில். இந்த கிளாக் தொழில் மூலம் நான் படுகின்ற வேதனையும் உனக்குத் தெரியும் என்படிப்புக்கு இது பொருத்தமானதுமல்ல.

கடிதங்களைக் கோவைப்படுத்துவதும் பைல் கட்டுக்களை கிளறிக் கிளறி உடல் அலுப்பை மனஅலுப்பைச் சுமந்து பிச்சைப் படியை வாங்கி விடே விடியாமல் அலையுறன்.

எனக்கு நல்லதொரு தொழில் கிடைக்க வேணும். அந்தநேரம் அக்காவும் கரை சேரவேணும். அக்காவையோ அல்லது எங்கட குடும்பத்தையோ விட்டுட்டு வாற மன நிலையில் நான் இப்ப இல்லை''

சுபாவுக்குப் பொய் சொல்ல விரும்பவில்லை. மிகவும் நிதானமாக என் உள்ளக் கிடக்கையை சொன்னேன்.

அவள் என்னை மிகவும் நிதானமாகப் பார்க்கிறாள் என்னை

[12 பக்கம் பார்க்க]

# சின்னதொரு

# ஆலமரம்

எங்கள் மதிற்சுவரில்
சின்னதொரு ஆலமரம்
முளைத்து வளர்கிறது.
குச்சுக் கிளைகளும்
பசியபசிய இலைகளும்
யாருமற்ற
அகதியைப் போல்
தன்னந் தனியனாய்
மதிற் சுவரில்
தண்ணீருக்கு
என்ன செய்யும்?
ஒவ்வொரு நாளும்
காலை எழும்புகையில்
என் மனக்கவலை இது
இடையிலே கருகி
மாண்டு போகலாம்
அதன் பசிய முகத்தில்
அக்கவலைச் சுவடில்லை
விரிந்த வானை நோக்கி
கெம்பீரமாய் நிற்கிறதே!
எத்தகைய இடர்வரினும்
துச்சமெனக் கருதும்
நெஞ்சத் துணிவு!
வான் நோக்கி
வளரும் துடிப்பு
என் கவலையோ
தண்ணீருக்கு
என்ன செய்யும்!
ஓ!
வேர்க்காலைச்
சுவரூடே
புவி நோக்கி
மெல்ல நீட்டியபடி
இது
நிச்சயமாய்
சுவர்க்கல்லுடைத்து
வேர் நுழைக்கும்
மண்ணுக்குள்
நீர் படிக்கும்
விழுது விடும்

யோ. பெனடிக்ற்பாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னத்தம்பிப் புலவர் வாழ்வும் இலக்கியமும் - 6

# புலவரின் நூல்களில் யாழ்ப்பாணத்திற்கே உரிய பல சொற்கள் பொலிந்து விளங்குகின்றன

சின்னத்தம்பிப் புலவரால் யாக்கப்பட்ட இந்த நாலு நூல்கள் உண்மையிலேயே சொன்னயம், பொருணயம் பொலிந்து விளங்குகின்றன என்பதை ஓரளவு காட்டினும் அஃதாவது ஒவ்வோர் நூலினையும் சிறப்பு வகையால் இதுவரை கூறினும். இனி அவற்றிலுள்ள பொதுத் தன்மைகளை ஆராய்வாம். பொதுத் தன்மைகளில் மொழி வளம், உவமை உருவகம், இலக்கிய நயம் போன்ற தன்மைகளை ஆராய்தல் சிறப்புடைத்தாகும்.

முதலில் மொழிவளம், அந்தாதிகளிரண்டும் சொல்லிறுக்கம் பெற்று விளங்குகின்றன. மடக்கு, யமகம் என்ற சொல்லலங்காரம் பொலியப் பாடியுள்ளார். சொற்கள் ஒன்றோடொன்று இறுகி இணைந்தும் பிணைந்தும் புணர்ந்துள்ளன. எனினும் இன்பம் பயப்பன. கரவை வேலன் கோவை இயற்சொற்களால் மிக்கது. பள்ளு நாடக வழக்குடையதாகையால் அதிற் சேரி மொழி பயின்று வரச் செய்துள்ளார். அந்தாதிகளிற் சொற்கள் இறுக்கம் பெற்று வருவதால் ஆங்குச் செய்யுள் விகாரங்கள் அநேகம் வந்துள்ளன. அவை சமய சம்பந்தமானபடியால் சைவசமயத்திற்குரிய புராண இதிகாசச் சொற்களாகிய வடமொழிச் சொற்கள் ஆண்டு அநேகம் பயின்றுவிள்ளன.

கரவை வேலன் கோவையில் சொன்னயம் மிக்க அடிகள் வந்துள்ளன.

''தாரணி மெச்சிய சிற்றம் பலவன்''

''வியவரிக் கண்ணுட்டி தோட்டிய வாணகையே''

''கொடை சுற்ற மேகம்''

''பைந்தமிழின் கவிச் சுந்தரன் சந்துரை பண்ண விற்கு''

''மொழி கண்ட முச்சங்க முத்தமிழ் நூலை முதுமதியால் வழிகண்ட நீ''

''ஒரு வெள்ளை யோடுங் கறுப்பாகு மெண்ணமுடையர்',

''வெள்ளையின் மேற் கறுப்பாயினர்'' என்ப அவற்றுட் சில.

பருளைவிநாயகர் பள்ளில் இந்து கவிகள் பயின்று வருவதால் ஓசை நயம் மிக்கது. திரிசொற்கள் குறையவும். இயற்சொற்கள் நிறையவும் பொருந்தியதன்றியும் பல சேரிமொழிச் சொற்களுடையது. சொற்கள் சிதைந்தும் மருவியும் வந்துள்ளன யாழ்ப்பாணத்துக்கே உரிய பல சொற்கள் பொலிந்து காணப்படுகின்றன. அவற்றுட் சில காட்டுதும்.

சின்ன இடை, உறுமால், புலால்நெடி, வரந்தரும், சோவெண. கனமழை, வாரதாட்சி, சோதிபாகிற் பல்லு. காணும், குடும்பன், மூதலிக்க, தூங்குணி, பிள்ளை, சட்டைக்காரி, பெட்டிச் சோறு, சவுக்கு, ஓச்சடி, பேச்சி, குள்ளி, தீற்றை, ஒருக்காலும்.

உறுமால்: வேற்று நாட்டுச் சொல். தலைப்பாகை, உறுமாலை, உறுமாலா எனவும் வழங்கும். சோமசுந்தரப்புலவர் தமது கத்தரி வெருளியில் ''வட்டமான பெரும் பூசினிக்காய் போல மஞ்சள் நிற உறுமாலைப் பார்'' என்று பாடியுள்ளார்.

புலால்நெடி; நெடி என்பது நறுமணம். காலப்போக்கில் துர்க்சந்தத்தை உணர்த்துவதாயிற்று.

வரந்தரும்; உயர்திணை மரியாதைப் பன்மையில் வந்த செய்யுமென்முற்று நோக்குக.

சோவெண: சோ என்பது ஒலிக்குறிப்பு.

கனமழை; கனம் என்பது பாரத்தைக் குறிப்பதெனினும் இங்கு அதிகம் என்பதைக் குறிக்கிறது.

வாரகாட்சி: வருகிற காட்சி வாறகாட்சியாகும். தாயகத்திற் பதிப்பிக்கப்பட்ட படியால் வாரகாட்சியென றகரத்திற்குப் பதிலாக ரகரம் வந்தது.

சோதிபாகிற்பல்லு; சோதி என்பது பலதுறை. பாகு என்பது பால். சோதிபாகிரண்டும் வெண்மை நிறமானவை'

காணும்! காண் என்ற அடியிற் பிறந்த வருங்கால அஃறிணை வினைமுற்று பேசசு வழக்கில் மரியாதையாகச் சொல்ல வழங்குவது. இழிவுச் சிறப்பில் வருவதுமுண்டு.

போச்சு: போனது என்பதன் திரிபு.

குடும்பன்: பள்ளர்தலைவன். இழிவுச் சொல்லாகிவிட்டது.

மூதலிக்க முகதலைத் தேன் முகதலைக்கிறேன். முகதலைப்பேன். என்ற வினைகளின் மரூஉ. முகதலை மூதலை என்றுயிற்று முகம் முகமாக நின்று பேசுதல்.

தூகுவி: மானமில்லாதவன். சாப்பாட்டுக்குத் தொங்குகிறவன்

பின்னை: பின் என்பதன் திரிபு. 'பின்னைப் புதுமைக்கும்' திருவாசகம்.

சட்டைக்காரி; சட்டை போட்டவள். இளம் பெண். இளையபள்ளியைக் குறிக்கும்.

பெட்டிச்சோறு: பெட்டியில் எடுத்துவரப்படும் சோறு. அதாவது வீட்டிலாக்காது வெளியிலிருந்து வரும் சோறு.

சவுக்கு; உறுது மொழிச் சொல் குதிரைச் சவுக்கு, சவுக்கு மரம். நோக்குக.

ஓச்சடி; ஓங்கியடித்தல். ஓச்சு —அடி.

பேய்ச்சி - பேச்சி யகரம் கெட்டது

குள்ளி; பெண்பால். குள்ளன் ஆண்பால் தந்திரகாரி

தீற்றை;தீறு இரண்டாம்வேற்றுமை பெற்றது. கோடு.

ஒருக்காலும்: ஒருகால் என்பதன மாற்றம்.

சின்னத்தம்பிப்புலவர் வைதர்ப்பம், கௌடம் நெறிகளைக் கையாண்டும் செய்யுள் யாத்துள்ளார். கௌடச் செறிவு தோன்ற வல்லெழுத்துச் செறிந்த சொல்லொடு வற்கென தொடுத்துள்ளார். உதாரணமாக,

''அஞ்சனத் திட்டிலே நுதற் சூட்டிலே குழைக் காட்டிலே இசைப்பாட்டிலே தலையாட்டில், என்று வல்லோசைமிகப் பாடியுள்ளார் தாயுமானவரும் ''கெட்டிலே வாய்வெட்டிலே'' ''பொட்டியிலே, அவர்கட் பெட்டிலே'' என்று பாடியுள்ளார்

இனி' புலவர் தம் நூல்களிற் பயின்ற உவமைகளின் நயங்களைநோக்குவாம். உவமையணியன்றி மற்றும் அணிகளும் பயின்று வந்துள்ளன. அவற்றுள்ளும் சிறப்பானவற்றையே எடுத்துக் காட்டுவாம்.

மறைசையந்தாதியில்'

''உருக்கு அர வீர அயில் விழியாய்'' என்று உருக்கரத்தை விழிக்குவமையாக்குகிறார். இவ்வுவமை இலக்கியங்களில் அதிகம் பயின்றுவரவில்லை என்பது இங்கு நோக்கற்பாலது

நாணிக்கண்புதைத்தல் என்னும் அகப்பொருட்டுறையின் மெலொருபாடல், தாமரை மலர் போன்ற முகத்திலுள்ள இரு நீலோற்பன மலர்போன்ற இருகண்களில் காந்தள் மலரும் மலரக்கண்டேன் என்று உருவகஞ் செய்து,

''பனிமுகமாம் கோகனகம் நிலவுடு துணைப்பானலிற் தோடல் கண்டேன்'' என்று உருவக உயர்வுநவிற்சியணி சொட்டப் பாடியுள்ளார்

[illegible] தன்மையை அதாவது. இல்வயிற் செறித்தமை இயம்பல் என்னுந் துறையில்.

''பைந்தார் அநீதம்படிப் புதைபொன்னில்'' என்று உவமித்துள்ளார். மதியீனர் தாம் உண்ணுதும்உடாதுங் கொடாதும் பூமியிற் புதைத்துவைத் திழக்கும் பொன்னைப் போல என்றார்.

பாலைவனத்தை உவமிக்க விரும்பிய புலவர் அங்குள்ள'' பருக்கைக் கற்களை வாழி போலும் பரல்'' என்றார் உளிவாய் போலும் கூரிய பருக்கைற்கள் என உவமித்துள்ளார்.

பாங்கன் தான் தலைவியை கண்டமையும் அவளின் நிலையினையும் தலைவனுக்குக் கூறுதல் என்ற துறையில் தலைவன் திரைபொருந்திய ஆற்றிலே அலைகின்ற கோரையைப் போல வருந்தடைந்தான் என்றான். இதனை, ''பெருந்திரையாற்றினுட பட்டலையும் கோரை'' என்று உவமித்துள்ளார்.

பருளைவிநாயகரி பள்ளில் இவ்வுலக வாழ்வை உவமிக்க விரும்பிய புலவர் அதனை, ''ஊசல்வட மூர்சகட முழன்றிடும்பம் பரம்பேய்த்தேரொத்த வாழ்வு'' என்றார். உவமை ஒன்றில் அமைதி காணுது சகடம், பம்பரம், பேய்த்தேர் என்று பலபட உவமித்துள்ளார். வாழ்வானது மேல்கீழாகவும், கீழ் மேலாகவும் மாறிமாறி வருதலின் ஊசல்வடம் என்றும் சகடம் என்றும் அது ஓரிடத்து நில்லாதது சுழன்று வருதலின் உழன்றிடும் பம்பரம் என்றும் உள்ளதுபோற்றோன்றி இல்லாததாய் நிற்றலின் பேய்த்தேர் என்றும் கூறினர்.

**வித்துவான்**
**எவ். எக்ஸ். ஸி. நடராசா**

பள்ளன் உழுகின்ற நேரத்தில் மாடு முட்டிப்பண்ணை மீது விழுந்துகிடந்த காட்சியை, ''ஓவியம்போல் வயலணையில் ஏன்கிடந்தாய்'' என்று மூத்த பள்ளி கூற்றிலமைத்துள்ளார். நாட்டுவளத்தைக் கூறவந்த புலவர் அங்குள்ள கனிமரங்களில் ஒன்றாகிய பலாவின் சுளையைச் சுட்டபொன்னுக்கு உவமித்துள்ளார். ' 'முட்புறச் செம்பழஞ் சுட்டபொன்னின் சுளை'' என்று கூறியுள்ளார்.

சின்னத்தம்பிப் புலவர் பாடிய நூல்களில் இருந்து அவரின் புலமை இலக்கிய இலக்கணதேர்ச்சி புராண இதிகாச அறிவு முதிர்ச்சி என்பவற்றை அறிதல்சாலும். சொற்சித்திரம் உவமை உருவக அணிகள் தொடைநயங்கள் புலவரின் நூல்களில் உள்ள இலக்கிய நயத்தினை எடுத்துரைப்பனவாக அமைகின்றன. தாண்டிவிட்டார்க்குப் பாரமெல்லாம் மிசப்பிறக்கண்' கண்ணிலே கரந்தீவடி விட்டானைந்தக் கைவிரல் தறிப்பார்களுண்டோ போன்ற பழமொழிப்பிரயோகம் இலக்கிய நயத்தை மேலும்வலியுறுத்துகின்றன. திருக்குறள்கள் பல மேற்கோளாகவும் அமைந்துள்ளன.

மேலும், சோதிட நூலறிவிலும் புலவர் ஆட்சியுடையவராகக் காணப்படுகின்றார். மழைகேட்டல் முகூர்த்தங் கேட்டல் என்ற உறுப்புகளில் தமது சோதிட அறிவினைப் புலப்படுத்தியுள்ளார்.

புலவர் தாம்பாடிய நூல்களில் பெரியோர் பலரின்நாமங்களைப் பிரத்தாபனை செய்துள்ளார் சந்திரசேகரமாணுமுதலி விசயரகுநாயகன் போன்ற பெரியார்களும் இராசசிங்கன் என்ற கண்டியரசனும் போற்றப்பட்டிருக்கிறார்கள்

''நாளுங் கலியைத் தூர்ப் பதே யன்றி நாளைவா வென்
றுரைத்திடான்
நம்பினோர்க் கருள் தரு தயாபரன் வெம்பினோர்க்கரி
யேறனுன்
வாவின் றடக்கைத் சந்திர சேகர மாணுதலி வாழ்கவே''

என்றுபருளை விநாயகர் பள்ளில் சந்திரசேகரமாணுமுதலியைப் புகழ்ந்துள்ளார்.

''கரியலர்கள் மௌலிகனி விசயரகுநாயகன்'' என்று விசயரகுநாயகனைப் போற்றியுள்ளார்.

''கண்டி மன்னன் பரராச சிங்கன்'' என்கிறார் இராசசிங்கன் என்ற கண்டி நாட்டரசனை.

இனி முன்னோர் மொழியைப் பொன்னே போற் போற்றும் மனப்பான்மை பொருந்தியவர் சின்னத்தம்பிப் புலவர். இதற்கு சான்றாக சொற்பிரயோக மொன்றினை எடுத்துக் காட்டுவாம். அபிராமியந்தாதி ஐந்தாஞ்செய்யுளிலே,

''சொற்புரை செய்யும் புணர்முலையால் வருந்திய வஞ்சிமருங்குன் மனோன்மணி'' என்றதொடரில் ''மனோன்மணி'' என்றபிரயோகம் வந்துண்டு. இதனையே சரியான பாடமாகக் கொண்டார் ஈழத்துரையாசிரியர் என்றுபோற்றப்படும் ம. க. வேற்பிள்ளை இது பாடத்தினைச் சின்னத்தம்பிப்புலவரும் ஏற்றுத் தமது பருளைவிநாயகர் பள்ளில்,

''அன்னை தேவிமனோன்மணி தொய்தை அமுததாரை பருகிய நேசன்', என்று எழுதிக் காட்டியுள்ளார். இதுவே புலவர்கள் கொண்ட பாடம் போலும்.

சங்கமொழியில் மனோன்மநி என்றிருப்பதைத் தமிழ்முறைப்படி ''மனோன்மனி'' என்ற எழுதப்பட்டு வரலாயிற்று. அதனைஇக்காலத்தில் மனோன்மணி என்றுசொல்லியும் வருகிறார்கள்.


இவையெல்லாம் ஒருபுறமிருகக, புலவரின் நூல்களைப் பதிப்பித்தார் ஒருசில தவறுதனைக்கவனியாது பதிப்பித்து விட்டார் போலக்காணப்படுகின்றது, கல்வளையந்தாதியிலே பதினேழாம்செய்யுளிலே ''சிந்தாமணி வரக் காணேும்'' என்று பதிப்பித்துள்ளார். ''காணேும்'' என்றிருப்பது ''காணேம்''என்றிருத்தல் வேண்டும். ஓகாரம் என்றும் எதிர்மறையாக வந்தமை எங்கும்கண்டிலோம். ஏகாரமே எதிர்மறைப் பொருளைத் தருவது. காணேம் என்பது காணேன் என்பதன் பன்மை. காணேும் என்பதுசரியாயின் அதன் ஒருமையும் காணேும் ஆகும். அவ்வாறு பிரயோகமில்லை. மேலும் காணேும் என்ற பாடத்திற்குக் கண்டிலேம் என்றபொருள் எழுதப்பட்டிருக்கிறது. கண்டிலோம் என்று எழுதப்படாததையும் நோக்குக.

அடுத்து பருளைவிநாயகர் பள்ளுப் பதிப்பில் 'அரும்பதக் குறிப்புரையுஞ் சேர்க்கப்பட்

(12ம் பக்கம் பார்க்க)

National தரும் திருத்தி அமைக்கப்பட்ட தொழில்நுட்பம்.
புதிய TC 230w 51 cm (20'')
வர்ண ரெலிவிஷன்.
விலை ரூபா: 14,750/-
80v-290v வோல்ற்ரேச் சீராக்கி
SECAM/PAL
கவர்ச்சியான மரக் கபினெற்
இரண்டு வருட உத்தரவாதத்துடன்
14'', 17'', 20'' கறுப்பு/வெள்ளை
ரெலிவிஷன்களும் உண்டு.
நெஷனல் ரி. வி.க்களின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், உடனுக்குடன் திருத்திக் கொள்ளவும் :
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 17வது ஒலிம்பிக்: பார்வையாளர்கள் அனைவரிடமும் தீப்பந்தங்கள்!

இத்தாலி நாட்டில் ரோமாபுரியில் 1960ம் ஆண்டு 17-வது ஒலிம்பிக்போட்டிகள் ஆரம்பமாயின. உலகில் பல பாகங்களிலிருந்தும், இங்கு வந்து கூடிய 5396 வீரர்களையும், வீராங்கனைகளையும் அப்போதைய போப்பாண்டவர் ஜோன் - 23 ஆசீர்வதித்தார்.

## அதிர்ச்சி

## ஒலிம்பிக்

இப்போட்டிகளை ''அதிர்ச்சி ஒலிம்பிக் என்று குறிப்பிடலாம். ஏனெனில் அனேகமான போட்டிகளில் எதிர்பாராத முடிவுகள் ஏற்பட்டன

முதலாவது அதிர்ச்சி... 28 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவின் ஏகபோக உரிமையாகவிருந்த ஆண்களின் 100 மீட்டர் ஓட்டமும், 200 மீட்டர் ஓட்டமும், முறையே ஜெர்மன்வீரராலும் இத்தாலிய வீரராலும் வெல்லப்பட்டன.

100 மீட்டர் ஓட்டத்தில் ஏ. ஹரி என்ற ஜெர்மனியரும் 200 மீட்டர் ஓட்டத்தில் லெவியோ பெருட்டி என்ற இத்தாலியரும், அமெரிக்க வீரர்களைத் தோற்கடித்து தங்கப்பதக்கங்களை வென்றனர்.

மரதன் ஓட்டத்தில், யாருமே எதிர்பாரதவகையில், எத்தியோப்பிய மன்னரின் மெய்க்காவற்படையைச் சேர்ந்த, 28 வயதான அபே பேபிகிலா என்றவீரர், மரதன் ஓட்டத்தூரமான 26 மைல் 385 யார்தூரத்தை, வெறுங்காலுடனேயே ஓடிக் கடந்து, புதியசாதனையையும் நிறுவி, வெற்றிபெற்றார்.

பீட்டர் ஸ்னெல் என்ற நியூசிலாந்து வீரர் 800 மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கத்தைப் பெற்றார்.

## ஒலிம்பிக்

## போட்டிகளின்

## ராணி

ஆனால் இவர்களெல்லோரையும் விட, ''ரோமாபுரி ஒலிம்பிக் போட்டிகளின் ராணி'' யாகத்திகழ்ந்தார்— வில்மா ருடோல்ப் என்ற அமெரிக்க நீக்ரோ வீராங்கனை. 100 மீட்டர் ஓட்டத்தில், 11 செக்கன்களில் ஓடி முடித்து, முந்திய உலகச் சாதனையை 3 செக்கன்களால் முறியடித்தார். ஆனால் இப்போட்டி நடந்தபோது, மிதமிஞ்சிய காற்று வீசியதைக் காரணம்காட்டி இந்த உலகச் சாதனையை அங்கீகரிக்க மறுத்து விட்டார்கள் ஆனால் சளைக்காத, வில்மாருடோல்ப். 200 மீட்டர் ஓட்டத்திலும், 4× 100 மீட்டர் தொடர் ஓட்டத்திலும் தங்கப்பதக்கங்களைத் தட்டிக்கொண்டார்.

இன்னுமொரு அதிர்ச்சி.. 32 வருடங்களுக்கு மேலாக, ஹொக்கியில் ஒலிம்பிக் சம்பியன்களாக விளங்கிய இந்தியா, தனது அண்டை நாடான பாகிஸ்தானிடம்தன் கிரீடத்தைப் பறிகொடுத்ததும் இப்போட்டிகளில் தான். இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் 1-0 கோல்களினல் இந்தியாவைத் தோற்கடித்தது

தங்கப்பதக்கங்களை வென்றார்கள்

தாய்வான் என்று இப்போது அழைக்கப்படும் தேசியசீன இப்போட்டிகளில் போர்மோசா என்ற பெயரில் தான் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டது. தங்களை தேசியசீன எனப் பங்குபற்ற அனுமதிக்கப்படாவிட்டால், போட்டியிலிருந்து விலகப்போவதாக ஆரம்பத்தில் கூறியபோதும், அவர்கள் இறுதியில் அப்படிச் செய்யவில்லை.

17வது ஒலிம்பிக்போட்டிகளில் சோவியத்யூனியன் .03 பதக்கங்களையும், ஐக்கியஅமெரிக்கா 71 பதக்கங்களையும் ஜெர்மெனி 42 பதக்கங்களையும் பெற்றுமுதல்மூன்று இடங்களையும் தட்டிக்கொண்டன.

இறுதிநாளும் வந்தது. கடைசிப்போட்டிகளும் நடந்துமுடிந்தன 17வது ஒலிம்பிக்போட்டிகள் உத்தியோக பூர்வமாக முடித்து வைக்கப்பட்டது. சூரியன்மறைய, பிரதான அரங்கமெங்கும் இருள்சூழ்ந்தது இந்நேரத்தில்தான், ஆதிகால ரோமர்களின் வழக்கமென்று மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது.

## அரங்குமுழுவதிலும்

## தீப்பந்தங்கள்

அரங்கிலிருந்த ஒருலட்சத்துக்கு மேற்பட்ட பார்வையாளர்கள், தங்கள்கைகளிலிருந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் நிகழ்ச்சிநிரல்கள் முதலானவற்றுக்கு தீ மூட்டி உயரப் பிடித்து அசைத்தனர். தங்களுக்கோ, பக்கத்திலிருந்தவர்களுக்கோ தீக்காயங்கள் ஏற்படும் என்றுகூட அவர்கள் சிந்திக்கவில்லை. இருளைக்கிழித்துக்கொண்டு அரங்கின் நாலா பக்கங்களிலிருந்தும் தீப்பந்தங்கள் அசைந்த இந்த அற்புதமான - மிகவெளிச்சமான முடிவுடன் ரோமாபுரியில் நடந்த 17வது ஒலிம்பிக் போட்டிகள் முடிவுற்றன.

(தொடரும்)

கலைஞர்
கே. எஸ். பாலச்சந்திரன் எழுதும்
ஒலிம்பிக் போட்டிகள் — 9

# நுணுக்கத் திறமைக்கு எடுத்துக்காட்டு ட்ரூபோவின் 'ஸ்வீற்ஸ்கின்'

திரைப்பட வரலாற்றில் பிரான்சுக்கென்று தனித்துவமான இடமொன்றுண்டு. திரைப்படத்தை அதன் உண்மையான அர்த்தத்தில் புரிந்து கொண்ட பல திரைப்படக் கலைஞர்கள் இங்கு பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டினர். உலகத் திரைப்படங்கள் பற்றிப் பேசப்படும்போது ப்ரான்செஸ் ட்ரூபோ, ஜீன் கோடாட், ஜீன்றெனயர், குரூட் சப்ரோல், றிவேட்டி, சாக்ஸ் ரோமர் 'ஆகியோரை விட்டு விடமுடியாது.

பிரான்சின் திரைப்படத் துறையில் புதியதொரு பரிமாணத்தை ஏற்படுத்திய புதிய அலை' எழுச்சிக் காலகட்டத்தில் ட்ரூபோவின் பங்கு மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. மனிதனின் பல்வேறு பிராயங்களில் மனித உறவுகளில் காணப்படும் மென்மையான அம்சங்களோடு ஒரு தவிர்க்கமுடியாத சோகம் இழையோடுவதை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் திரைப்படங்களாக்கினர். எளிமையும், நுட்பமும் நிறைந்த இவரது திரைப்படங்கள் மூலம் இவர் திரைப்பட வரலாற்றில் அழியாத சுவடுகளைப் பதித்துச் சென்றுள்ளார்.

வியாபாரத்தனமான திரைப்படங்களின் ஆதிக்கச் சூழலில் ட்ரூபோ போன்றோர்களது படைப்புக்களை அனுபவிக்க முடியாது போய்விடுவது கலையார்வமுள்ளவர்களுக்குப் பேரிழப்பாகத்தான் இருக்கமுடியும் இவரது திரைப்படமொன்றை- ஸ்வீற் ஸ்கின்- ['லா போ தூஸ்'] அண்மையில் 'அல்லயன் பிரான்ஸ்' யாழ்ப்பாணக் கிளை மூலம் பார்க்கக் கிடைத்தவர்கள் அதிஷ்டசாலிகளே

நடுத்தர வயதுடைய பியரரே ஒரு எழுத்தாளர். மனைவி மகளுடன் சந்தோஷமாக வாழும் அவர் விமானப் பணிப்பெண் ஒருத்தியால் கவரப்படுகின்றார் முதலில் அவருடன் மதுவருந்த மறுத்துவிட்ட அவள் பின்னர் இணங்குகிறாள் இருவரது உறவும் நெருக்கமடைகிறது. மனைவிக்குப் பொய்க் காரணங்களைக் கூறிவிட்டு பியரரே தனது ஆசைநாயகியுடன் வேறு இடத்துக்குப் போகிறான் அங்கு சுதந்திரமாகவே இருவரும் உறவுகொண்டு மகிழ்கின்றனர். பியரரேயின் மீது மனைவிக்குச் சந்தேகமேற்படுகின்றது. குடும்ப உறவுகள் குலைந்துபோகின்றன. இருவரும் பிரிந்து வாழுகின்றனர் பியரரே தனது ஆசைநாயகியுடன் காணப்படும் புகைப்படங்கள் மனைவியின் கைக்குக் கிடைக்கின்றன. அதேவேளை மனைவியிடம் திரும்பிவரும் நோக்கில் மனைவியின் பதிலுக்காக ஹோட்டல் ஒன்றில் காத்திருக்கிறான் அவன். ஆனால் துப்பாக்கியுடன் அங்குவந்த அவன்மனைவி குறிப்பிட்ட புகைப்படங்களை அவன் முகத்தில் வீசியெறிந்துவிட்டு அவனைச் சுட்டுக்கொன்று விடுகிறாள்

சசி. கிருஷ்ணமூர்த்தி

குடும்பச்சிக்கல், பாலுணர்வுக் கவர்ச்சி இவற்றை ட்ரூபோ கொச்சப்படுத்தாத விதத்தில் எளிமையுடனும், நுட்பத்துடனும் யதார்த்தமாகப் படமாக்கியுள்ளமைபார்ப்பவர்க்கு வியப்பை அளிக்கின்றது

பியரரேயாக நடிக்கும் ஜீன் டெசைலி அவரது மனைவியாக நடிக்கும் ப்ரான் கொய்சே டொலேக், பியரரேயின் காதலியாக நடிக்கும் நெல்லி பெனடே (இவர் 25 வயதிலேயே மரணமாகிப் போனார்) ஆகிய மூவரது நடிப்பும் இயல்பாகவும் எளிமையாகவும், உளவியல் பாங்கை வெளிப்படுத்தும் விதத்திலும் அமைந்திருந்தது.

வெறும் [illegible] பதிவு செய்யாது உணர்வுகளைப் பதிவுசெய்யும் விதத்தில் [illegible] கோடார், சமிரானை [illegible] தியாகஸ், [illegible]

# வீரர் காஸியஸ்கிளே (முகமதுஅலி) படுக்கைக்குச் சென்றபோதும் ஒலிம்பிக் பதக்கத்தைக் கழுத்திலிருந்து கழற்றவில்லை!

## முகமதுஅலிக்கு

## தங்கப்பதக்கம்

குத்துச் சண்டையில், குறைநதஅதிபார (Lightheavy Weight)பிரிவில், காசியல்கிளே (CassiusClay) என்ற18 வயதேயான அமெரிக்க நீக்கிரோ வீரர், தங்கப்பதக்கத்தை வென்றார் சந்தோசத்தின் காரணமாக அவர் 48 மணித்தியாலங்களாக தனது தங்கப் பதக்கத்தை கழுத்திலே அணிந்து கொண்டிருந்தார். இரவு படுக்கைக்கு போகும் போது கூட அதைக் கழற்றவேயில்லை. இந்த ''காசியஸ்கிளே'' தான், பின்னர் ''முகமது அலி' என்றபெயரில் நம் எல்லோருக்கும் அறிமுகமான புகழ்பெற்ற அதிபராக குத்துச் சண்டை வீரராக விளங்கியவர்.

இம்முறை சோவியத் யூனியனைச் சேர்ந்த இரு சகோதரிகள் தங்கப்பதக்கங்களை வென்றனர் ஐரீனு பிரஸ் என்பவர் 80 [illegible] ஓட்டத்திலும், தமாரா பிரஸ் [illegible]

## விளையாட்டு

- அனந்த்

## ஹீ ஹீ

ஒருவர்: என்ன, உங்க மகள் முந்தியெல்லாம் ஆட்களைக் கண்டால் பதுங்குவா, கூச்சப்படுவா, அலைக்குள்ளை ஓடிஒளிவா - இப்ப எப்பிடி அவ கூச்சப்படாமல் எல்லோர் முன்னலையும் இருந்து கதைக்கிரு, சிரிக்கிரு...

மற்றவர்: அவ எங்களோடை அகதி முகாமில் இருந்தவ. அவ, ஒளியிறத்துக்கு அறை கிடையாது. எல்லா ஆட்களுக்கு முன்னலையும் இருநது பழகி இப்ப அவவுக்குக் கூச்சம் தெளிஞ்சிட்டுது.

இ. பாலகுமார்


## நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

★ தாமதம் ★ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச் சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world
at Unbeatable Rates

TFC
த பிறென்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

ஆசை அலைகளால் அவப் பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம். வீட்டில் சிறு பிணி தலைதூக்கும் சிறியவிடயத்திற்குக்கூட பெரிய கோபம் தோன்றக்கூடும். பெரியார் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும். நாவடக்கம் நன்று.

## ரிஷபம்

இவ்வாரம் இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறலாம். பணவிவகாரத்தில் திருப்தியான நிலை தென்படும். மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர். சிலர் வாழ்க்கையில் இவ்வாரம் அதிஷ்ட இலாபங்களுக்கும் இடமுண்டு.

## மிதுனம்

இவ்வாரம் முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படலாம். சகோதர வழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு. பூமிப் பிணக்குகளைத் தவிர்த்துக் கொள்ளவும். புதியபணிகளில் தாமதம் தென்படும். ஆணவப் போக்கினால் ஆபத்துக்கள் ஏற்படலாம். அடக்கம் வேண்டும்.

## கடகம்

இவ்வாரம் தாய்வழித் தனவரவிற்கும் இடமுண்டு. குடும்பத்தில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும். கல்வித் துறையில் அதிக ஆர்வம் பிறக்கும். ஆசிரியர்கள் போற்றப்படுவார்கள். ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் ஏற்படும். கலைஞர்களுக்கு முன்னேற்றம் தென்படும்.

## சிம்மம்

புதியகாரியங்களில் இவ்வாரம் உற்சாகம் பிறக்கும். பிள்ளைகளினாலும் பெருமைக்கு இடமுண்டு தொழில்புரியுமிடத்தில் செல்வாக்குப் பெருகும். சிலருக்குக் காதல் விவகாரம் தலைதூக்கும்.

## கன்னி

இவ்வாரம் தொழில் நஷ்டமடையக்கூடும். இடப்பிரிவும் உண்டு. உடல் சுகாதாரம் வேண்டும். மனதில் அமைதி நிலைநிற்காது. திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்வது நன்று. இவ்வாரம் தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

## துலாம்

இவ்வாரம் வாழ்க்கையில் தென்றல்வீசும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இவ்வாரம் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். நீண்ட நாள் பகைஇன்று நிவர்த்தியாகும். காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புகள் இறுகும்.

## விருச்சிகம்

இவ்வாரம் பணத்தைக் கொடுத்து பகையை சம்பாதித்துக் கொள்வீர்கள். தொழில் துறையில் சோர்வுதென்படும். நண்பர்கள் மூலம் புதிய தொல்லைகள் தோன்றக்கூடும். நிதானபுத்தியுடன் நடந்து கொள்வது நன்று. வணிகர்கள் வாழ்க்கையில் சோதனை நிறைந்ததாக இருக்கும்.

## தனுசு

இவ்வாரம் வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் கைகூடும். இரக்க சிந்தனை மேவிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்துத்தொடர்புகள் ஏற்படுவதற்கு இடமுண்டு. கண்ணியமான வாரம்.

## மகரம்

இவ்வாரம் செய்தொழில் சிறப்படைவதற்கு இடமுண்டு. புதியகண்டு பிடிப்புகளும் இடம்பெறும் பொறியியலாளர்களுக்கு சிறப்பான தினம். சிலருக்கு அரசினர் விருதும் கிடைக்கலாம். தொடர்புகளாலும் திருப்தியுண்டு.

## கும்பம்

இவ்வாரம்பொருளாதார் நிலை சீரடையும். சிலருக்கு எதிர்பாராத வரவுக்கிடமுண்டு நிகிநிலமையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படும் வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவர்.

## மீனம்

இவ்வாரம் எதிர்பாராத விளைவுகள் மூலம் செலவினங்கள் அதிகமாகும் சிலர்கடன் படவும் நேரலாம். பிணிக்கு இடம்கொடாது இருக்கவும். பலவித சிந்தனைகளால் தாக்கப் படுவீர்கள. திரைமறைவில் மோசடிநடக்கும் நம்பிக்கையின் மூலம் பணம்விரயமாகும்.

திருமலை.
வே. ரவீந்திரன்


# வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

## மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154


# விசித்திரமான விலங்கினங்கள்

கோ.·.பர்

பார்வைக்கு எலி போல் இருக்கும் பொக்கட் கோஃபர்'' வட அமெரிக்காவில் மட்டுமே காணப்படுகின்றது. இதன் இருகன்னங்களிலும்பக்கவாட்டில் பைகள் இருக்கின்றன. இம்மாதிரிப் பொக்கட் இருப்பதால்தான் இதற்குப் பொக்கட் கோஃபர் என்ற பெயர் வந்தது இப்பிராணி தனக்கு கிடைக்கும்பழம்விதை முதலியவற்றில் உணவதை விட மிஞ்சுபவற்றை அந்தப் பைகளில் திணித்துத் தனது இருப்பிடத்திற்கு எடுத்துச் செல்லும் சில சமயங்களில் பைநிறைய அடைதது திணித்துவிட்டால் கொட்டைகள் சுலபமாக வெளியில் வர மாட்டா அப்போது அது தனது கைகளால் கன்னத்தைத்தட்டி அடித்துப் பிதுக்கி அவற்றை வெளியே கொண்டு வர முயற்சி செய்வது மிகவும் வேடிக்கையாக இருக்கும் இவை நிலத்துக்கு கீழேபொந்துகளில் வசிக்கின்றன இவற்றைப்போல வேகமாக வளை தோண்ட எம்மால் முடியாது.

ஒரே இரவில் 200-300 அடி சுரங்கப்பாதையை இவை அமைத்துவிடும் இதன் வளையில் மாடி, படுக்கை அறை, சாமான்கள் அறை, என்று பலவிதமான அறைகள் உள்ளன. மலசலம் கழிக்கஎன்றும் தனியான ஓர் அறைகூட இருக்கும். படுக்கை அறையில் புல் இலைகளைப் பரப்பி வைத்து இருக்கும் சாதாரணமாக இவை தனித்தனியாகவே வசிக்கின்றன தப்பித்தவறி இரு பொக்கட் கோஃபர்கள் சந்தித்துவிட்டால் அவ்வளவு தான் இரண்டிற்கும் இடையில் சண்டை மூண்டுவிடும் இந்த விபரங்களை அமெரிக்க ஆராய்சியாளர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

## மார்மோசட்

மார்மோசட் என்னும் சிறிய குரங்குகள் அணில் அளவே உள்ள அழகிய பிராணிகள். மற்றைய குரங்குகள் ஒரு தடவை ஒரு குட்டிதான் போடும். ஆனால் இது இரண்டு மூன்று குட்டிகளைக் கூடப் போடும் மற்றைய குரங்குகளுக்கும் இந்தக் குரங்குகளுக்கும் உள்ளவித்தியாசம் என்னவென்றால் மற்றைய குரங்குகளைப்போலக் குட்டிகளைத் தாய்க் குரங்கு தூக்கிச்செல்லுவதில்லை. அவை தகப்பன் முதுகிலே சவாரிசெய்யும் பால் குடிப்பதற்கு மட்டும் தாயிடம் செல்கின்றன.

## பற்றைநாய்

பிரேஸில், பிரிட்டிஸ், கயானு ஆகிய இடங்களில் மட்டும் காணப்படும் பற்றை நாய் ஒருஅபூர்வ மிருகமாகும் இரவினில் மிருகங்களை வேட்டையாடி உண்ணும் இந்த பற்றைநாயை வேட்டைக்காரன் என்றுமக்கள் அழைப்பர். உருவத்தில் சிறிதாக தோற்றமளிக்கும் பற்றைநாய் மிகவும் பயங்கரமானது குறுகியகால்களும் கட்டையான வாலும் உடைய பற்றைநாய் பகல் வேளைகளில் பற்றைக்குள் படுத்துஉறங்கும் இரவிலே உணவுதேடப் புறப்படும்.

(முற்றும்)

வி. என். எஸ். உதயசந்திரன்

# கல்விச்செல்வம்

எங்கள் செல்வம் கல்வி யென்று
எண்ணு வோமடா — அதனை
ஏற்றுக் கொள்ளப் பள்ளிக் கூடம்
செல்லு வோமெடா

பள்ளிக் கூடம் எங்க ளுக்குப்
பாது காப்படா — அதனைப்
பாது காக்க எங்க ளுக்கும்
பங்கு உண்டெடா

பிள்ளைச் செல்வம் பெற்றோ ருக்குப்
பெரிய தாமெடா — அந்தப்
பிள்ளைச் செல்வம் கல்விச் செல்வம்
பேண லாமெடா

செல்வ மீட்டிச் செல்வம் சேர்க்கும்
செம்மைப் பாங்கெடா — கல்விச்
செல்வ மீட்டிச் சீரைத் தேடிச்
செல்லுவோமடா

அரியாலையூர் வே. ஐயாத்துரை




# சேவல் செய்த சதி

பிலோராம்சந்த்

ஒரு நகை வியாபாரியிடம் சுந்தரம் என்ற நகை செய்யும் தொழிலாளி வேலை செய்து வந்தான். அவன் தன் எஜமானிடம் நேர்மையும் விசுவாசமும் உள்ளவன் எவ்விதமான நகையைச் செய்வதிலும் அவன் திறமை பெற்றிருந்தான்.

ஒரு நாள் வியாபாரியிடம் ஒருவன் விலை மதிப்புள்ள சிறிய முத்துக்களைக் கொடுத்து பவுண் சங்கிலியில் இடைக்கிடை இம் முத்துக்களைக் கட்டித்தருமாறு கேட்டான். வியாபாரியும் சுந்தரத்தை அழைத்து முத்துக்களைச் சங்கிலியில் கட்டித் தருமாறு சொன்னான். சுந்தரம் அதைப் பெற்றுக்கொண்டு உள்ளே சென்றவன் அம்முத்துக்கள் தொலைந்து விடாமல் ஒரு நூலில் கோத்து பக்கத்தில் வைத்துக்கொண்டு வேலையைத் தொடங்கினான்.

சிறிது நேரத்தில் கொல்லைப்புறமாக இரை தேடிக்கொண்டிருந்த ஒரு சேவல் அங்கே உள்ளிட்டது. அச்சமயம் தண்ணீர் குடிக்கவென்று சுந்தரம் எழுந்து சென்றான் அப்பொழுது அம் முத்துக் கோர்வையைக் கண்ட சேவல் அதனைப் புழு என்று நினைத்து விழுங்கிவிட்டு அங்கிருந்து வெளியே போய்விட்டது தண்ணீர் குடித்துவிட்டு வந்த சுந்தரம் முத்துக்களைக் காணாது பதறினான். தன் எஜமானிடம் ஓடிச் சென்று கூறினான். அவரோ ''இங்கு யாரும் வரவில்லை நான் இங்குதானே இருக்கிறேன் உன்னைத் தவிர யாரும் எடுத்திருக்க முடியாது நீ ஒளித்துவிட்டு நாடகம் ஆடுகிறாய்'' என்று கோபத்தில் கத்தினார்.

அவனோ ''எஜமான். என்னை நம்புங்கள். நான செய்யும் தொழில் மேல் ஆணையாகச் சொல்கிறேன் நான் எடுகக

(12ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

**1658** ஆம் ஆண்டு, மாசி மாதம், 19ஆம் திகதி

மாந்தை என்றும் மதோட்டம் என்றும் பண்டை நாளில் புகழ்பெற்ற மன்னார்த்துறையில் போர்த்துக்கீசரின் கோட்டை அமைந்திருந்தது. யாழ்ப்பட்டினக் கோட்டை போன்று நான்கு கொத்தளங்களையும் பிறைவடிவச் சுவர்களையும் கொண்டதாகவே இது காணப்பட்டது. ஏறத்தாழ பதினான்கு அடிகள் அசலமான சுவர்கள் கோட்டையின் பாதுகாப்பரண்களாக விளங்கின. கோட்டைக்குள் அதிகாரிகளின் மாளிகைகளும் படைவீரர் பாசறைகளும் அமைந்திருந்தன.

இக்கோட்டையை அமைப்பதற்குப் போர்த்துக்கீசர் பழம் பெரும்பதியான திருக்கேதீஸ்வர சிவாலயத்தைத் தகர்த்து அக்கற்களையே காவி வந்து பயன்படுத்தினர். இக்கோட்டைக்கு வடக்கே ஒரு காத தூரத்தில் பாலாவிக் கரையில் ஒரு காலத்தில் வானளாவி உயர்ந்திருந்த கோபுரங்களும் விமானங்களும் கொண்டிருந்த திருக்கேதீஸ்வரம் தரைமட்டமாகி சிதிலமடைந்து கிடந்தது

மன்னார்க் கோட்டையின் உயர்ந்த கொத்தளத்திலிருந்து பார்க்கும் போது மன்னார்ப் பிரதேசமும் துறைமுகக் கடற் பரப்பும் தெளிவாகத் தெரிந்தன. கோட்டைக்குக் கிழக்கே அடர் காடும் இடையிடையே கிராமங்களும் பரவிக் கிடந்தன. வடக்கே காடும் பெரும் மேடாகத் திருக்கேதீஸ்வரமும் காணப்பட்டன. தெற்கே வங்காலைக் கிராமம் தெரிந்தது.

கிழக்கே கடல் விரிந்து கிடந்தது. கொத்தளத்தின் உயர் பீடத்தில் அக்கோட்டையின் கமாண்டர் அன்ரோனியோ டி அமிருல கவலையுடன் நின்றிருந்தான். அவன் விழிகள் கடல் பரப்பைக் கலக்கத்துடன் அவதானித்தன. கடலின் அடிவான விளிம்பில் பெரிதும் சிறிதுமாக ஒல்லாந்தரின் யுத்தக் கப்பல்கள் காணப்பட்டன. தொலைநோக்கியால் பார்க்கும்போது அக்கப்பல்களின் பிரமாண்டமும் வலிமையும் தெளிவாகத் தெரிந்தன பாய்கள் சோழகக் காற்றின் ஊதலிற்கு விம்மிப் புடைத்து மன்னார்க் கோட்டையை இலக்காகக் கொண்டு நகர்வது தெரிந்தது மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றும் நோக்குடன் ஒல்லாந்தக், கடற்படை புறப்பட்டுவிட்ட செய் முன்னரே கமாண்டர் அமிருல் அறிந்த விடயமே. எனினும் இவ்வளவு விரைவாக இப்படையெடுப்பு நடக்கும் என அவன் எதிர்பார்க்கவில்லை. மன்னாரில் தரித்து நின்றிருந்த போர்க்கப்பல்களில் ஒரு பகுதி நாகபட்டினத்திற்கு சென்றுவிட்டது. அவற்றுடன் இக்கோட்டையின் காவல் வீரர்களின் ஒருபகுதியினரும் சென்றுவிட்டனர். ஆக இப்போது மன்னார்ப் பகுதியில் போர்த்துக்கீசப்படைவீரர்களாகஇருப்பவர்களின் எண்ணிக்கை நானூற்று எழுபத்தினான்காகும்.

போர்த்துக்கீசப் படைவீரர்களின் அரைப்பங்கினருக்கு மேல் மலபார் வீரர்களாகவும் காப்பிரிவீரர்களாகவும் இருந்தனர், அவர்களில் ஒருபகுதியினர் கடற்கரையோரமாக அணிவகுத்து நின்றனர் பதினான்கு கப்பல்கள் துறைமுகத்தில் யுத்தத்திற்குத் தயார் நிலையில் நின்றன அக்கப்பல்கள் அளவிற் பெரியனவாகவில்லை பக்கத்திற்கு நான்கு பீரங்கிகளைக் கொண்ட சிறிய யுத்தக் கப்பல்களாகும்.

கடலை நோக்கி காவலரணில் பீரங்கிகள் குண்டுகளைப் பொழிவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தன. கோட்டைமதில்களில் எதிரிகளைத் தாக்குவதற்குத் தயாராக வீரர்கள் நின்றிருந்தார்கள்

கடல் பரப்பைக்கவலையோடு தொலைநோக்கியில் அவதானித்துக்கொண்டிருந்த கமாண்டர் அமிருலின் இதயம் ஒரு கணம் நின்று துடித்தது நடுக்கடலில் கப்பலில்ச் செல்லும் போது பெரும் புயலைக் கண்டவன் போல் சில கணங்கள் பதறிப் போனான்

அவன் கலக்கத்திற்குக் காரணம், ஒல்லாந்தர்களின் போர்க்கப்பல்களை வழி நடத்தி வரும் கப்பல்தான். இந்து சமுத்திரத்தில் அக்காலவேளையில் போர்க் கப்பல்களுக்குப் பெரும் சிம்மசொப்பனமாக விளங்கிய நார்டென் என்றயுத்தக் கப்பல் ஒல்லாந்தக் கப்பல்களுக்கு வழி காட்டி வந்தது நார்டென் பாரிய யுத்தக் கப்பலாகும். இரு பிரதான பாய்களையும் இருபத்து நான்கு துணைப்பாய்களையும் கொண்டது காற்று மட்டும் வசதியாக வீசுமாயின் கடல் நீரைக் கிளித்துக்கொண்டு கடுகிவிரையக்கூடியது. பக்கத்திற்கு இருபது பீரங்கிகள் இக்

# கடல்கோட்டை



செங்கை ஆழியான்

கப்பலில் பொருத்தப்பட்டிருந்தன. மேல் தளத்தில் நான்கு பக்கங்களும் வசதியாகச் சுழன்று குண்டுகளைப் பொழியக்கூடிய சுழல் பீரங்கி ஒன்றும் அதிலிருந்தது.

அக்கப்பலில் கொமுசாறி றைக்லோப் வன்கோயன் என்பான் தளத்தில் நின்றிருந்தான். யாழ்ப்பாணத்தையும் மன்னாரையும் கைப்பற்றும் அதிகாரத்தையும் அனுமதியையும் பத்தேவியாவிலுள்ள ஒல்லாந்த வைஸ்ரோய் (இராசப்பிரதிநிதி அவனுக்கு வழங்கியிருந்தார். அவன் அருகில் கப்பல் தலைவன் றேப் என்பவன் கம்பீரமாக நின்றிருந்தான்.

நார்டென் போர்க்கப்பலைத் தொடர்ந்து இரண்டு கப்பல்கள் வந்தன. அவற்றைவிட பதினாறு சிறிய போர்க்கப்பல்களும் தொடர்ந்தன. அக்கப்பல்கள்யாவும் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்து வருவதும், பாய்கள் உப்பிப் புடைத்து நிற்பதும், காற்றின் வீசலிற்கிணங்க அவை ஒரு புறம் சற்றுச்சாய்ந்து விரைவதும் அற்புதமான காட்சியாக இருந்தது. அலைகளின் தாக்குதல்களை அலட்சியப்படுத்திவிட்டு அவை மன்னார்க் கோட்டையை இலக்காகக் கொண்டு விரைந்து வந்தன.

கொமுசாறி வன் கோயனின் முகத்தில் கலக்கம் தெரியவில்லை.

"றேப்..." என்று தன்னருகில் நின்றிருந்த கப்பல்தலைவனை அழைத்தான்; இன்றிரவே தாக்குதலை நடத்துவோமா?"

மேற்கு வானில் ஆதவன் சரிந்து கொண்டிருந்தான். கிழக்கே கரையில் கரும்புள்ளியாகக் கோட்டை தெரிந்தது.

"போர்த்துக்கீசரின் பீரங்கிகள் தாக்கமுடியாத இடத்தில் கப்பல்களை நங்கூரமிடுவோம். பின்னர் கரையை அணுகி நிலைமையைப் பார்[illegible]

"அவர்களின் போர்க்கப்பல்கள் தம்மிடத்தைவிட்டு நகரும் என நான் எதிர்பார்க்கவில்லை. அப்படி நகர்ந்தாலும் அவற்றினால் நம் கப்பல்களை ஊடுருவமுடியாது. ஒருநாள் தாக்குதலிற்குக் கூட இக்கோட்டை தாக்குப்பிடிக்காது என நினைக்கிறேன். மன்னார் எவ்வளவு வருமானமுள்ள பகுதி... உனக்குத் தெரியுமா, றேப்? மன்னாரின் முத்துக்குளித்தல் மூலமே 800 பற்று கொஸ்வருமானமாகக் கிடைக்கிறதாம். சுங்கவரியின் மூலம் 70000 பற்று கொஸ்சும். யானைகளின் விற்பனை மூலம் 60000 பற்றுகொஸ்சும் கிடைக்கின்றதாம். பாக்கும் இத்துறையினூடாக ஏற்றுமதியாகின்றதாம்...... இவற்றைப் போர்த்துக்கீசர் அனுபவிக்கவிட முடியாது... போர்த்துக்கீசரின் சாம்ராச்சியம் யாழ்ப்பட்டினத்தைக் கைப்பற்றியதும் இலங்கையில் அஸ்தமிக்கும், இன்றைய மாலைச் சூரியனைப் போல" என்றான் வன் கோயன் வெகு உற்சாகமாக.

கப்பல்கள் கரையை அணுக அணுகக் கோட்டைக்குள்ளும் கரையிலும் பரபரப்பு ஏற்பட்டது கப்பல்களின் எண்ணிக்கையும் அவற்றில் நின்றிருந்த வீரர்களின் எண்ணிக்கையும் போர்த்துக்கீச வீரர்களுக்குக் கலக்கத்தைக் கொடுத்தன.

ஒல்லாந்தக் கப்பல்களிலும் அத்தகைய ஒரு பரபரப்பு ஏற்பட்டது. கரையில் நின்றிருந்த போர்த்துக்கீசக்கப்பல்களின் பருமனும் எண்ணிக்கையும் அவர்களின் வெற்றியின் நிச்சயத்தை முன்கூட்டியே தெரிவிப்பனவாகவிருந்தன. அவர்கள் மகிழ்ச்சியில் பரபரத்தார்கள்

கப்ரின் வன்டேர் லியோன், கொமுசாறி வன் கோயனின் அருகில் வந்து கட்டளைக்காக நின்றான்.

"கப்ரின், இருள் சூழ்ந்ததும் சிறியபடகு ஒன்றில் கரைக்குச் செல். கூடவே, றெட்றிக்கோயையும், அலென் சோவையும் அழைத்துச் செல். கோட்டை நிலைமை... காவல் நிலை... போர்க்கப்பல்களின் நிலை என்பவற்றை அறிந்து வா... சடுங்காற்று வீசுகிறது. தென்மேற்கிலிருந்து வீசுகிறது. அவர்களுக்குக் காற்று வாய்ப்பாகவில்லை. அவர்கள் தங்கள் கப்பல்களை இப்போது எங்களை நோக்கி நகர்த்த முடியாது நீ நிலைமையறிந்து திரும்பியதும், அதிகாலை முதலாவது பீரங்கி முழங்கட்டும்..."

கொமுசாறி வன் கோயன் கூறியபடியே நடந்தது அதிகாலையின் பிறப்புடன் போர்க் கப்பல் நார்டென் முன்னேறி, முதலாவது பீரங்கியை முழக்கியது. அமைதியான அதிகாலையின் இனிமையை அப்பீரங்கியின் இடியோசைகுலைத்தது போர்க்கப்பல் நார்டெனும் வேறு ஐந்து சிறிய போர்க்கப்பல்களும் கரையை நோக்கி முன்னேறத் தொடங்கின மன்னார்க்கரையிலிருந்த போர்த்துக்கீசக் கப்பல்களும் எதிருக்குப் பீரங்கித்தாக்குதலை நடத்தியபோதிலும், நார்டென் கப்பல் நின்ற இடத்திற்கு அப்பீரங்கிக்குண்டுகள் வந்தடைய முடியவில்லை. அவை கடலில் விழுந்து [illegible] ன் பீரங்கிக் குண்டுகள்

பாயும் தொலைவு கூடுதலாக விருத்தலால். மூன்றாவது பீரங்கித் தாக்குதலினால் விடுபட்ட குண்டுகள் போர்த்துக்கீசக் கப்பல் ஒன்றின் ஒரு பக்கத்தைத் துளைத்தபடி பாய்ந்துவிட்டது அக்கப்பல் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. அக்கப்பலில் இருந்த வீரர்கள் கடலில் குதித்து கரையை நோக்கி நீந்தினர்.

ஒல்லாந்தக் கப்பல்களில் பலத்த ஆரவாரம் எழுந்தது. ஜயகோஷம் பிறந்தது.

நார்டென் கப்பல் தொடர்ச்சியாகப் போர்த்துக்கீசக்கப்பல்களை நோக்கிக் குண்டுகளைப் பொழிந்தது. ஒரு கண வேறுபாட்டில் படபடவெனத் தொடர்ந்து பாய்ந்த ஒரு பக்கம் பீரங்கிக்குண்டுகள் முடிந்ததும், அப்பெரிய கப்பல் மிக்க அலட்சியமாகத்திரும்பி மறுபக்கப் பீரங்கிகளை இயக்கியது ஒருமணி நேரத்திற்குள் போர்த்துக்கீசக் கப்பல்கள் யாவும் தீப்பிடித்து எரியத் தொடங்கியதுடன் கடலினுள் ஆழவும் தொடங்கின.

கப்பல்களைத் தாக்கி முறியடித்த நார்டெனின் பீரங்கிகள் கரையை நோக்கித் திரும்பின. நார்டென் கப்பல் வேகமாக முன்னேக்கிச் செலுத்தப்பட்டு கரையில் வரிசையாக நின்றிருந்த போர்த்துக்கீச வீரர்களைநோக்கிப் பீரங்கிக் குண்டுகளை வீசியது. பலர் சிதறிவிழுந்தனர்.

அதேவேளை சிறியபோர்க்கப்பல்கள் சில கரையைநோக்கி வேகமாக முன்னேறின சிறிய படகுகளில் ஒல்லாந்த வீரர்கள் கரைகளில் குதித்தனர். தொடர்ச்சியான இத்தாக்குதல்களால் கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மலாபார் வீரர்களும், காப்பிரி வீரர்களும் கொல்லப்பட்டனர். பயந்து புறமுதுகிட்டு ஓடியவர்கள், கோட்டைக்குள் நுழைய முடியவில்லை. கோட்டைக் கதவுகள் முன்கூட்டியே அடைக்கப்பட்டுவிட்டதால் அவர்களால் தப்பிஓடமுடியவில்லை.

## தொடர் நவீன சித்திரம்

அவர்களை துரத்திவந்த ஒல்லாந்தவீரர்கள் திரித்துப்பாக்கிகளாலும், இடித்துப்பாக்கிகளாலும் அவர்களை சுட்டுவீழ்த்தினர். நீண்ட வாட்களால் மலாபார்வீரர்களின் தலைகளைத் துண்டித்துத் தள்ளினர்.

கரையோரத்திலிருந்து கோட்டைவரை சரிந்தஉடல்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன.

மன்னார்கோட்டை சுற்றிவளைக்கப்பட்டது கடலைநோக்கிய கொத்தளத்திலிருந்து வெடித்தபீரங்கிகுண்டொன்று ஒல்லாந்தக் கப்பலொன்றின் பாய்மரத்தை துண்டித்து வீழ்த்தியது அதனைஎச்சரிக்கையாகக் கொண்டு சிறிய போர்கப்பல்கள் பின்வாங்கநார்டென் மீண்டும் முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டது. நார்டெனிலிருந்து தொடர்ந்து வெடித்த குண்டுகளுக்கு கோட்டையின் கடல் புறக் கொத்தளம் தாக்குப் பிடிக்க முடியாது நொருங்கிச் சரிந்தது.

## மன்னார் முற்றுகை

கொத்தளத்திலிருந்த பலவீரர்கள் கொல்லப்பட்டனர். கொத்தளத்திலிருந்து கட்டளையிட்டுக் கொண்டிருந்த கமாண்டர் அமிருல் படுகாயமடைந்தான். போர்த்துக்கீச கமாண்டர் அமிருல் நிலையைப் புரிந்துகொண்டான்.

எதிர்ப்பதால் எதுவித பலனுமில்லை என்பதைதெளிவாகத் தெரிந்துகொண்டான்: தாக்குதலை நிறுத்துமாறு தன்பக்க வீரர்களுக்கு கட்டளையிட்டான்.

கோட்டையின்மீது வெள்ளைக்கொடி ஏற்றப்பட்டது

ஒல்லாந்தர் ஆரவாரித்தனர்.

கோட்டைக்கதவுகள் திறந்தன ஒல்லாந்தப்படை உள் நுழைந்தது கொமுசாறிவன் கோயன், கப்ரின் வன்டேர் லியோனும் கப்பல் தலைவன் றேப்பும சூழகோட்டைக்குள் வந்தான்

கமாண்டர் அமிருல் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது ஒல்லாந்தரால் அக்கோட்டைக்குள் நூற்றியிருபத்து நான்கு பறங்கியர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஆறுபேர் போத்துக்கீசபெண்களாவர்.

கைது செய்யப்பட்டவர்கள் கைகளை உயர்த்தியபடி வரிசையாக நிறுத்தப்பட்டனர். கொமுசாறிவன்கோயன் அவர்கள் ஒவ்வொருவரையும் ஆழமாக ஏறிட்டுப் பார்த்தபடி வந்தான் வலிமையான உடலும் ஐம்பத்திரண்டு வயதும் நிரம்பிய வன்கோயனின் கண்களில் ஆசையிருந்தது வெகு நாட்களின் உடல்தவிப்பு இருந்தது. பயந்து நடுங்கியபடி நின்றிருந்த வெள்ளைப் பெண்களை ஊன்றிப்பார்த்தான்,

"கப்ரின்..." என்றுவன்டேர் லியோனை அழைத்தான்:" கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்?'

"முந்நூற்று ஐம்பது..."

"எங்கள் தரப்பில் இழப்பு?"

"பதின்மூன்று பேர்..."

"கைதாகியிருப்பவர்கள்?"

"நூற்று இருபத்திநான்கு..."

"இதில் கலியாணமானவர்கள் அதாவது இங்கு குடும்பமாக இருப்பவர்கள், எத்தனைபேர்?..."

' ஆறுபேர்...அதில் இருவர் கொல்லப்பட்டு விட்டார்கள். ஆதலால் இரண்டுஇளம் விதவைகள் உள்ளனர்..."

கொமுசாறிவன் கோயின் முகம்மலர்ந்தது.

"கலியாணமான நான்கு பெண்களையும் கோவாவிற்கு அனுப்பிவை...ஏனைய இளைஞர்களைக் கைதிகளாகப் பத்தேவியாவிற்கு அனுப்பிவை... விதவைகள் இருவரையும் கோட்டைக்குள் இருக்கச் செய்...'

விதவைப்பெண்கள் இருவரும் பெருங்குரலில் வீறிட்டழுதனர்.

(தொடரும்)

● இலங்கையில் இதுவரை 50 தமிழ்த்திரைப் படங் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 35 திரைப்படங்கள் திரைக்கு வந்துள்ளன. எந்தப்படமும் வெற்றியைத் தரவில்லை என்கிறார் ஒரு விசிறி.

சச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மான ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் நல்ல இதயம் படைத்த மக்களே அவரது சிறப்பான பண்பாடுகளுக்கு நல்ல எடுத்துக்காட்டு என நான் சாந்தியடைகிறேன். ஆனாலும் நான் சிறையில் இருந்து விடுதலை பெற்று வரும்வரை காத்திருப்பேன் என்று அவர்எனக்கு எதைச் சொல்ல காத்திருந்தார் என்பதை அறியமுடியாமல் ரவி செத்து விட்டாரே என கதறினாள். அந்த அழகி சிறையில் இருந்த சுவடுகள் அவளில் நிழலாடியது.

மரணஊர்வலம் மயானத்தை அடைந்தது. கிரியைகள் முடிந்தது. அடுக்கிவைக்கப்பட்ட விறகின்மேல் எஞ்சினியர் கிழவன்' மல்லாந்து படுத்திருப்பதை பார்க்கிறேன். "ஏ துரோகிகளே! மொட்டைக்கடிதங்கள் மூலம் நல்ல குடும்பங்களைப் பிரித்து மகிழும் நயவஞ்சகர்களே! உங்கள்செயலகளை ஆண்டவன் பார்த்துக் கொண்டேயிருக்கிறான் இன்று இல்லாவிடினும் என்றாவது அதற்குரிய தீர்ப்பு வழங்கப்படும்" என்று கூறிமேலே ஆண்டவனைப் பார்ப்பதுபோல் இருந்தது. அந்தக்கோலம்

பிரேதத்துக்கு முன்நீள்வட்டமாகச் சுற்றிநிற்கும் கூட்டத்தில் மைதிலியும் நிற்கிறாள் சிதைக்கு தீ மூட்டப்பட்டபின் பேரொளியாய் அந்தப்பிணம் எரிந்தது. அந்த வெளிச்சத்திலே தான் "எஞ்சினியர்கிழவன்" மைதிலிக்கு எழுதி-தலையணைக்கு கீழ்வைத்திருந்த கடிதங்கள் எட்டையும் எடுத்துமைதிலிக்கு நான் காட்டுகிறேன். ஒவ்வொரு கடிதத்திலும் 'அன்பானமைதிலிக்கு என்று ஆரம்பித்து அத்துடனேயே முடிக்கப்பட்டிருந்தன அக்கடிதங்கள்.

(யாவும்கற்பனை)

## தொடர் நவீனம்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பி இந்தளவு தூரம் வந்தவளிடம் இப்படி இறுக்கமாகக் கதைத்துக் கொண்டது தவறுபோல் தோன்றியது அவளைப் பார்க்க பரிதாபமாகவும் இரக்கமாகவும் இருந்தது.

"சுபா என்னை நம்பு... நான் என்றைக்கும் உனக்காகவே காத்திருப்பன்... காலம் காக்க வைக்கமாட்டன். மிகக் கிட்டத்தில உனக்கொரு முடிவைச் சொல்லுவன்"

பட்டமளிப்பு விழாவில் மீண்டும் சந்திப்போம் என்ற உற்சாகத்தில் பிரிந்து கொள்கிறோம்.

(தொடரும்)

## மங்களம்மாள் மாசிலாமணி

[6ம் பக்கத் தொடர்ச்சி]

முதலாவது புதுமைப்பெண் இவரெனவே கூறவேண்டும். அரசியலிற் புகுந்தும், காலங்காலமாக நிலவிவந்த சில கொள்கைகளைத் தடிந்தும், எளிமை வாழ்வைவாழ்ந்துங் காட்டிய இம்மாதரசியை எமது புத்துலக முன்னோடி எனக்கொள்ளல் சாலவும் தகும்.

இவர்பற்றிய மேலதிகத் தகவல்களைத் தரக்கூடிய பெரியோர்கள் சிலர் இன்றும் எம்மத்தியில் இருக்கின்றனர். இவருடன் நன்கு பயின்ற பெண்களும் உறவினர்களும் உளரே இவர்கள் அவரைப்பற்றிய தம் அனுபவங்களை 'ஈழநாடு' மூலம் வெளிக்கொண்டு வருவார்களாயின், இன்று விழித்தெழுந்த பல்கலைக்கழக மாணவிகளின் ஆய்வுகளுக்கு அளவுபேருதவியாக இருக்கும்.

## புதிய புத்தகம்

## க. சி. குலரத்தினம்

புதுமை தவழக் கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன அறுபத்தைந்து பக்கங்களுள் அருமருந்தன்ன இருபத்தைந்து கட்டுரைகள் அநுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் எழுதப்பெற்றுள்ளன. ஆண்மை பெண்மை தவழத் தவழக் கட்டுரைகள் முப்பெருமதத்தவர்களால் ஆக்கப்பெற்றுள்ளன. சைவத்தமிழ் முஸ்லிம் தமிழ் கிறிஸ்தவத் தமிழ் என்னும் நவீன முத்தமிழ் நடை பயிலப் பயிலக் கட்டுரைகள் வந்தமைந்துள்ளன.

கல்விப் பொதுத் தராதர (சா த) பரீட்சைக்கான தமிழ் மொழி வினாத்தாளில் இடம் பெறும் கட்டுரை தொடர்பான வினா மிக முக்கியமானதாகும். அக்கட்டுரைதானும் இந்நூலில் மொழித்திறனை அளவிடும் வகையில் வாணனை உரையாடல், மதிப்பீடு. கட்டுரைத்தல், கற்பனை, மேடைப் பேச்சு என்னும் அறுவகைப் பிரிவில் அமைந்துள்ளன. இன்னும் கலை, இலக்கியம், நாடகம், மருத்துவம், பொருளாதாரம், வரலாறு, முதலிய துறைகள் கைவந்த பட்டதாரிகள், பயிற்றப்பெற்ற பட்டதாரிகள், முதுமாணிகள், கலாநிதிகள் போன்ற பேரறிஞர்தம் கைவண்ணம் மாணாக்கர்களுக்குப் பீடு நடை பழகப் பெருவாய்ப்பளிக்கும் என்பது திண்ணம் இவை யாவும் புத்தம் புதியபோக்கில் போகின்ற வேகம் புது முறை என்ற தலைப்புக்கு ஏற்றதாகவுள்ளன.

விருந்தாகும். இந்நூலைப் பத்தாம் வகுப்பு மாணவர்களேயன்றி ஒன்பதாம் வகுப்பாரும் படித்துப்பழகிக் கொள்வது கல்விப்பொதுத்தராதரப் பத்திர பரீட்சையில், தமிழ் மொழிப்பாடத்தில் திறமைச் சித்திக்கு வழி காட்டுவதோடு நிரந்தரமாக மாணாக்கர்களின் தமிழ்நடை சிறந்து விளங்கவும் ஏதுவாக இருக்கும்

கட்டுரைகளின் அமைப்பு, கருத்து, நடை, நோக்கம் என்பன பலவாறாக இருத்தலின், அதன்தன்மையை வரம்பிட்டுவகுத்து விளக்கல் அரிது. கட்டுரை என்னும் ஒரே இலக்கிய வகையைச் சேர்ந்தவை பலவாறுவேறுபட்டுள்ளன என்பது வெளிப்படை. கட்டுரை ஆசிரியர்கள் கட்டுரையின்தன்மையை ஒவ்வொருவகையாக ஆராய்ந்து அறிந்துஅறியத் தந்துள்ளமைமாணாக்கர்களுக்கேயன்றி ஆசிரியப் பெரியார்களுக்கும் ஒரு வகையில் பெருவிருந்தாகும் என்று கூறினும் மிகையாகாது

கட்டுரை எழுதும் மரபு எமமைப் பொறுத்த அளவில் மேற்கு நாட்டு வழக்காறில் வந்தது என்றே கூறலாம்.

வேண்டும்.

கட்டுரை, பல்கிய பொருள் வளத்தைச் சுருக்கி கட்டுரைத்தல் பொருத்தமாகும் என்பதே மேல் நாட்டவர் கண்ட முடிபும் அவர்தம் துணிபுமாகும். இந்தவகையில் ஏ. ஜி. கார்டினர் பெருவெற்றி கண்டவர். சுருக்கத்தோடு இன்றியமையாது இருத்தல் அவசியம், கருத்தாழம் இல்லாதது கட்டுரை ஆகாது கட்டுரை எழுதப் புகுந்தவன் தான் ஆராய்ந்து அறிந்து உணர்ந்த அரிய கருத்துக்களையும் முடிபுகளையும் நுட்பமாக நுவலுவதே கட்டுரையின் நோக்கமாகும்.

இவ்வாறாயின் ஒரு கட்டுரை உரைச்செய்யுளாகச் சுருக்கமாகவும், கருத்தாழம் உடையதாகவும், பொருள் தெளிவு உடையதாகவும், ஆக்கியோனின் முடிந்தகருத்துக்களைத் தெள்ளிதின் புலப்படுத்துவதாகவும், குறுகிய பொருள் எல்லை உடையதாகவும் இருக்கவேண்டும் என்பது துணிபுஎன்பர். இங்ஙனமாயின் இந்நூலில் உள்ள கட்டுரைகள் யாவும் இவ்விதிகளுக்கமைய வந்துள்ளமை வெளிப்படை .

### நூல்: புதுமுறைக் கட்டுரைக்கோவை

வெளியீடு: தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

விற்பனை: சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

பரீட்சார்திகளின் அறிவுப் பரப்பில் பற்பல கருத்துக்கள் அடங்கவும் அவர்களுடைய எழுத்தாற்றல் சிறக்கவும் கையடக்கமான இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது சொல்லாமலே விளங்கும். இதில் மேற்கு நாட்டறிஞர்களான அடிசன், கோல்ட்சமித்ஸ்ரீல், லாம்,றஸ்கின் முதலானவர்களின் ஆங்கில வசன நடைகள் ஒத்த நம்மூர்ப்பெரியவர்களின் தமிழ்நடைகள் சில அமைந்துள்ளமை பெரு

ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிக் கிளைத்தலின்றி விரிந்த நடையில் ஓரளவு நீண்டதாகச் செய்யப்பெற்ற எழுதப்பெற்ற ஓர் உரைச் செய்புளே கட்டுரையாகும். அது நீளத்திலும் பொருளாழத்திலும் எல்லைக்குட்பட்டதாய் அமைதல் வேண்டும் இந்தவகையில் இந்நூலின் கண்ணுள்ள எல்லாக் கட்டுரைகளும் மாணாக்கர்களின் மன வளர்ச்சி கருதி அளவாக அமைந்துள்ளமையைப் பாராட்டுதல்

அறிவுத்திறனமைந்த அரிய கட்டுரைகளைப் பலகோணங்களில் இறங்கிமாணக்கர் மனநிலைக்கேற்ப எழுதியபெரியவர்களைப் பாராட்டுதல் வேண்டும் இவற்றை அழகாக அச்சிட்டுக் காரைநகர் பாலா அச்சத்தாரைப் பாராட்ட வேண்டும் தமிழ்வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அயராதுழைக்கும் காரைநகர்த் தமிழ்வளர்ச்சிக் கழகத்தாரைப் பாராட்டவேண்டும். பாராட்டுகிறோம். பணிந்து வணங்கி வரவேற்கிறோம். இந்நூல் இன்னும்பல பதிப்புகளில் பல்லாயிரமாகப் பெருகி மாணவர் உலகில் பெருவிருந்து செய்வதாக தமிழ் வளர்வதாக.

## சேவல் செய்த சதி

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை" என மன்றாடினன். நகைவியாபாரியோ அவன் சொல்வதைச் சிறிதேனும் நம்பாமல் அருகிருந்த இருப்புக்கம்பியால் அவன் மீது ஓங்கி வீசினர். அச்சமயம் அங்கு வந்த சேவல்மீது இருப்புக்கம்பிபட்டு சேவலின் இரு கால்களும் ஒடிந்து விட்டன. சேவல் தாக்கப்பட்டு விட்டது ஆத்திரம் ஒருபுறம் முத்துக்கள் தொலைந்தது மறு புறம். நகை வியாபாரிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. வாயில் வந்தவாறெல்லாம நகைத் தொழிலாளியை வைதார் அன்று பின்னேரத்திற்குள் முத்துக்களைத் தரவேண்டுமென்று பணித்தார். நகைத் தொளிலாளி கவலையுடன் வீடு சென்றான்.

மதியபோசனத்திற்காக நகைவியாபாரியின் வீட்டிலே சேவல் வெட்டப்படுகிறது. நகைவியாரிஅதிர்ந்து போனார் சேவலின் வயிற்றிலே முத்து மாலை இருந்தது.

## சின்னத்தம்பிப் புலவர்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

டுண்டு. உரையிற்சில தவறுகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத் தெழுந்த இந்நூலுக்கு இங்குள்ளார் ஒருவர் உரைஎழுதியிருந்தால் அவ்வகைப்பழைகள் ஏற்பட்டிருக்கமாட்டாது. அவற்றுட்சில வருமாறு

"தங்கப்பாளத்தாற் சமைத்த கொட்டு தோளிற் சுமந்தே" என்பதிலுள்ள கொட்டு என்பதற்கு "மண்வெட்டி என்றுபொருள்தரப் பட்டிருக்கிறது ஆகவே, இரு மண்வடடியுடன் பள்ளன் தோற்றினானகிறது. கொட்டு என்பதற்குமண்வெட்டி என்ற பொருளிருப்பினும முன்னர் மண்வெட்டிஎன்ற சொல் வந்திருப்பதாலும் தங்கப்பாளத்தாற் சமைக்கஎன்ற அடைமொழியிருப்பதாலும் இதற்கு வேறோர் கருத்து வேண்டப்படுகின்றது. உலோகத்தாற் செய்யப்பட்ட பாத்திரம் என்ற பொருளும் கொட்டு என்றசொல்லிற்குண்டு ஆகவே தோளிற் பாத்திரமிருந்ததேனல் பொருத்தமுடைத்து.

"மாறுகண்ணும் சோகிப் பாதிற் பல்லினழகும்" என்பதிலுல்ல சோகுபாகு என்பதற்குப் பலதுறையின் வெண்மைபோல என்றும் பொருள் எழுதப்பட்டிருக்கிறது பாகு எனபதற்கு பொருள் எழுதப் படவில்லை. பாகுஎன்பது பால் என்றும் பொருள்படும்டு.

"கண்ணுதற் கண்ணருள் காரியையனார்", என்ற தொடையில் காரிஎன்பதற்கு வயிரவர் என்றுபொருள் கூறப்படுகிறது. இங்குகறுப்பு நிறமுடைய ஐயனாரையே குறிக்கிறது ஐயனாரே அரிகரபுத்திரனென்று அழைக்கப்படுகின்றார். ஆகவே தான் ",கண்ணுதற் கண்ணனருள் என்றார.

மேலும், மூதலித்தல்-ஒப்புவித்தல்.

கோச்சல்-தேய்ந்திடும்.

(முற்றும்)

## இலங்கை கிரிக்கெட்டின் தரம்

1927ம் ஆண்டு முதல் 1984ம் ஆண்டு இதுவரை இலங்கை 52 சர்வதேச கிரிக்கட்பந்தயங்களில் ஆடியுள்ளது. (மட்டுப்படுத்தப்பட்ட பந்தயங்கள் தவிர்ந்த) இவற்றில் 11 பந்தயங்கள் 1982ம் ஆண்டு டெஸ்ட்' அந்தஸ்துகிடைத்த பின்னர் ஆடப்பட்டவை.

இவை அனைத்திலும் மொத்தம் இரண்டில் மட்டுமே வெற்றிகிடைத்தது. இருபது சரிசமமாக முடிவடைந்தது மிகுதி முப்பதும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

இலங்கையின் இருவெற்றிகளில் ஒன்று 1965ம் ஆண்டு எம்.எச். திசேரா தலைமையில் இந்திய அணியை 5 விக்கட்டுகளால் வென்றதன் மூலம் கிடைத்தது. இரண்டாவது வெற்றி 1976ம் ஆண்டு எ.பி.பி.தென்னக்கோன் தலைமையில் பாகிஸ்தான் அணியை இருவிக்கட்டுகளால் தோற்கடித்துப்பெற்றது

'டெஸ்ட்' அந்தஸ்தின் பின் ஆடியபதினொரு போட்டிகளில் மூன்றுமட்டுமே சரிசமம்! [illegible]

—அனந்த்

## இலுப்பையும், வேம்பும் இன்னும் வேண்டும்.

இலுப்பையும் வேம்பும் இன்னும்வளர வேண்டும், வடபிரதேசத்தை வளமாக்க வேண்டும். இரண்டும் நிழல் தருவன அன்றி எண்ணெய் வித்தைகள்தருவன. மருத்துவக் குணமகிமை வாய்ந்தன. இலுப்பைப் பூவைக் காயவைத்து உண்ணும் வழக்கம் சங்க காலத்திற்கும் முந்தியது. சங்கப் புலவர் பாடுகிறார், இலுபபைப் பூ வாடுவதன் மூன யானைக் கொம்பை நினைவு படுத்துகிறதாம். காய்ந்த பூ காய்ந்த இறாலை நினைவுபடுத்துகிறதாம். இலுப்பைப் பூ ஒருவகைக் காய்ச்சல் நோய்க்குக் கைகண்ட மருந்து. இன்னும் எங்கள் நாட்டை விட்டு மலேரியா வெளியேறவில்லை. வேம்பு தமிழரசன் விரும்பியது. வேப்பம் பூமாலை சுவாசத்துக்கு நல்லது. வேப்பிலையில் பட்டுவரும் காற்று சுகாதாரமானது. நோய் நீக்குவது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் நட்ட வேம்பின் கோப்பு ஆங்கிலேய போதகர்களுள் வெல்லியன் கூட்டத்தாரை கவர்ந்தது. வெஸ்லியம் மிசனரிமார் வேம்படியை மையமாகக் கொண்டு பெரிய தேவாலயம் இருபெரும் கல்லூரிகள் அமைத்துச் சுதேசிகளாயிருந்து தொண்டு செய்தனர் அந்தவேம்புகள் நூறாண்டுகாலமாக அங்கே நிழல் கொடுத்தன. வேம்புகளில்லாவிட்டாலும் அந்த இடம் வேம்படியாயுள்ளது. வேம்பில் மருத்துவக்குணம் பெரிது.

தேங்காயெண்ணெய் தட்டுப்பாடாயிருக்கும் இந்தக்காலத்தில் வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய் அதிகம் உறபத்தியாதல் அபிவிருத்திப் பாதைக்கு அணியாதும். இலுப்பையும் வேம்பும் இடமுள்ளவரை அதிகம் உண்டானால் நிழல் தருவதோடு எண்ணெயும் தரும்.

—மில்க்வைற்—

## சிறை மிகநன்றே

அவன் துணனுர்
ரேடியோ லைசென்ஸ்
எடுக்கவில்லை
மூக்கல் முனகல்
சினிமாக் கீதங்களைக்
கேட்டு வீட்டில்
சிறையிருப்பதை விட
'லைசென்ஸ் குற்றத்திற்காக
நிஜமான சிறையில்
இருந்து வாடுவது
பரவாயில்லை

## சுதந்திரம் எது?

வீதியில் கையை
வீசிக்கொண்டு போ-
பரவாய் இல்லை.
அகட்டிக் கொண்டு
போகிறாயா?
அதைத்தான் சுதந்திரம்
என்கிறாயா?
உன மடத்தனமான
சுதந்திர எண்ணம்
உன நாவழிக்குக
குழி பறிக்கும்

—கேசரி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மருதமடுத்திருப்பதியில் அருள் மழைபொழியும் மரியன்னை

**வி**ண்மீன்கள் முடிதவழ வெண்ணிலவு அடிவருட நீல வான் ஆடைக்குள் அருள் கோலம் காட்டிடும் மரியன்னை. ஒருகையில் மண்ணவர்காய் இன்னுயிர் ஈந்த யேசுபெருமானின் குழந்தையுரு. மறு கையில் மண்ணவரை விண் சேர்க்கும் அருள்வடமாம் செபமாலை. பார்த்திடும் கல் மனமும் பாகாக்கும் பக்தித் திருக்கோலம். மருதமடு மண்ணிலமர் மரியன்னையின் அழகுக் காட்சி காணக்கண்கோடி வேண்டும். அவள் அருள் மழையில் நனையவென இங்கு திரளும் பல்இன பலமொழி பேசுகின்ற மனிதப் பெருங் கூட்டமே தினம் சான்று. இத்தகைய புண்ணிய தலத்தின் வரலாறு தமிழ்க் கிறிஸ்தவர்களின் வரலாற்றுடன் இரண்டறக் கலந்த ஒன்று

''என்னுடையதெல்லாம் உன்னுடையது'' என்ற கிறிஸ்து பெருமானின் அன்புக் கோட்பாடு மத்திய ஆசியாவில் வித்தாகி ஐரோப்பாவில் தாக்கத்தை ஏற்படுத்தியபின் புனித சவேரியார் ஊடாகவே இந்திய மண்ணில் அலையெறிந்தது. அதன் சிதறலாக மன்னார் மண்ணிலே கிறிஸ்தவம் பற்றிய தாகம் தோன்றியது. இதன் விளைவாக கி.பி. 1544ம் ஆண்டளவில் சவேரியாரால் அனுப்பப்பட்ட குரு ஒருவரால் மன்னார் மக்களில் சுமார் 600 பேர் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இது ஈழத்தமிழ்க் கிறிஸ்தவர்கள் என்ற சமூகத்தின் தொடக்கமாயிற்று. ஆரம்பத்தில் சங்கிலி மன்னனின் எதிர்ப்பினுல் உயிரிழப்புகள் ஏற்பாட்டாலும் கிறிஸ்தவம் தொடர்ந்து பரவியது. கி. பி. 1983 அளவில் 43,000 கிறிஸ்தவர்களும் 26 ஆலயங்களும் இருந்ததாக திருச்சபை வரலாறு கூறுகின்றது. இந்த ஆலயங்களுள் ஒன்ருக மன்னாரில் இருந்து ஆறுமைல் தொலைவில் உள்ள மாந்தை என்னும் சிற்றூரில் அமைக்கப்பட்ட ஆரோக்கிய அன்னை ஆலயமே மடுமாதாவின் ஆரம்ப இருப்பிடம். இங்கு அன்னை ஆரோக்கிய மாதா எனும் பெயரினலேயே அழைக்கப்பட்டார்.

**சூ. யோ. பற்றிமாகரன்**

டச்சுக்காரரின் வருகையை அடுத்து கத்தோலிக்கர்கள் பலத்த அடக்குமுறைக்கு ஆளானுர்கள். கத்தோலிக்க ஆலயங்கள் இடிக்கப்பட்டன. இவ்வேளையில் மாந்தை ஆரோக்கிய அன்னையின் திருவுருவுடன் 40 குடும்பங்கள் காட்டுக்குள் மறைந்து வாழத்தொடங்கின, யானைக்காட்டுக்குள் அன்னையின் அருளால் ஆனந்தமாக வாழ்ந்த இக் கூட்டத்தினர் கண்டி அரசனுக்குச் சொந்தமாக இருந்த சுங்கப் பாடிவீடொன்றை கண்டி — இராமேசுவரம் பாதையில் கண்டு அங்கே நிரந்தரமாக வாழத் தொடங்கினர். இவ்விடமே காலகதியில் மருதமடு ஆயிற்று. இதேவேளை டச்சுசகாருக்கு அஞ்சிக் காட்டுக்குள் ஒளித்த வேறு 700 கத்தோலிக்கரும் அன்னையின் அருளால் இவ்விடத்திற்கு இட்டுச் செல்லப்பட்டனர். புதிதாக அங்கு வந்து சேர்ந்த அக்கூட்டத்துள் போர்த்துக்கேசிய கப்டனின் மகளாகிய ஹெலேஞ என்பவளும் இருந்தாள். இப்பெண் தூயவளாக இறையன்பில் வாழ்ந்தமையால் அன்னையின் திருச்சொரூபத்தைச் சிறு ஆலயமமைத்து, போற்றி வழிபடத் தொடங்கிஞள். இவளைத் தூய லேஞள் என்று மக்கள் அழைத்தமையபல் கிலேஞள் மருதமடு எனும் பெயரும் மருதமடுவுக்கு வழங்கி வந்தது. இவளால் அமைக்கப்பட்ட ஆலயம் இன்று இடிபாடடைந்துவிட்ட போதிலும் இவ் ஆலயத்து மண் மக்களால் இன்றுவரை நோய்தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாருகத் தோற்றம் பெற்ற மருதமடு யாழ்ப்பாண கத்தோலிக்கரின் இதயமாக மாறியது ஆயர்கள் முதல் யாழ். நகரின் புகழ்பூத்த குருக்களான தோமஸ் அடிகள், ஞானப்பிரகாசர் அடிகள் ஈருக அனைத்து குருமார்களும் அருட் செல்விகளும், துறவிகளும், கிறிஸ்தவர்களும் மருதமடு மாதாவையே தங்கள் அன்புத் தாயாகக் கருதினர் — கருதுகின்றனர். காலகதியில் அன்னையின் அருள்மழை இன-மத-மொழி வேறுபாடுகளைத் தாண்டி இலங்கைத் தாயின் ஒரே மக்களாக இலங்கையரை இணைக்கும் திருத்தலமாக இத் தலத்தை மாற்றியது. இங்கு நடைபெற்ற அற்புதங்கள் அன்னையின் அரவணைப்புகள் மக்கள் வெள்ளத்தைப் பெருக்கியதால் நாளாந்தம் குவியும் பக்தர்களின் வசதிக்காக ஆடி 2-ம், ஆவணி 15-ம் மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. ஆடி இரண்டே மருதமடு மாதாவாகிய செபமாலைமாதாவின் திருநாள். ஆவணி 15 அன்னை பரலோகத்திற்கு ஆன்ம சரீரத்துடன் எடுத்துக் கொள்ளப்பட்டு இறைவஞல் விண்ணக மண்ணகப் பேரரசியாக முடிசூட்டப்பட்ட தினம் இதுவும் இங்கு பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

தமிழ்த்தேசிய இனம் துயரமான ஒரு காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கும் இந் நேரத்தில் தமிழ்மண்ணின் கருணையூற்ருகவும் இலங்கையின் தேசிய திருத்தலமாகவும் ஒளிரும் மருதமடுவின் பேரரசியாம் செபமாலை அன்னையிடம் எமது மக்களை பாதுகாத்து இலங்கையின் அமைதியும் சமாதானமும் இறையருளால் ஓங்கிடப் பிரார்த்திப்போம்.

# யாழ். மத்தியகல்லூரி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதி, அறம் எனும் பல நற்குணங்கள்' பொருந்தப்பெற்றுச்சீரான வாழ்க்கை வகுத்து வாழ்ந்து நாட்டித் தனது சாதனையால் ஆற்றுப்படுத்திய மகான். நான் அறிந்தவரைக் எந்த ஒரு மாணவனையாவது மனம் புண்பட அவர் நடத்தியதேயில்லை.

இறுதியில் எஸ். ஸி. குணரத்தினப் பெருந்தகை இரசாயனம், உயிரியல் கற்பித்தார். ஆசிரியப் பண்புக்கோர் எடுத்துக்காட்டு. ஒரு பாதிரியாரின் மகன் என்பதை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டிய பெருமகன். உப அதிபர் சண்முகம் போன்று எதிலும் தமது மாணவர் வெற்றியே பெற வேண்டுமென்ற கருத்துக் கொண்டவர். தனதுமாணவர் யாவரும் மாக்கஸ் பர்ணுந்து விவசாய புலமைப் பரிசில் பெறவேண்டுமென்ற ஆர்வத்துடனேயே கற்பிப்பார். யாழ் மத்திய கல்லூரியில் சிறிது கால ஆசிரிய சேவையின் பின்னர் அரச சேவையில் தின்னவேலிக் கமத்தொழிற் பாடசாலையதிபராகப் பதவியேற்று படிப்படியாக உயர்ந்து விவசாய உதவிப் பணிப்பாளராக இளைப்பாறினுர். ஏனைய ஆசிரியர்களுடன் எனக்கு அதிகம் தொடர்பு ஏற்படாவிடினும் ஜே. எஸ். செல்வரத்தினம், சாமுவேல் யாக்கோப்பு, குணம் ஸ்பென்சர் ஆகியோரை மறப்பதற்கில்லை. இவர்களின் முன்மாதிரியும் எனது வாழ்க்கை வழிப்படுவதற்கு உறுதுணையாயிருந்தது.

**வழிவகுத்த ஆசிரியர்**

யாழ் மத்திய கல்லூரி 150 ஆண்டு நிறைவு பெறும் இவ்வேளையில் அதன்பழைய மாணவன் என்பதனுலும் அன்று எனக்கு வழிவகுத்தஆசிரியரை நினைவு கூரலானேன் இன்றைய ஆசிரிய குழாம் அன்றையஆசிரியரிலும்பார்க்க வழி தவறிவிட்டது என்று கூறுதற்கில்லை. போட்டிகளும், அரச கெடுபிடிகளும், சந்தர்ப்ப சூழ்

(16ம் பக்கம்பார்க்க)


பொதுமக்களுக்கோர் நற்செய்தி!

**கமற் ரான்ஸ்போட் லிமிட்.**

**(GAMET TRANSPORT LTD)**

யாழ் / கொழும்பு உல்லாச பஸ்சேவை.

- குளிரூட்டப்பட்ட உறங்கல் இருக்கைகள்
- சௌகரியமான பயணம் வாய்ப்பை இழக்காதீர்கள்! முன்கூட்டியே ஆசனங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்.

**கட்டணம்: ஒரு வழி ரூ. 100/-**

**புறப்படும் இடங்கள்:**

**கொழும்பு:**
6-30 பி. ப. வெள்ளவத்தை வர்த்தகவங்கி முன்பாக
6-45 பி. ப. கிறீன்லன்ட் ஹோட்டல்
7-00 பி. ப. கோட்டை புகையிரதநிலையம்
7-15 பி. ப. கோமதி விலாஸ், செட்டித்தெரு

**யாழ்ப்பாணம்:**
6-00 பி.ப. காங்கேசன்துறை
7-00 பி.ப. மாக்பெட் பெற்ரேல் நிலையம் (MARKFED)
ஸ்ரான்லி ரேட், (லிடோ படமாளிகைக்கு முன்பாக)

கீழ்க்காணும் இடங்களில் ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்:

**யாழ்ப்பாணம்:**

1, கிறீன்பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ், இல. 26, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23875 - 22784
2. நியு. வி. எஸ். எஸ். கே. இல, 348, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:24020
3, மினிரேட் சென்ரர், இல. 3, ஜே. எம். சி. கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24331
4. கிருஷ்ணுஸ், கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை.

**கொழும்பு:**

1. GRANDMET CEYLON LTD (ஹோட்டல் கிறீன்லன்ஸிற்கு அருகாமையில்) இல. 35 A, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி. தொலைபேசி: 85832 — 580054
2. காந்தி லொட்ஜ், இல. 200, காலி வீதி, வெள்ளவத்தை. தொலைபேசி: 82720
3. கிறீன்லன்ட்ஸ் ஹோட்டல் லிமிட்டெட், இல. 34, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி. தொலைபேசி: 81986 and 85592
4. கோமதி விலாஸ் இல. 142, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 34144
5. அஜந்தா ஹோட்டல் லிமிட்டெட், 125, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை, கொழும்பு-11, தொலைபேசி: 28089

காரியாலயம்: **Grandmet Ceylon Ltd.**
கொழும்பு: 35 A, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி- தொலைபேசி: 85832 — 580054
யாழ்ப்பாணம்: **Greenfield Travel Operators**
கிறீன்பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ்,
இல. 26, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23875 — 22784



**கிறீன்பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ்**

(Greenfield Travel Operators)

★ சர்வதேச தொலைத் தொடர்பு சேவை.

1. சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத் தொடர்பு சேவை.
2. சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத் தொடர்பு சேவையை ஒரு நொடிப் பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

**GREENFIELD TRAVEL OPERATORS,**

26, Model Market (Upstair),
Jaffna.

Telephone No: 23875
22784

Telex No: 22287


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினையம் பதியுறையும் நாகேஸ்வரித் தாயே!

**பல்லவி**

நயினையம் பதியுறையும் நாகேஸ்வரித் தாயே
நம்பித் தொழுபவர்க்கு நாளு மருளு வாயே
(நயினை)

**அனுபல்லவி**

கயிலைமலை யுறையும் காமாட்சியே — உன்னை
கைதொழக் கடுவினைகள் கடிதினி லகன்றுவிடும்
(நயினை)

**சரணம்**

மணிபல்ல வமெனவே மங்காப் புகழ் பெற்ற
மாசற்ற தெய்வமே மண்டியிட் டேனம்மா
பிணியகற்றி யுன்தன் பித்தனு யாக்கியெனை
பெற்றவளே அம்மா பேறுடன் வாழவைப்பாய்
(நயினை)

**எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்**

★ இன்று நயினை நாகபூஷணியம்மன் நாலாந்திருவிழா

# டில்லி சென்றுள்ள ஜனாதிபதி ஜே. ஆர். நல்லமுடிவு காண்பாரா?

**எஸ். எம். கோபாலரத்தினம்**



ஆசியாவில் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்கு இலங்கை ஜனதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன நேற்று விஜயம் செய்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் சென்ற ஜனதிபதி ஜே.ஆர் இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்றே இந்தியா சென்றுள்ளார்.

இலங்கையிலுள்ள தமிழர் பிரச்னை சம்பந்தமாகப் பேசுவதற்காகவே இலங்கை ஜனதிபதியை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அழைத்திருக்கிருர்.

ஆடிக்கலவரம் ஆண்டு நிறைவை அனுஷ்டிக்கும் சமயத்தில் இலங்கையில் இனப் பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வு காணப்பட வேண்டிய தன் அவசியத்தை அமெரிக்காவும் இங்கிலாந்தும் எடுத்துக் கூறியதன் பின்னர் இந்தியப் பிரதமர் தாம் ஆரம்பத்திலேயே கூறிய யோசனைகளை தொடர்ந்து இலங்கை ஜனதிபதியுடன் பேசுவதற்கு இருக்கிருர்.

பஞ்சாப் பிரச்னையும் அசாம் காஷ்மீர் பிரச்னைகளையும் இலங்கை ஜனதிபதியும் இலங்கைப் பத்திரிகைகளும் எடுத்துக்காட்டி இலங்கையில் இனப் பிரச்னை பெரிய பிரச்னையல்ல என்று காட்ட முற்படுகின்றனர்.

இலங்கை இனப்பிரச்னைக்கும் இந்திய மாநிலங்களின் பிரச்னைகளுக்குமுள்ள வேறுபாடுகளை இலங்கை ஜனதிபதி விளங்கிக் கொள்ள முடியாதவரல்லர்.

பஞ்சாப், அசாம் பிரச்னைகளோடு தமிழ்நாடும் தலையிடியைக் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே இந்தியப் பிரதமர் இந்திரா இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு சுமுகமான நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் அதிக ஆர்வம் கொண்டிருக்கிருர்.

இப்பொழுது தமிழ் நாட்டில் முப்பதினுயிரம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகச் சென்று தங்கியிருக்கின்றனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கடல் மட்டும் இல்லாதிருந்தால் தமிழ்நாட்டில் இலங்கை அகதிகள் தொகை அதிகரித்திருக்கும் புதிய பிரச்னையும் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும்.

இலங்கைத் தமிழர் பிரச்னைக்குச் சுமுகமான நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் தமிழ்நாடுமாநிலமும் இந்திய மத்திய அரசுக்கு ஒரு பெரும் தலையிடியை கொடுக்கலாம் என்பதாலேயே இந்தியப் பிரதமர் இலங்கைத் தமிழர் பிரச்னையில் ஆர்வம் கிருர்.

''தமிழ்ப் பயங்கரவாதிகள்' சம்பந்தமாக இலங்கை ஜனதிபதி இந்திய மத்திய அரசின் மீது குறைகூறவில்லை; ஆனால் இலங்கைப்பிரதமர் பிரேமதாசா இந்திய மத்திய அரசைக் கண்டித்திருக்கிருர்.

இலங்கைப் பிரதமரின் கண்டனத்தையிட்டு இந்திய அரசு அலட்டிக் கொள்ளவில்லை.

இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு நியாயமான சுமுகமான நிரந்தரமான அரசியல் தீர்வு காண்பதற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது சிறப்புத் தூதுவர் திரு ஜி.பார்த்தசாரதியைக் இலங்கைக்கு அனுப்பி சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதில் வெற்றி பெற்ருர்.

ஆனல் இந்த மாநாடு ஆரம்பிக்கப்பட்டசமயத்தில் தோன்றிய சூழ்நிலை மாறி இப்போது மாநாடு இழுபட்டுக்கொண்டிருப்பதும் தமிழர் பிரச்னையை திசை திருப்பப்பட்டிருப்பதும் காட்டுவதற்குக்காரணம்என்று சொல்ல வேண்டும்.

இலங்கையில் பிரிவினைகோரும் தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு தமிழ்நாடு அரசு ஆதரவு கொடுக்கிறதென்று இலங்கை ஜனதிபதி குற்றம் சாட்டுகிருர். தமிழ்ப் பயங்கரவாதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு இந்திய மத்திய அரசு உதவ வேண்டுமென்று இந்தியப் பிரதமரைத் தாம் கேட்கப் போவதாவும் ஜனதிபதி ஜே.ஆர் தெரிவித்திருக்கிருர். தான் இந்தியப் பிரதமர் இலங்கை ஜனதிபதியை இந்தியாவுக்கு அழைத்துள்ளதற்குக் காரணமாக இருக்கவேண்டும்.

### வோட்டும் வேட்டும்

இலங்கை ஜனதிபதி ஜே. ஆர்.ஜயவர்த்தன இங்கிலாந்தில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த ஒருபேட்டியில்தமிழ்ப் பயங்கர வாதிகள் வேட்டில் தான் (Bullets) நம்பிக்கை வைத்திருக்கின்றனர். ஆனல் நான் வோட்டில் (Ballots) நம்பிக்கை வைத்திருப்பவன்'' என்று கூறியிருக்கிருர்.

இலங்கையின் வடபகுதியில் வன்செயல்களில் ஈடுபடுவோர்கள் ''பயங்கரவாதிகள். தென்னிலங்கையில் வன்செயல்களில் ஈடுபடுவோர் ''தீவிரவாதிகள்''!

### வோட்டுக்கு மதிப்பளிக்கவில்லை

வட இலங்கையில் அளிக்கப்பட்ட வோட்டுக்கு இலங்கையில் ஆட்சிபீடத்துக்கு வந்த அரசியல் கட்சிகள் கடந்த காலங்களில் மதிப்பளிக்கவில்லை.

1956-ஆம் ஆண்டில் ''சிங்களம் மட்டுமே'' உத்தியோக மொழி என்று எஸ், டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணியும், சேர். ஜோன்தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டி போட்டுக் கொண்டு மக்கள் முன்வோட்டுக் கேட்டுச் சென்றபொழுது வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழுக்குச் சமஅந்தஸ்தும் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையும் கோரிய கட்சிகளுக்கே வோட்டுக் கிடைத்தது!

தமிழ் மக்கள் அளித்த



வோட்டுக்கு மக்கள் ஐக்கிய முன்னணி அரசும் மதிப்பளிக்கவில்லை; ஐக்கிய தேசியக்கட்சியும் மதிப்பளிக்கவில்லை,

இப்படியே தமிழ் மக்களும் இந்நாட்டில் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழவேண்டுமென்பதற்காக 1960-ஆம் ஆண்டிலும் 1965, 1970, 1977 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் அளித்த வோட்டுக்களுக்கு ஆட்சி பீடத்தில் அமர்ந்த பெரும்பான்மைச் சமுகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் மதிப்பளிக்கவே இல்லை!

இதன் விளைவுதான் இளைய தலைமுறையினர் வோட்டில் நம்பிக்கை இழந்து வேட்டில் நம்பிக்கை வைக்க முனைந்தனர் என்று சொல்லலாம்.

''வாள் எடுத்தவன் வாளால் மடிவான்'' என்று இலங்கைத் தமிழர்களுக்குத் தலைமைதாங்கிய தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அடிக்கடி மக்களுக்கு எடுத்துக்கூறி அகிம்சை வழியிலேயே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை நடத்தினுர்.

எமது பிரச்னைகளை எமது காலத்திலேயே தீர்த்துக் கொள்ளுங்கள். எமக்குப் பின் வரும் சந்ததியினர் எம்மைப் போல் இருப்பார்களென்று சொல்வதற்கில்லையென்றும் தந்தை செல்வநாயகம் ஆட்சி பீடத்திலிருந்தவர்களைப் பார்த்துப் பலதடவைகளில் கூறியிருக்கிருர்.

இன்று நிலைமை மோசமான கட்டத்தை அடைந்து விட்டது. அந்நியத் தலையீடுகள் இலங்கையில் வல்லரசுகளின் நேரடித் தலையீட்டுக்கும் வழி வகுக்கலாம்.

இந்நிலையில் இந்தியப் பிரதமரின்நல்லெண்ணத்தை தஅலட்சியம் செய்யாமல் இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு நியாயமான தீர்வு காண்பதற்கு இன்று புதுடில்லி போய்ச் சேரும் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன முன்வரவேண்டும்.

# இயற்கை வைத்தியங்கள்

★ கண்ணில் ஏற்படும் காட்ராக்ட் நோய்க்கு வெங்காயச் சாற்றின் ஆவியை கண்ணுக்குபிடித்தால் எரிச்சலைத்தந்து நீர் பொலபொலவென கொட்டும். இதன் மூலம் நோயின் கொடுமை குறையும்.

★ கால்கை வலிப்பு நோய்க்கு திராட்சை பழச்சாறு எடுத்து மூன்றுவேளையும் ஒரு டம்ளர் அளவு சாப்பிட்டுவந்தால் வலிப்புநோய் குறையும்.

★ பெண்களுக்கு கருப்பைக் கோளாறுகள் நீங்க நெல்லிக் கனியை பழமாக பக்குவப்படுத்தி இலேகியமாக சாப்பிட கோளாறுகள் நீங்கும்.

★ இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் சாப்பாட்டில் உப்பைக் குறைத்தும் நெய் வெண்ணெய் போன்ற கொழுப்புகளை குறைத்தும் உண்டால் அவர்களுக்கு வரும் கிறுகிறுப்பு சரியாகிவிடும்,

★ சாதாரண ஜுரத்திற்கு ஒரு அவுன்ஸ் துளசிச்சாறு எடுத்து ஐந்து மிளகை இடித்து தூள் செய்துகொண்டு துளசிச் சாற்றில் கலந்து கொடுத்தால் ஜுரம் தணியும்.

தொகுப்பு:— **'பிலோ'**

# புனைபெயர்களுக்கு ஆபத்து!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பற்றமுறையில் ஒரு பத்திரிகையில் கருத்தொன்று வெளிவருமானல் அதனை எதிர்த்து நீதிமன்றத்துக்குப் போகும் உரிமை ஏற்கனவே இருக்கின்றது.

டெயிலி நியூஸ் பத்திரிகையில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பாக முன்னுள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்க தாக்கல் செய்திருந்த அவதூறு வழக்கில் தீர்ப்பு சிலதினங்களுக்கு முன் வெளிவந்துள்ளது.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு லேக்ஹவுஸ் தாபனம் 4 லட்சம் ரூபாய் நஷ்டஈடாக கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசதரப்புப பத்திரிகையாய் இருந்தபோதிலும் சட்டம் பாரபட்சமின்றிச் செயல்படுகின்றதா என்பதற்கு இத்தீர்ப்பு ஒரு சான்ருகவிருக் தவறிழைக்கும் பத்திரிகைகள் மீது இவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கான வசதி இருக்கும்போது புதிய சட்டத்தின் அவசியம் புரியவில்லை.

இப்பிரச்னை பற்றி கொழும்பிலிருந்து வெளிவரும் 'ட்றிபியூன்' சஞ்சிகை ஜுன் 16ம் திகதி ஆசிரியர்கருத்தின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

''அதிகாரத்தில் இருப்போருக்கு ஒன்றை ஞாபகப்படுத்த வேண்டும். 1983ம் ஆண்டு ஜுலையில் நடந்த சம்பவங்கள் நாட்டிலும் உலகம் முழுவதிலும் அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்தியுள்ளன. கொழும்பில் இடம்பெற்ற கொள்ளைகளும் தீவைப்புகளும் மோசமானவைதான். அதைவிட சிறையிலிருந்த 52கைதிகள் கொலை செய்யப்பட்டதானது வெகுகாலத்துக்கு அழித்துவிடமுடியாத கறையாகப்படிந்துவிட்டது. இதோடு நிறுத்திக்கொள்ளாமல் அரசு இப்போது புனைபெயர்களுக்கெதிரான சட்டம் ஒன்றைக் கொண்டுவரப்போகின்றது. ஜனநாயக உலகில் இலங்கையைச் சிரிப்பிற்கிடமாக்கப் போகின்றது இச்சட்டம்'.

இந்த நிலைமையில் அரசு குறிப்பாக நீதியமைச்சர் தமது புதிய சட்டத்தை வாபஸ் பெற்று பத்திரிகைத் துறையில் வெகுகாலமாக இருந்து வரும் சுதந்திரத்தை நிலைநாட்டமுன் வரவேண்டும்.


## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

**நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?**

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

**குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான இருவழி பயணச்சீட்டும், விசா மற்றும் டென்மார்க் செல்வதற்குத் தேவையான விசா மற்றும் சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

**Cross Travel Services (Pte) Ltd.**

STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA,
Phone No : 22040, 22065,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தில் முதலாவது தமிழ் இசைத்தட்டினைத் தயாரித்து அளித்தவர்கள் பரமேஸ்—கோணேஸ் குழுவினர்.

'உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைத்தது?' என்ற அந்தப் பாடலை இயற்றிப் பாடியவர் எம். பி. பரமேஸ். அதனைப் பாடியவரும் அவரே.

# ஈழத்தின் முதலாவது

# தமிழ் இசைத்தட்டு

# இசை அமைப்பாளர்

# கோணேஸ்

இனிமையான அந்தப்பாடலை இசை அமைத்தவர், அவரது உடன் பிறப்பான எம்.பி. கோணேஸ்.

உதவி இசை அமைப்பாளராகப் பணியாற்றியவர் எஸ். ஈ. மகேஸ். கோணேஸுக்குக் கிடைத்த முத்தான முத்து இவர்.

1970-ஆம் ஆண்டு இந்த முதலாவது தமிழ் இசைத்தட்டு நமது நாட்டில் உற்பத்தியானபோது, ரசிகர்களின் பலமான வரவேற்பு கிடைத்தது.

இதனை அடுத்து நான்கு பாடல்கள் கோணேஸின் இசை அமைப்பால், தட்டுக்களாக ரசிகர்கள் கைகளுக்குக் கிடைத்தன.

—'நீயின்றி நிலவு'

—'நீ வாழும் இடம் எங்கே?' (சோகப்பாடல்)

—'போகாதே தூரப் போகாதே!'

—'நீ வாழும் இடம் எங்கே?' (சந்தோஷப்பாடல்).

இந்த நான்கு பாடல்களின் இசை அமைப்பு நமது ரசிகர்களுக்குப் புதிய அனுபவத்தை அளித்தன.

1967-ஆம் ஆண்டு முதல் 'பரமேஸ்—கோணேஸ்' என்ற பெயரில் திருகோணமலையில் இசைக் குழுவொன்றை ஆரம்பித்து, இலங்கை வானொலியிலும், மேடைகளிலும் சக்கை போடுபோட்டார்கள்!

1977-ஆம் ஆண்டில், இந்தச் சகோதரர்கள் கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து விட்டார்கள்!

இப்போது தனித்தனியாக இசைக்கோஷ்டிகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

★

## திரும்பிப் பார்க்கிறேன்

யாழ்ப்பாணத்துக்கு இந்த இரு சகோதரர்களும் மகேஸுடன் 'இசைத் தென்றல்' நிகழ்ச்சிகளை சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர் நடாத்திய சமயத்தில் பலதடவை சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அவர்கள் இசை நிகழ்ச்சிகளை நடாத்தும் பாணி என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

மேடையில், நாற்பதுக்கு மேற்பட்ட இசைக் கருவிகள்—

அத்தனையையும் இயக்குபவர்கள் அனுபவப்பட்ட கலைஞர்கள்.

ரசிகர்களை பார்த்தபடி 'ஆக்' வடிவில் கலைஞர்கள் வாத்தியங்களுடன் அமர்ந்திருப்பார்கள்.

அவர்களுக்கு முன்னால், அந்தக் கலைஞர்களைப் பார்த்தபடி 'வன்...ரூ...திரீ...'' என்று கூறி கைகளை அசைத்துக் கொள்கிறாரே...

அவர்தான் இசையமைப்பாளர் கோணேஸ்.

'எலெக்ரிக் ஓகனில்' அவர் விரல்கள் விளையாடுகின்றன.

அறிமுகம் ஆரம்பமாகிறது.

அதுவே ஒரு தனிப்பாணி.

மேடை விளக்குகள் அணைய, 'பிளாஸ்' வெளிச்சம் தனித்தனியாக ஒவ்வொரு கலைஞரையும் வெளிச்சம் போட்டுக் காட்ட, அறிவிப்பாளர் கே. ரி. செல்வக்குமார் அறிமுகப் படுத்துகிறார்.

யாழ்பாடி யாழ்ப்பாணம் பெயர்கொண்டது — வேலேந்தும் நல்லூர்க் கந்தன் அருள் கொண்டது.''

எம். பி. பரமேஸின் கணீரென்ற குரல் பாடலாக ஒலித்தது.

கோணேஷின் இதமான இசை அமைப்பில் அந்தப்பாடல் நம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைத்துவிட்டது.

யாழ்ப்பாணத்தின் பெருமைகளை அந்த இனிய இசையில் கேட்டு, நம்மை மறக்கிறோம்.

''பிறப்பிலேயே என் நண்பன் பீதாம்பரன் கவிஞர் அவர் புதல்வர்கள் பாடல்களையும், இசையையும் கேட்டு மகிழ்ந்து கொண்டேயிருக்கிறேன் என்று பண்டிதமணியே ஒரு சமயம் கூறினார்.

இலங்கையின் மூலைமுடுக்கெல்லாம் இவர்கள் 'இசைத்தென்றல்' நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## ராஜகோபால்

கண்பட்டது போல, இந்த உடன்பிறப்புகள் பிரிந்து விட்டதை அறிந்த போது மிகவும் கவலையாக இருந்தது.

## தனித்துவத்துடன் தனித்துவிட்டார்!

'கோணேஷ் ஒக்கெஸ்ட்ற்' என்ற பெயருடன் இசைத் தென்றல் நிகழ்ச்சிகளை இப்போது தனித்து நடத்துகிறார். எம். பி. கோணேஸ்: தனித்துவம் அவரிடம் இருக்கிறது

மகாராஜா முதலீட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் இதனை இப்போது புதிய வேகத்துடன் நடாத்துகிறார்.

அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் உள்ளக்குறல்களை உணரமுடிந்தது.

''எமதுஇசைக்குழு பரமேஸ் கோணேஸ் என்ற பெயரில் இயங்கியபோது கட்டுப்பாடு ஒன்று இருந்தது. பரமேஸ், மகேஸ், நான் மூவரும்சேர்ந்தே அந்தக் குழுவை வளர்த்து வந்தோம். ஆனால் நாங்கள் பிரிந்த போது லட்சம் ரூபாய்க்கு மேல் பெறுதியான இசைக் கருவிகள் எல்லாம் எனக்கும், மகேஸுக்கும் தெரியாமல் விற்கப்பட்டது. தாங்கிக்கொள்ள முடியாத பெரும் கவலையாக இருக்கும்'' என்று கோணேஸ் குமுறினார்.

கடந்த ஏழு ஆண்டுகளாக கோணேஸ் தனித்து இசைக் குழுவை நடத்துகிறார்.

'பரமேஸ்-கோணேஸ்' என்ற பெயரில் மற்றொரு இசைக்குழு நடப்பது குறித்து அவருக்கு மிகுந்த கவலை.

''என்பெயரை அவர் பாவிப்பது தவறானது. இதனால் எனக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் அவர் பெயரைப் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்'' என்றும் கூறினார்.

இவரது இசைக்குழுவில் பிரபல வாத்தியக் கலைஞர் பப்பா மிஸ்கின் உட்பட வழமையான பதினான்கு இசைக்கலைஞர்கள் இருக்கிறார்கள்.

வட மாகாணத்தில், எந்த விதமான மங்களகரமான நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி வரும் கோணேஸ், கலையை வெகுவாக நேசிப்பவர்.

நல்ல கலைஞர்களைத் தம்முடன் அணைத்து வைத்திருக்கிறார்.

வானொலி புகழ் ஸ்ரெனி சிவானந்தன் பாடுகிறார், மற்றும் இசைச்சுடர் ஜே. ஆர். அலெக்ஸ், இசைச் செம்மல் வரதன், இசைவாணி மனோகரி சற்குருநாதன் ஆகியோரும் இருக்கின்றனர். இன்னும் பலரின் இனிய குரல்கள் இவர் நடாத்தும் நிகழ்ச்சிகளின் போது ஒலிக்கும்.

தனித்துவமிக்க கோணேஸின் தனித்துவமான இசை அமைப்புக்கள்:—

இளமையானவை; இனிமையானவை!

## ★ சமையல் குறிப்பு

# வட்டில் அப்பம்

**தேவையான பொருள்கள்:**

முட்டை—10
அளவான தேங்காய்—1
நறுக்கிய கஜு 2மே.கரண்டி
வனிலா— 1 தேக்கரண்டி
பனங்கட்டி அல்லது கித்தூல் கருப்பட்டி 400 கிராம்
ஏலம் தூளாக்கியது ½தே க

**செய்முறை:-**

1. பனங்கட்டி அல்லது கருப்பட்டியை நன்கு சீவித் தூளாக்கி எடுக்கவும்.
2. தேங்காயைத் துருவி இரண்டு 'கப்' அளவுக்குக் கட்டியாகப் பாலை எடுக்கவும்.
3. பாலில் பனங்கட்டித் தூள்களைச் சேர்த்து நன்கு கரைத்து வடித்தெடுக்கவும்.
4. முட்டையை நன்கு நுரை எழும்ப அடிக்கவும்.
5, ஒரு எனமல் பாத்திரத்தில் பால், முட்டைக்கலவை, ஏலம், வனிலா, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கலந்து ஆவியில் அவித்து எடுக்கவும்.
6. பின்னர் கஜுத்தூளை மேலே தூவிவிடவும்.

திருமதி. பி. ராமச்சந்திரன்

## அபிஷேக பலன்கள்

இறைவனுக்கு அபிஷேகம் செய்வதால் கோடி நன்மையுண்டு, ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறு பலன்களை நாம் பெறுகிறோம்.

நல்லெண்ணெய்- சுகம்

மாப்பொடி-கடன்னீக்கம்

மஞ்சள்பொடி-வசீகரம்

நெல்லிமுள்ளி - வியாதி நிவர்த்தி

சர்க்கரை-பகைமைநீக்கம்

பஞ்சாமிர்ஷம்- புஷ்டி

பால்- ஆயுள்விடுத்தி

தயிர்- புத்திரப்பேறு

நெய்- அறிவு

தேன்- இராகவிருத்தி

கருப்பஞ்சாறு - வாக்கு வன்மை

எலுமிச்சஞ்சாறு - சத்துரு காசம்

நாரத்தை-நேர்வழி

இளநீர்- சமசீதோஷ்ணம்

சந்தனம் - இலட்சுமி கடாட்சம்

ஸ்நபனம் - எல்லாவித நன்மை.

—சச்சி—


ராணி (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
இருவர் உள்ளம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30,2-30, 6-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
கலர்

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
தாய்க்குத் தலைமகன்
(புதிய பிரதி)

சாந்தி (யாழ் நகர்
10-30, 2-30, 6-30
ஜெமினி - ஜெய்சங்கர்
அன்புக்கோர் அண்ணன்
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி — கீதா
மோகனப் புன்னகை

வின்சர் (யாழ் நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
கடைசி வாரம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
ஒளிவிளக்கு
(புதிய வண்ணப் பிரதி)

றீகல் (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt
NIGHT CROSSING
Color

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெமினி - சாவித்திரி
கற்புக்கரசி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30,2-30,6-30
சிவாஜி - உஷாநந்தினி
மனிதனும் தெய்வமாகலாம்
[புதிய பிரதி]
(ஈஸ்மன் கலர்)

Rajah இன்றே கடைசி தினம்
Jaffna 10-30, 2-00, 4-45, 7-00
SHOGUN'S NINJA
(color) Last Day! Do Not Miss
2-7-84
ரவிச்சந்திரன் லதா
கௌகார் ஜானகி
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்) புதிய பிரதி

அரிய சந்தர்ப்பம்
★ ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
இரண்டு மாத முழு நேர செய்முறைப்பயிற்சி உட்பட பயிற்சியளிக்கப்படும்.
★ எலக்ரிக்கல் வயறிங் ★ வெல்டிங்
★ எயர் கொண்டிசனிங்
எமது நிறுவனத்தில் உள்ள தொழிற்சாலைகளில் இரண்டு மாத செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.
★ SPOKEN ENGLISH
மீண்டும் ஆரம்பம்: 02-07-84
JAFFNA TECHNICAL INSTITUTE
(றெயில்வே கடவையருகாமை)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பதவி வெற்றிடம்
லொறி, ஜீப் வண்டி ஓட்டக்கூடிய, மூன்று வருட அனுபவமுள்ள சாரதி தேவை. விரும்புவோர் 6-7-84 க்கு முன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.
முகாமை இயக்குனர்,
குளோபல் என்ஜினியரிங் ரெக்னோலொஜி சேர்விஸஸ்,
32, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
குறைந்த செலவில் உங்களுடைய நிலநீர்ப் பிரச்சனையை விஞ்ஞான ரீதியில் தீர்ப்பதற்கும் இயந்திரம் மூலம் இரண்டு நாட்களில் குழாய்க் கிணறு அமைப்பதற்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
குளோபல் என்ஜினியரிங் ரெக்னோலோஜி சேர்விஸஸ் 614


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கிளிநொச்சி வைத்தியசாலைக்கு —

# சுகாதார அமைச்சர் வருகை இறுதி நேரத்தில் ரத்து!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசாங்க வைத்தியசாலையில் அமைக்கப்படவிருக்கும் எக்ஸ்ரே பிரிவுக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று இடம்பெற்றது. இவ் வைபவத்தில் சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தப்பத்து கலந்துகொண்டு அடிக்கல் நாட்டுவதற்காக ஏற்பாடாகியிருந்தது. ஆனால்இறுதி நேரத்தில் அமைச்சரின் வருகை ரத்துச்செய்யப்பட்டது.

இதனையடுத்து சுகாதார சேவை பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம் நேற்றைய வைபவத்தில் மேற்குறிப்பிட்ட 'எக்ஸ்ரே' பிரிவுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இவ்வைபவம் கிளிநொச்சி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் நவரத்தினராசா தலைமையில் இடம்பெற்றது' கிளிநொச்சிக் கச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை பலதுறைகளிலும் முன்னேறிவருகின்றது. அமைச்சர் டாக்டர் அத்தபத்து இந்த வைபவத்தில் கலந்துகொள்ளாவிடினும் அவருக்கு இவ் வைத்தியசாலை விவகாரங்களில் கூடுதல் அக்கறை உண்டு. இந்திய ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் எக்ஸ்ரே பிரிவுக்கான கருவிகள் பொருத்தப் படவுள்ளன'' என்றார்.

வைத்திய நிபுணர் சிவகுமாரன் இப் பிரிவை அமைப்பதில் காட்டும் ஆர்வத்தையும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி 'எக்ஸ்ரே' பிரிவுக்கென அபிவிருத்திசபை நிதியிலிருந்து 2 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இப் பிரிவை அமைக்க மூன்றரை லட்சம் ரூபா செலவாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகுதி ஒன்றரை லட்சம் ரூபாவையும் பொதுமக்களிடமிருந்து பெறவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் அடிக்கல்நாட்டு வைபவத்தில் கிளிநொச்சி வைத்தியசாலை அபிவிருத்திசபை சிரேஷ்ட உபதலைவர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி இவ்வைத்தியசாலையின்தேவைகள் அடங்கிய மகஜர் ஒன்லையும் பணிப்பாளரிடம் கையளித்தார். (கி)

## மரண அறிவித்தல்
## வைத்திலிங்கம் சிவஞானசுந்தரம்

திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திரு. வைத்திலிங்கம் சிவஞானசுந்தரம் காலமானார். அன்னார் சிவபாக்கியம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், ஜெயசுந்தரா, ஜெயலோசனா (M. O. H. முல்லைத்தீவு). ஜெயசீலன் (மேற்கு ஜெர்மனி), ஜெயபாமினி (மேற்கு ஜெர்மனி), ஜெயகௌரி, ஜெயமனோகரியின் அன்புத் தந்தையும், தர்மகுலசிங்கம், சிறீஸ்கந்தராசா (மேற்கு ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸபீத். கோபிகிருஷ்ண ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 01-07-84 ஞாயிற்றுக்கிழமை இன்று பிற்பகல் 3-00 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(636) தகவல் கொடுப்பவர்: திரு. S. தர்மகுலசிங்கம்.

## மரண அறிவித்தல்
## செல்வி மஞ்சுளா

செல்வி மஞ்சுளா காலமானார். கந்தசாமி (R.M.P- கண்டி), அமுதபதி (குஞ்சு) தம்பதிகளின் அருமைப் புதல்வியும், வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி பொறியியல் மாணவியுமான இவர், குகானந்தி (பேராதனை பல் வைத்திய மாணவி) இராதா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), தனுசன் (யாழ். இந்துக்கல்லூரி மாணவர்), தாசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்) ஆகியோரின் சகோதரியும். டாக்டர் பொன்னம்பலம், சரஸ்வதியின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் தனக்கிரியைகளுக்காக கொக்குவில் கிழக்கு கோவில் வீதி இல்லத்திலிருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இந்த அறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும். 628

## மரண அறிவித்தல்
## திருமதி தையற்பிள்ளை தம்பிப்பிள்ளை

தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி தையற்பிள்ளை தம்பிப்பிள்ளை 1984-06-29ம் திகதி காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா சபாரத்தினம் (மலாயன்பென்சனர்) சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினபூபதி, டாக்டர் வாமதேவன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற மகாதேவன், சற்குருநாதன், சத்தியமூர்த்தி, விஸ்வநாதன், காலஞ்சென்ற இரத்தினராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கதிரையாண்டி. தனலட்சுமி(அவுஸ்திரேலியா), தங்கம்மா, மகாலட்சுமி, வள்ளிநாயகி, புஷ்பலட்சுமி, இராஜமனோகரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 1984-07-01ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் தெல்லிப்பழையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்வண்ணம் கேட்கப்படுகின்றார்கள். 635

## இன்றுமுதல்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தினால் நிர்வகிக்கப்படும் வல்லை லயன்ஸ் வைத்தியசாலையில் இன்றுமுதல் நீரழிவுச் சிகிச்சை நிலையம் இலவசமாக இயங்க இருக்கிறது. இந்த சிகிச்சை நிலையத்தை லயன்ஸ் கழகத்தலைவர் திரு. இ. குமாரவேல் திறந்துவைப்பார்.

## யாழ் மத்திய

(13ம் பக்கம்தொடர்ச்சி)

நிலைகளும் விரக்தியையுண்டாக்கியிருக்கும்போது மாணவரையோ ஆசிரியரையோ எழுந்த மானத்தில் குறைகூறுவதை, 75 வயது பூர்த்தி செய்து43 வருட ஆசிரியசேவையின் பின் 15 வருடங்களுக்கு மேல் இளைப்பாறியிருக்கும் நான். ஏற்றுக்கொள்ளவிரும்பவில்லை.

இத்தனை இடருக்கூடாகவும் கல்வித்துறைக்குத் தொண்டு செய்பவரை வாழ்த்துடுவோம் யாழ் மத்திய கல்லூரி மேலும் 150 ஆண்டுகளுக்கு தனது பாரம்பரியத்தை நிலைநாட்ட எல்லாம் வல்ல கலைவாணி அருள்புரிய வேண்டி நிற்கின்றேன்.

யாழ் மத்திய கல்லூரியில் 1928ம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராகவும் இறுதியில் சில ஆண்டுகளாக அதிபராகவும் இருந்த ஏ. ஈ. தம்பர் எனது ஆசிரியராகவிருக்கவில்லை. காலைப் புலவர் மூலம் எனது நண்பராயினர். ஆசிரிய உலகிற்கும் யாழ்மத்திய கல்லூரிக்கும் அவர் புரிந்த தொண்டும் அதனால் அவருக்கேற்பட்ட மதிப்பும் அளப்பரியது. அவருக்கு எனது அஞ்சலி.

## ஈதுல்பிர்த்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்மிடமுள்ள வற்றில் அவர்களுக்கு உதவி, ஈகைத்திருநாளாம் ஈதுல்பித்ர் நன்னாளை அவர்களும் மகிழ்வுடன் கொண்டாட வழி செய்தல் வேண்டும்.

இத்திருநாளைக் கொண்டாடுவதில் தனிப் பெருமையும், மகிழ்ச்சியுமாம்.

## நூற்றுண்டு நிறைவு விழா
# 'இந்துபோட்' பணிகள் ஆரம்பக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்துபோட் இராசரத்தினம் ஞாபகார்த்த பணிக்குழு இப்பெரியாரின் விழாத் தொடர் ஆரம்பக் கூட்டத்தை எதிர்வரும் 4-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் யாழ். முத்துத்தப்பி மகா வித்தியாலயத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். இக்கூட்டத்திற்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னைநாள் அதிபர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் தலைமை தாங்குவார். இக்கூட்டத்தில் திரு, ப. சந்திரசேகரம் யாழ் (பல்கலைக்கழக கல்வித்துறை)முன்னாள்எம்.பி. வி. தர்மலிங்கம், திரு. ஆர். கந்தையா, திரு. ச. பொன்னுத்துரை ஆகியோர் பேசுவர்.

இக்கூட்டத்திற்கு முன்னர் பூசையும் சைவச் சிறுவர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்படும்.

இக்கூட்ட ஏற்பாட்டை திரு. க. விசுவலிங்கம், திரு. நா. சோதிநாதன், திரு. சு. தற்பராந்தன் ஆகியோர் கொண்ட உபசபை ஏற்பாடு செய்கிறது.

## கூட்டு–

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை பிரதிநிதிகள் அடங்குவர்.

திரு. ராஜாராம் தனது ஆரம்ப உரையில், இலங்கைத் தமிழர் பிரச்னையில் சுமூகமான ஒரு தீர்வு ஏற்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளைத் தனித்தனியாக சந்தித்து நேற்று காலையில் பேசினேன். அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து மிகத் தெளிவான நேரக்கங்களைக் கொண்டிருப்பது தெரிய வந்தது.

மகாநாட்டில், இந்திரா - ஜே. ஆர். சந்திப்பில் ஏற்படப்போகும் மாற்றங்கள் குறித்தும் பேசப்பட்டது.

தமிழர் விடுதலை கூட்டணி சார்பில்தமது கருத்தைத் திரு. வி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று அவர் நிகழ்த்திய உரை பிரதிநிதிகள் மத்தியில் வெகுவாகக் கவரப்பட்டது.

## காப்டனும் ஊழியர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியபோது, காப்டன் எஸ். சிவநேசனின் சாதுர்யத்தால், ஊழியர்கள் ஏழுபேரும் மேல் தளத்துக்கு அழைக்கப்பட்டு, உயிர்காக்கும் மூன்று வளையங்களின் உதவியுடன் கடலுக்குள் அத்தனைபேரும் குதித்து அன்றிரவு முழுவதும் அந்தத் 90 அடி ஆழ கடலுக்குள்ளேயே கழித்து, லுனவைக் கரையை அடைந்த அனுபவங்களை நேற்றுப் பகிர்ந்து கொண்டனர்.

அரைகுறையாக மூழ்கிக் கொண்டிருந்த கப்பல் இவர்கள் குதித்த அடுத்த நிமிடமே முற்றாக மூழ்கியதை நேரில் கண்டதை என்னிடம் காப்டன் சிவனேசன் கூறிய போது, அவர் குரல் கரகரத்தது.

பல லட்சக்கணக்கென்பதை விட கோடிக்கு மேலான ரூபாய் பெறுமதியான கப்பலில், நமது கூ. மொ. விற்பனவு ஸ்தாபனததுக்கு 580 தொன் பம்பாய் வெங்காயம் வந்தது.

சிங்கப்பூர் கப்பலான இந்த 'வெலா-6'ன் உள்ளூர் பிரதிநிதியான காப்டன் மோகனதாஸ் மயிரிழையில் உயிர்தப்பி மறுபிறவி எடுத்து வந்துள்ள இந்த எட்டுப் பேரையும் அவர்கள் வீடுகளில் சந்தித்து அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஏற்பாடு செய்தார்.

கொழும்புத் துறைமுகத்தில், பம்பாய் வெங்காயத்தை இறக்கி விட்டு, காங்கேசன் துறைமுகத்துக்கு லங்கா சீமெந்து நிறுவனத்தின் சீமெந்தை ஏற்றி செல்ல இருந்தது இந்தக் கப்பல். லங்காசீமெந்துநிறுவனத்தின் துறைமுக காப்டனாக மோகனதாஸ் கடமையாற்றுகிறார்.

காப்டன் எஸ். சிவனேசனுடன் கே. தர்மலிங்கம், ஜி. சிறிசுந்தர், ஜி. விஜயசுந்தரம், வி. நேரு, ஆர். ஜே. பிரான்ஸிஸ், ஈ. ஜெயரத்தினம், எஸ். சிவாஜி ஆகியோரே இந்தக் கப்பலில் மூழ்கியபோது தப்பியவர்களாவர்.

பாஸ்போர்ட் உட்பட தேவையான தஜ்தாவேஜுகளையெல்லாம் இழந்துவிட்டதே இவர்களது பெரும் கவலை.

## கருத்தரங்கு

(கல்வியங்காடு

யாழ்ப்பாணப், காளிகோவிலடி சனசமூக நிலைய மண்டபத்தில், இன்று இரவு நிலையத்தின் மாதாந்தக் கருத்தரங்கு திரு. க. செல்வராசா தலைமையில் நடக்கவுள்ளது.

## இறுதி அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மைச்சர் திரு. பி. வி நரசிம்மராவ் ஆகியோர் உட்பட இந்திய அரசின் உயர்அதிகாரிகள் வரவேற்றார்கள். வரவேற்பில் இலங்கையின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியும் கலந்து கொண்டார்.

புதுடில்லி விமானநிலையத்திலிருந்து இலங்கை ஜனாதிபதி தம்பதியர் மோட்டார் பவனியாக ராஷ்டிரபதிபவனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ராஷ்டிரபதி பவனில் இலங்கை ஜனாதிபதி இந்திய ஜனாதிபதியுடன் அரைமணிநேரம் சம்பிரதாயபூர்வ பேச்சுக்களை நடத்தினார். மாலை திரு. ஜெயவர்த்தன ராஜ்கோர்ட் பவனிலுள்ள மகாத்மாகாந்தி நினைவாலயத்துக்குச் சென்று மலர் வளையம் சாத்தினார் நேற்றிரவு ராஷ்டிரபதி பவனில் இந்திய ஜனாதிபதி அளித்த விருந்துபசாரத்திலும் இலங்கை ஜனாதிபதி தம்பதியினர் கலந்துகொண்டார்கள்.

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன இன்றும் நாளையும் இந்தியப் பிரதமர் திருமதி இத்திராகாந்தியுடன் இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளார். இவர்களது பேச்சில் முக்கியமாக இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றினை விரைவில் காணுமாறு இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் வற்புறுத்துவார் என்றும், இதேசமயம் தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியா எவ்வித உதவிகளையும் வழங்கக்கூடாதென்று இலங்கை ஜனாதிபதி இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைப்பார் என்றும் நம்பகமாகத் தெரிய வருகிறது.

இதேவேளை இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை ஜனாதிபதியின் விஜயம் இலங்கைத் தமிழர் பிரச்னையில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தலாம்'' என்று தெரிவித்துள்ளார். ஆயினும் இலங்கைத் தமிழர் பிரச்னையின் தீர்வுக்கு புதிய யோசனைகள் எதனையும் இலங்கை ஜனாதிபதி கொண்டு வந்துள்ளாரா? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த வெளியுறவு அமைச்சர், அதுபற்றி எதுவும் கூறமுடியாது என்று குறிப்பிட்டார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu. Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org